www.tamilarangam.net

# முன்னணி

இதழ் - 02 (சித்திரை - ஆனி 2011)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## பாரிய இன அழிப்பின் இருவருட நினைவுகளும்..! தொடர்கின்ற துயரங்களும்..!!

எமது மக்கள் பாரிய மனித அழிவைச் சந்தித்து இரண்டு வருடங்களாகிறது. இது இந்த நூற்றாண்டில் நடந்த பாரிய மனித அவலமாகும். இலங்கைப் பேரினவாத அரசு எம்மக்கள் மீதான ஓர் இனப் படுகொலையை நடத்தியமை என்பதில் சிறார்கள், பெண்கள், வயோதிபர்கள் என அனைவர் மீதும் ஈவிரக்கமற்று நடாத்தப்பட்ட வன்முறைகள் யாவும்.., இன்றும் ரணமாகி பாரிய வலிகளையும் - வடுக்களையும் எம் சமுதாயத்தில் ஏற்படுத்திய வண்ணமுள்ளது.

எமது மக்கள் மீது நடாத்தப்பட்ட படுகொலைகளுக்கும் - ஆயுத வன்முறைக்கும் பொறுப்பேற்க வேண்டிய மஹிந்த - பாசிச அரசு, யுத்தத்தின் பின்னான காலத்தில் தனது அனைத்து அதிகார இயந்திரங்களையும் பாவித்து, திறந்த வெளிச் சிறைச்சாலையாய் மாற்றப்பட்ட எங்கள் நிலத்தில் எமது மக்களை சொல்லெணா துன்ப துயர அடக்குமுறைக்குள் தொடர்ந்தும் இறுக்கப்பட்டுள்ளனர்.

அபிவிருத்தி, யுத்தத்தின் பின்னான மீள்கட்டமைப்பு என்ற பெயரில் நடாத்தப்படும் செயற் திட்டங்கள் எதுவும், எமது மக்களின் உண்மை வாழ்க்கைக்கான மேம்பாட்டையோ, சமுதாய ரீதியிலான வலுவாதாரத்தையோ உருவாக்கவில்லை. அபிவிருத்தி என்ற பெயரில் இராணுவத்தினராலும், இந்தியா - சீனா ஈறாக சர்வதேச மூலதன மேலாதிக்க சக்திகளாலும், இவர்களுக்கு துணை போகும் மஹிந்த குடும்பம் மற்றும் உள்நாட்டு அரச ஒட்டுண்ணிகளாலும் எமது மக்களின் அனைத்து வளங்களும் கொள்ளையடிக்கப்படுகிறது.

எம் தேசத்தில் விடுதலையின் பெயரிலான புலிப் போராட்டத்தையும் அதன் தலைமையையும் முள்ளிவாய்க்காலில் வைத்து அழித்த நிலையில், பத்தாயிரத்துக்கும் அதிகமான புலிகள், மஹிந்த பாசிச அரசின் சிறைகளில் சித்திரவதைப்படுத்தப்படுகிறார்கள். சிறையில் இருந்து மீண்ட முன்னாள் புலிகள் பலர் தமது குடும்பங்களுடன் பசித்த வயிற்றுடன் அல்லற்படுகின்றனர். குறிப்பாக பெண் போராளிகளும், ஆண் துணையிழந்த பெண்களும் எமது சமூகத்தின் எல்லா வகைப் பிற்போக்குத்தனமான கலாச்சார ஒடுக்குமுறைகளுக்குள் நெருக்கப்படுகின்றனர். புலிகளின் அழிவரசியலுக்கு கோடிக்கணக்கான பணத்தைக் கொட்டிக் கொடுத்த புலம்பெயர் மக்களின் பணம், இன்று இவர்களின் வறுமைக்கும் வாழ்வுக்கும் உதவவில்லை.

இன்று புலிகளின் தலைமை அழிக்கப்பட்டுள்ள நிலையில், புலத்தில் அவர்களின் பினாமிகள் பல்லாயிரம் கோடிரூபாய் பணத்தில், மேற்கு ஏகாதிபத்திய நாடுகளின் துணையுடன் தொடர்ந்தும் அழிவு அரசியலை முன்னெடுத்தபடி, தமிழீழக் கனவில் மிதக்கின்றனர். மேற்கு ஏகாதிபத்திய நாடுகள் இவர்களைப் பாவித்து, மீண்டும் மீண்டும் எம் தேசத்தை தன் பொருளாதார - அரசியல் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கவே முயல்கின்றன. இதன் அடிப்படையில் தான் ஐரோப்பிய ஒன்றியம்முதல் கனடாவரை இலங்கை மஹிந்த பாசிச அரசின் மீது கண்டனங்களையும் - அறிக்கைகளையும் விடுகின்றனர். நோர்வே அரசு போர்க்கால சாட்சிகளை இலங்கையில் இருந்து கடத்தி வருவதும் இதற்குள் தான் நடந்தேறுகிறது.

இப்படியான எமது தேசத்தின் இருண்ட சூழ்நிலையில், எம்மை ஒடுக்கும் இலங்கை இனவாத பாசிச அரசு, இனவாதத்தை முன்தள்ளி நரித்தனத்துடன் எமது சகோதர இனமான சிங்கள மக்களையும், முஸ்லீம் மக்களையும், மலையகத் தமிழர்களையும் பாரிய பொருளாதார வறுமைக்குள் தள்ளி சமுதாயச் சீரழிவுகளை உருவாக்கிய வண்ணமுள்ளது. இதனால் குறிப்பாக அனைத்து உழைக்கும் வர்க்க மக்களின் வாழ்க்கையும் வரலாறு காணாத வறுமைக்குள் தள்ளப்பட்டுள்ளது.

இந்த நிலையில், இலங்கையின் அனைத்து ஒடுக்கப்பட்ட மக்களின் நலனுக்கான போராட்டத்துடனும் இணைத்து முன்னெடுக்கப்படுவதன் மூலமே எமது தேச விடுதலையை வென்றெடுக்க முடியும். இதனைத்தான் நமது பல பத்து வருட போராட்ட வரலாறு கற்றுத் தந்துள்ளது.

அதேபோல ஆயுதத்தையும், தமிழினவாதத்தையும், ஏகாதிபத்திய நல்லுறவையுமே அடித்தளமாகக் கொண்டு மக்களில் தங்கி இல்லாமல் நடத்தும் போராட்டம், அழிவுக்கே வழிவகுக்கும் என்பதையும், புலிகளின் போராட்ட வரலாறு எமக்கு உணர்த்தியுள்ளது.

இந்தவகையில்:

பேரினவாத அரசின் இன அழிப்பு யுத்தத்தில் கொல்லப்பட்ட அனைத்துப் போராளிகளுக்கும், மக்களுக்கும் எமது அஞ்சலியை தெரிவிக்கின்றோம்..!

தமிழினவாதத்தைக் கைவிட்டு சர்வதேசியத்தை முன்னிறுத்தி எம் தேசவிடுதலைக்காக போராட அனைவருக்கும் அறைகூவல் விடுக்கின்றோம்..!

அனைத்து ஏகாதிபத்திய சக்திகளையும் அவர்களின் அடிவருடிகளையும் தேச விடுதலைப் போராட்டக் களத்திலிருந்து அகற்றுவோம்..!

மக்கள் சார்ந்த அமைப்பை உருவாக்கி போராட்டத்தை முன்னெடுக்க அனைத்து நட்பு சக்திகளையும் ஓர் அணியில் திரள அழைப்பு விடுக்கின்றோம்..!

புதிய ஜனநாயக மக்கள் முன்னணி - (பிரசுரம் 17.05.2011)

www.ndpfront.com - www.tamilarangam.net- www.ndpfront.net - www.tamilcircle.net - http:kalaiy.blogspot.com


**MUNNANI / முன்னணி (இரு மாத இதழ்)**

**இதழ் - 02 (சித்திரை - ஆனி 2011)**

Publishers NDPF Org N° / புதிய ஜனநாயக மக்கள் முன்னணி இல. : 996 514 749
Intrenational standard Serial N° / உலக பதிவு இல. : (ISSN) 1892 - 6347
Printers e-mail / அச்சக ஈமெயில் : info@setlinedata.com

**முன்னணி இணையங்கள்**
www.ndpfront.com
www.tamilarangam.net
www.ndpfront.net
www.tamilcircle.net
http:kalaiy.blogspot.com

**முகவரி**
**MUNNANI**
ESC 3 : APP 131
5 Rue Robert Lavergne
92600 Asnières Sur Seine
France

**முன்னணி ஈமெயில்**
munnanee@gmail.com

**சந்தா 6 இதழ்**
12 ஈரோ - 12 டொலர் - 120 குரோன்
அன்பளிப்பு
1 ஈரோ - 1 டொலர் - 10 குரோன

International Bank Account Number
சர்வதேச வங்கி கணக்கு இல.
IBAN NO4965660545608


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

# இராணுவ ஆட்சிக்கான முன் தயாரிப்புகள்..!

## 1.உங்களை ஒருபோதும் காட்டிக்கொடுக்க மாட்டோம்...



"உங்களை ஒருபோதும் காட்டிக்கொடுக்க மாட்டோம்" என்ற மகிந்த ராஜபக்சாவின் குற்றவாக்கு மூலத்தில் எதற்காக, எதைக் காட்டிக் கொடுக்கமாட்டோம் என்கின்றனர்? யுத்தக் குற்றம் எதையும் நாங்கள் செய்யவில்லை என்று கூறிவருகின்ற அரசு, மறுபுறம் உங்களைக் காட்டிக்கொடுக்க மாட்டோம் என்கின்றது. எதை? குற்றம் இழைக்கவில்லை என்றால், காட்டிக்கொடுக்க எதுவுமில்லை. காட்டிக் கொடுக்க ஏதோ இருக்கின்றது என்றால், அங்கு குற்றம் இழைக்கப்பட்டிருக்கின்றது.
'காட்டிக் கொடுக்கமாட்டோம்' என்று கூறி, குற்றம் நடந்ததாக சுயவாக்கு மூலம் தருகின்றது அரசு. ஆக அரசு குற்றமிழைத்ததை ஒத்துக்கொள்ளும் அதேநேரம், யாரையும் காட்டிக் கொடுக்கமாட்டோம் என்கின்றனர்? சரி யாரை? இங்கு உங்களை என்று குற்றஞ்சாட்டி, அது நாங்களல்ல என்று தமது குற்றத்தை அப்பாவி இராணுவ வீரன் மீது சுமத்துகின்றது.
இப்படி தங்களின் குற்றத்தை மூடிமறைக்க, பேரினவாத தேசிய வெறியை முன்னிறுத்தி குற்றத்தை மற்றவர்கள் மேல் அபாண்டமாக சுமத்துகின்றது அரசு. ஆக இங்கு காட்டிக் கொடுக்க ஏதோ இருக்கின்றது. யாரோ போர்க்குற்றத்தை இழைத்துள்ளனர் என்பதை, ஜனாதிபதி மகிந்தாவின் இந்தக் கூற்றும் உறுதி செய்கின்றது. இப்படியிருக்க நாங்கள் எந்தக் குற்றமும் இழைக்கவில்லை என்ற பாசிச கூச்சல்களுக்கு இடையில் தான், 'உங்களை ஒருபோதும் காட்டிக்கொடுக்க மாட்டோம்' என்கின்றனர்.
இப்படி உலகறிய மகிந்த சாட்சியமளிக்கின்றார். நாங்கள் குற்றமிழைத்து இருக்கின்றோம், ஆனால் அதைக் காட்டிக்கொடுக்கமாட்டோம் என்கின்றார். இப்படி ஜனாதிபதியே குற்ற வாக்குமூலம் கொடுக்கின்றார். இதுவே ஒரு போர்க்குற்ற சாட்சியம் தான். குற்றத்தை மூடிமறைப்பதும், அதற்கு பாதுகாப்பு வழங்குவதும் கூட இங்கு மற்றொரு போர்க்குற்றமாகும். இங்கு போர்க் குற்றமிழைத்தது யார்? மகிந்தவும், மகிந்த குடும்பமும் தான். அவர்களுக்கு துதிபாடும் கூட்டமும் தான் குற்றமிழைத்தது. ஆக மகிந்த குடும்பம் தங்களைப் பாதுகாக்க, சிங்கள மக்களையும், இவர்களின் கட்டளையை ஏற்று கூலிக்கு யுத்தம் செய்த சிங்கள படையையும் காட்டிக் கொடுக்கமாட்டோம் என்று கூறுகின்றனர். இங்கு மகிந்த குடும்பமல்லாத மற்றொரு ஆட்சியில், உங்களை காட்டிக்கொடுக்க' என எதுவும் இருப்பதில்லை என்பது மற்றொரு உண்மையல்லவா.
தங்கள் இனவழிப்பு குற்றங்களையும், அந்த இனத்தை கொள்ளையிட்டு குவித்த சொத்தையும் பாதுகாக்க, மக்களையும் படைவீரர்களையும் குற்றமிழைத்ததாக இவர்கள் உலகறிய கூறுகின்றனர். இப்படி இவர்கள் செய்யாத குற்றத்தை படைவீரர்கள் செய்ததாக குற்றம் சாட்டுகின்றனர். இப்படி அடிக்கடி நான் "உங்களைக் காட்டிக் கொடுக்கமாட்டேன்" என்று கூறுகின்றார், இலங்கை ஜனாதிபதி. சிங்கள மக்களோ அல்லது அரசின் கட்டளையை ஏற்று யுத்தத்தில் சண்டை செய்தவர்களும் போர்க் குற்றத்தில் ஈடுபடவில்லை. ஆக மிஞ்சினால் உங்கள் இராணுவக் கட்டளையை ஏற்று, அதை அமுல்படுத்தியவர்கள். ஆக அவர்களைக் காட்டிக்கொடுக்க இங்கு எதுவுமில்லை. 'சிங்களவன் என்றால் துரோகி' என்று குறுந்தமிழ்த்தேசியம் கூறுவது போலத்தான், மகிந்தாவும் சிங்கள மக்களையும் அவர்கள் புதல்வர்களையும் பார்த்து கூறுகின்றார், 'உங்களை ஒருபோதும் காட்டிக்கொடுக்க மாட்டோம்' என்று. ஆக தமிழ் சிங்கள குறுந்தேசிய அரசியல்வாதிகள் எந்த வேறுபாடுமின்றி, சிங்கள அப்பாவி மக்களை துரோகியாகவும், குற்றவாளியாகவும் காட்டுகின்றனர். இப்படி மக்களை பணயம் வைத்து நடத்தும் பித்தலாட்ட தேசிய அரசியல் மறுபக்கத்தில் தங்கள் குற்றங்களை மூடிமறைக்க, மக்களை குற்றமிழைத்ததாக உலகறியக் கூறுகின்றனர்.
'வெளிநாட்டினர் தலையீட்டுக்கு ஒருபோதும் இடமில்லை' என்று தேசத்தின் இறைமை பற்றி கூச்சல் எழுப்பியபடி தான், மக்களை காட்டிக் கொடுக்கமாட்டேன் என்கின்றனர். இப்படி இதைக் கூறிக்கொண்டு, தங்களை பாதுகாக்க இட்டுகட்டி நடத்துகின்ற பேரினவாதக் காட்டிக்கொடுப்புத்தான் இது. தாங்கள் செய்த குற்றத்தை மூடிமறைக்க, அதை சிங்கள மக்கள் மீதாகவும் அவர்களின் குழந்தைகளுக்காகவும் செய்ததாக கூறி வழங்கும் குற்ற வாக்குமூலம், அப்பாவிகள் மேலான இட்டுக்கட்டிய காட்டிக் கொடுப்பாகும். இதற்கு எதிராக தமிழ் சிங்கள மக்கள் ஒன்றிணைந்து, இந்தக் குற்றக் கும்பலை தனிமைப்படுத்தி போராடவேண்டிய தருணமிது. இந்த வகையில் தமிழ் மக்கள் சிங்கள மக்கள் முன் இந்த உண்மையை விளக்கி போராடுவதன் மூலம் தான், உண்மையான குற்றவாளிகளை சிங்கள மக்கள் முன் தனிமைப்படுத்தி அவர்களைத் தண்டிக்க முடியும்.

## 2.யுத்தத்தின் பின் பௌத்தமூலம் தமிழினத்தை அழிக்கின்றது...

யுத்தத்தின் பெயரில் ஓர் இனத்தைக் கொன்று குவித்தவர்கள், யுத்தத்தின் பின் அதை நிறுத்திவிடவில்லை. ஆனால் அதன் வடிவத்தை மட்டும் மாற்றியுள்ளனர். 1940கள் முதல் எல்லையோரத்தில் திட்டமிட்டு நடாத்திவந்த இன அழிப்புக் குடியேற்றம், யுத்தத்தின் பின் தமிழர் செறிந்து வாழும் பகுதிகளுக்குள் தொடங்கியுள்ளது. அந்த வகையில் பேரினவாதம் தன் இன அழிப்புக்கு, இன்று பௌத்த மதத்தை முதன்மைப்படுத்தி முன்நிறுத்துகின்றது. அரசு தன்னை மதத்தின் ஊடாக அடையாளப்படுத்தி, பேரினவாதத்தை முன்தள்ளுகின்றது. ஆயுத மூலமான இன அழிப்பில் புலிகள் மீதான படைநடவடிக்கை மூலம் அழிப்புகள் முடிந்த நிலையில், பௌத்த மதத்தைக் கொண்டும் அதனைச பசயகனறது. யுததததன பின்னான இன அழிப்பில் இன்று மதம் பாவிக்கப்படுகின்றது.

தமிழ் பகுதியை ஆக்கிரமித்து நிற்கும் சிங்கள இராணுவத்தின் வழிபாடு சார்ந்து நிர்மாணமாகும் புத்தர் சிலைகள், திட்டமிட்ட வகையில் முக்கிய சந்திகளில் தொடர்ச்சியாக வைக்கப்படுகின்றது. இப்படி இராணுவ மூலம், அந்த மக்கள் வழி படாத ஒரு மதத்தை முன்நிறுத்த நிறுவப்படும் பௌத்த சின்னங்கள், திட்டமிட்ட ஓர் இன அழிப்பு வன்முறையாக திணிக்கப்படுகின்றது.

வவுனியா சந்தியில் நிறுவப்பட்ட புத்தர் சிலை 1980இன் முன் இருந்தது கிடையாது. 1981இல் திடீரென வைக்கப்பட்ட குட்டியான புத்தர் சிலை, இன்று பேரினவாதத்தின் பலத்துக்கு ஏற்ப அதன் உயரமும் பருமனும் அதிகரித்துச் செல்லுகின்றது. இனவாதத்தின் வளர்ச்சிக்கும் பலத்துக்கும் ஏற்ப அதுவும் கொழுக்கின்றது.

அமைதியும் சமாதானமும் என நிலவிய காலத்தில், திருகோணமலை பஸ் நிலையத்தில் நிறுவிய திடீர் புத்தர் சிலைகளை தொடர்ச்சியாக திட்டமிட்டு நிறுவிய அரசு, யுத்தத்தின் பின் இராணுவம் மூலம் பெருமெடுப்பில் நிறுவி வருகின்றது. தொடர்ந்து இனக் குரோதமும், இன அழிப்பு என்பதும் திட்டமிட்டு விதைக்கப்படுகின்றது.

1948 முதல் பேரினவாத அரசு காலத்துக்கு காலம், சூழலுக்கு சூழல் இன ஒடுக்குமுறை வடிவத்தை மாற்றி வந்துள்ளது. இந்த இன ஒடுக்குமுறை தான், இன்று இன அழிப்பாக மாறியுள்ளது. இந்த இன ஒடுக்குமுறை தான், இலங்கையில் இன யுத்தத்தை உருவாக்கியது. அதுதான் புலியையும் உருவாக்கியது. அரசு தன்னை மூடிமறைத்தபடி புலிப் பயங்கரவாதம் தான் நாட்டை பிளவுபடுத்துவதாக கூறியது. புலியின் யுத்தம் தான் நாட்டின் சமாதானத்துக்கும் அமைதிக்கும் எதிராக இருப்பதாக கூறியது. இப்படிக் கூறித்தான், தமிழின அழிப்பாக யுத்தத்தை அரசு திட்டமிட்டு நடத்தியது. சமாதானத்தையும், அமைதியையும், தமிழ் மக்களுக்கான தீர்வையும் யுத்தத்தின் பின் வழங்குவதாக அரசு கூறி வந்த வாக்குறுதியை, யுத்தத்தின் பின் அதை தன் இனவாத வரலாற்றுத் தொடர்ச்சிக்குள் புதைத்துவிட்டு, தமிழர்மீதான இன அழிப்பையே அது தொடருகின்றது. காலத்துக்குக் காலம் பேச்சுவார்த்தைகள் எனவும் தீர்வைக் காணுவதற்கான குழுக்கள் முதல் ஒப்பந்தங்கள் வரை, அனைத்தும் பேரினவாத நிகழ்ச்சி நிரலுக்கு ஏற்ப, இன ஒடுக்குமுறையின் தொடர்ச்சியாகவே அதை பாவிக்கின்றது. இந்தப் பிரச்சினையைத் தீர்க்க மறுப்பதுதான், அரசின் பேரினவாதக் கொள்கையும் நடைமுறையுமாகும்.

இதைப் பாராளுமன்ற வழிகளில் தீர்க்க முற்பட்டவர்களும், ஆயுத மூலம் தீர்வுகாண முற்பட்டவர்களும், தோற்றுப் போனதே எம்மைச் சுற்றிய வரலாறாகின்றது. அதே இனவாத எல்லைக்குள் நின்று இதை நாம் அணுகியதால் தான், இது நிகழ்ந்தது. குறுகிய தமிழ் இனவாதத்தை கொண்டு பேரினவாதம் தன்னை பலப்படுத்தியது. இதைக் கொண்டு தான், இனவழிப்பாக அதை மாற்றியது.

இனவாத அரசை தனிமைப்படுத்தும் அரசியல் வழி முறையை முன்னெடுக்காத குறுந்தேசிய தமிழ் இனவாதம், பேரினவாத சிங்கள அரசுடன் தான் பேரம் பேசியது. சிங்கள மக்களுடன் பேசத்தவறியது என்பது, அதை தொடர்ந்து அரசியல் ரீதியாக நிராகரிப்பது என்பது, தொடர்ந்தும் பேரினவாதத்தை பலப்படுத்துகின்றது. அரசு சிங்கள மக்களின் அறியாமையை தனது இனவாதத்துக்கு ஆதரவுக் கருத்தாக மாற்றிக்கொண்டு, தொடர்ந்து இன அழிப்பை நடத்துகின்றது. இன்று பௌத்தத்தைக் கொண்டு தமிழ் இன அழிப்பை முடுக்கிவிட்டுள்ளநிலையில் பேரம் பேசும் பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காண முடியாது. இந்தியா முதல் அமெரிக்கா வரை சென்று முறையிடுவதன் மூலம், இதை தீர்க்கவும் முடியாது. இதுதான் எம்மைச் சுற்றிய 60 வருட வரலாறு. இப்படி இருக்க, தொடர்ந்து பேரம் பேசுவதையும், இந்தியா முதல் அமெரிக்கா வரை வழிகாட்டி தமிழினத்தை காவு கொடுப்பதும் தான் தமிழ் குறுந்தேசிய அரசியலாக தொடருகின்றது.

இதற்கு மாறாக இதை சிங்கள மக்களிடம் எடுத்துச் சென்று அவர்களின் மனநிலையில் கருத்தியல் மாற்றீடு செய்வதன் மூலந்தான் இப்படித் தொடர்கின்ற இன அழிப்பை தடுத்து நிறுத்த முடியும். இதற்கான முதற்படியை நாம் எடுத்து வைக்க, சிங்கள மக்களிடம் எம் பிரச்சினையை கொண்டு செல்ல வேண்டும்.



www.tamilarangam.net

இன ஒடுக்குமுறை முதல் இன அழிப்பு வரை சிங்கள மக்கள் செய்யவில்லை, பேரினவாத அரசு தான் செய்தது - செய்கின்றது. சிங்கள மக்களுடன் சேர்ந்து, அரசுக்கு எதிராக போராடுவதன் மூலந்தான், நாம் எம்மீதான இன ஒடுக்குமுறையை தடுத்து நிறுத்த முடியும்.

இதைவிட வேறு எந்த மார்க்கமும், மாற்று வழிகளும் கிடையாது என்பதையே எமது 60 வருட வரலாறு எடுத்துக் காட்டுகின்றது. எங்களின் இந்த 60 வருட வழிமுறைகள், இன அழிவையே ஏற்படுத்தியிருக்கின்றது. தொடரும் இன அழிப்பு, கடந்தகால எமது அரசியல் வழிமுறை ஊடாகத்தான் பலம்பெற்று வந்திருக்கின்றது. அது எம்மை அநாதையாக்கியிருக்கின்றது. இதைப் புரிந்து கொண்டு, எம்மை நாம் விமர்சனமும் சுயவிமர்சனமும் செய்யாவிட்டால், தமிழினம் இலங்கையில் தன் அடையாளத்தை இழந்து அழிந்து போவது என்பது எம் வரலாறாக எஞ்சும். அதற்கு நாங்கள் காரணமாக இருப்போம்.

## 3.மாணவர் – ஆசிரியருக்கான கட்டாய இராணுவப் பயிற்சி இராணுவ ஆட்சிக்கான முன் தயாரிப்பாகும்...

மகிந்தா குடும்பம் வடக்குக் கிழக்கில் திணித்துள்ள இராணுவ ஆட்சியை, இலங்கை முழுக்க நடைமுறையாக்கும் படிக்கல் தான் பல்கலைக்கழக மாணவர்களுக்கான கட்டாய இராணுவப் பயிற்சியாகும். வடக்கு கிழக்கு உற்பத்திப் பொருட்களை தன் இராணுவ ஆட்சி மூலம் மலிவு விலையில் வாங்கி, அதை மலிவாக சிங்கள மக்களுக்கு விற்றதன் மூலம், முதலில் இலங்கையில் இராணுவ ஆட்சியின் அவசியத்தை புரியவைக்க முனைந்த இந்த பேரினவாத அரசுதான், இன்று கட்டாய இராணுவப் பயிற்சியை மாணவர்களுக்கு திணித்த அரசு, அடுத்து அதை ஆசிரியர்களுக்கு திணிக்கவுள்ளது. மகிந்த முன்தள்ளும் பாசிச சிந்தனையின் மகத்துவம் இதுதான்.

நாட்டை இனி மகிந்த குடும்பம் தான் பரம்பரை பரம்பரையாக ஆளவேண்டும். இதுதான் மகிந்த குடும்பத்தின் சிந்தனையாகும். மன்னர்கள் போல் தாமும் பரம்பரை பரம்பரையாக ஆட்சி அதிகாரத்தில் வாழ வேண்டும், இதனால் மன்னர்கள் உயிர்ப்பிக்கப்படுகின்றனர். வரலாற்றுப் புரட்டுகள் திணிக்கப்படுகின்றது. மன்னர்களை பேரினவாதத்தின் அடையாளமாகக் காட்டி, தங்கள் பேரினவாத பாசிச ஆட்சியை அதன் தொடர்ச்சியாக காட்டி அதைத் திணிக்க முனைகின்றனர்.

தங்கள் குடும்ப ஆட்சியை நிலைநிறுத்த பாராளுமன்ற ஜனநாயகம் முதல் இராணுவ ஆட்சியை நிறுவுதல் வரையான, அனைத்து வகை பாசிச மயமாக்கலையும் படிப்படியாக இன்று திணித்து வருகின்றனர். தங்கள் ஆட்சி அதிகாரத்தை தக்கவைக்கும் தெரிவுகளை அடிப்படையாக கொண்டு தான், மகிந்தா குடும்ப அரசு தன்னைச் சுற்றி அனைத்துவிதமான பாசிசமயமாக்கலை செய்கின்றது.

பல்கலைக்கழக மாணவர்களுக்கு அடுத்து ஆசிரியர்களுக்கு வழங்குகின்ற கட்டாய இராணுவப் பயிற்சி மூலம், மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் இராணுவத்துக்குரிய அடிமைப் புத்தியையும், கூலிப்படைக்குரிய குணாம்சத்தையும் வலுக்கட்டாயமாக திணிக்க முனைகின்றது. இது இந்தப் பயிற்சியின் அடிப்படையான உள்ளடக்கம். இதன் மூலம் தன் குடும்ப அதிகாரத்தை தொடர்ந்து தக்கவைக்கும் கனவுதான், மகிந்த சிந்தனையிலான இந்த இராணுவப் பயிற்சியாகின்றது.

தனது இந்த இராணுவத்தைக் கொண்டு ஓர் இனத்தையும் அதன் வாழ்வாதாரங்களையும் அழித்த மகிந்தா அரசு, அதன் மீள் குடியேற்றம் மற்றும் மீள் கட்டுமானத்துக்கு எதையும் முன்னெடுக்காது அதன் மேல் தன் வக்கற்ற இராணுவ ஆட்சியை இன்று நிறுவியுள்ளது. யுத்தத்தின் கொடூரத்தால் வாழ்விழந்து வாழ வழியற்றுப் போன மக்கள் மேல், இராணுவ கண்காணிப்புக் கொண்ட இராணுவ ஆட்சியை திணித்து, அவர்கள் மூச்சுக்கூட விட முடியாத வண்ணம் சிவில் சமூக செயற்பாட்டை முடக்கி வருகின்றது. இன்று இதைத்தான் இலங்கை முழுக்க திணிக்க முனையும் மகிந்தா குடும்பம், பல்கலைக் கழகத்தில் அதை முதலில் திணிக்க முனைகின்றது. மாணவர்களின் சுதந்திரமான சிந்தனை முதல் அதன் செயற்பாடுகளை முடக்குவதுதான், மகிந்த சிந்தனையின் முதல் இலக்காகின்றது. வடக்குக் கிழக்கில் இது ஏற்கனவே அமுலில் உள்ளது. இந்த வடக்கு கிழக்கு மக்கள் மேலான இராணுவக் கண்காணிப்புக் கொண்ட சிவில் கட்டமைப்பானது:

- தமிழ் பகுதியை சிங்கள மயமாக்கும் வண்ணம், திட்டமிட்ட சதிகளை அடிப்படையாகக் கொண்டு அனைத்தையும் தன் பலத்தால் மாற்றி அமைக்கின்றது.
- வடக்குக்கிழக்கில் சுதந்திரமான எந்தச் செயற்பாட்டையும் முடக்கி, பண்பாட்டு கலாச்சார பொருளாதார அடிமைகளைக் கொண்ட அடிமை சமூகத்தை உருவாக்குகின்றது
- மகிந்தா குடும்ப சர்வாதிகாரத்தை இலங்கை முழுக்க திணிக்கும் வண்ணம், தன் பாசிச சிந்தனைக்கு ஏற்ற பரீட்சார்த்தமான பரிசோதனைக் கூடமாக வடக்கு கிழக்கை மகிந்தா குடும்பம் மாற்றியுள்ளது.

இந்த வகையில் இராணுவத்தையும், தன் அரசில் உள்ள தமிழ் கூலிக்குழு தலைவர்களையும், சிவில் அதிகாரிகளையும் ஒருங்கிணைத்த இராணுவ ஆட்சியைத்தான் மகிந்த சிந்தனை வடக்கு கிழக்கில் முன்னெடுக்கின்றது. இது மேலிருந்து கீழாக எல்லா மட்டத்திலும் அமுல் செய்யப்படுகின்றது. வடக்கின் இராணுவத் தளபதி, அரச அதிபர், டக்ளஸ் இன்றி சுயாதீனமான நிகழ்வுகள் எதுவும் இன்று நடக்க முடியாது என்ற அளவுக்கு கண்காணிப்புக் கொண்ட பாசிசமயமாக்கல் எங்கும் நடைமுறையில் உள்ளது. சாதாரண திருமணங்கள் முதல் மரண வீடுகளில் கூட இராணுவம் அழையா விருந்தாளியாக அல்லது கௌரவ விருந்தாளியாக அழைக்கப்படுகின்றனர். அல்லது தாமாக பிரசன்னமாகின்றனர். இப்படி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

அழைக்காவிட்டால் கறுப்பு பட்டியலுக்குரியவராக அடையாளம் காணப்படும் அவலமும், அச்சமும், வில்லங்கமாக அவர்களை அழைக்கும் கட்டாய பண்பாடாக மாற்றப்படுகின்றது. இராணுவ மயமாக்கலின் பொது விளைவுகள் இவை.

இன்று பல்கலைக்கழக மாணவருக்கு இராணுவப் பயிற்சி என்பது, இலங்கை முழுக்க இராணுவ மயமாக்கும் திட்டத்தை அடிப்படையாகக் கொண்டது. இது இராணுவத்தை சிவில் சமூக நிகழ்வுக்குள் புகுத்துகின்ற சதித் திட்டமாகும். வடக்கு கிழக்கு மக்களின் விளைபொருட்களை தன் இராணுவ அதிகாரங்கள் மூலம் வாங்கி, வடக்கு கிழக்கு அல்லாத மக்களுக்கு மலிவாக சந்தைப்படுத்தி இராணுவமயமாக்கும் திட்டத்தை ஏற்கனவே அமுலாக்கியுள்ளது. இந்த மலிவு விலைக் கடை மூலம் சிங்கள மக்களை மயக்க, வடக்கு கிழக்கு மக்கள் மலிவாக தங்கள் உற்பத்தியை இராணுவத்திற்கு விற்கவேண்டிய அளவுக்கு அங்கு இராணுவ ஆட்சி நிலவுகின்றது.

இராணுவம் பற்றி சிங்கள மக்கள் நம்பிக்கை கொள்ள வைப்பதன் மூலம், வடக்கு கிழக்கு அல்லாத பகுதியிலும் இராணுவ ஆட்சியை மகிந்தா குடும்பம் மெல்ல மெல்ல புகுத்தி வருகின்றது. இதன் மற்றொரு அங்கம் தான், பல்கலைக்கழக மாணவர்களுக்கு இராணுவப் பயிற்சி.

வடக்கு கிழக்கில் உள்ள இராணுவக் கட்டமைப்பையும், இதன் கீழ் வாழ்கின்ற தமிழ்மக்களின் அவலத்தையும், அவர்களின் உரிமைகள் மறுக்கப்படுவதையும் சிங்கள மக்கள் மத்தியில் எடுத்துச் செல்லாத வரை, சிங்கள மக்கள் மேலான இராணுவமயமாக்கல் என்பது ஓர் இனத்துக்கு எதிரான உணர்வு மூலம் திணிக்கப்படும். மறுதளத்தில் சிங்கள மக்கள் ஆசியுடன் வடக்கு கிழக்கில் இராணுவ ஆட்சி தொடரும் நிலையும் நீடிக்கும். தமிழ், சிங்கள மக்கள் பரஸ்பரம் ஒருவர் மற்றவரை புரிந்து செயற்படாத வரை, அதற்காக எமது சக்தி அனைத்தையும் திரட்டி நாம் போரா டாத வரை, மகிந்தா குடும்பத்தின் இராணுவ ஆட்சியின் சிவில் வடிவங்கள் மூலம் மக்களை ஒடுக்குவதே இலங்கையின் பொதுவான இயல்பு வாழ்வாகிவிடும். அதை நோக்கி இலங்கை செல்லுகின்றது என்பதே, எங்கும் தளுவிய பொது உண்மையாக உள்ளது. இதை உணராத மடமையே, எமது சிந்தனையை ஆக்கிரமித்து நிற்கின்றது. இதை மாற்றாத வரை, மாற்றப் போராடாத வரை, மகிந்தா குடும்பம் சர்வாதிகாரம் மூலம் சமூகத்தை மேலும் பாசிசமயமாக்கியபடியே, இராணுவ ஆட்சியைக் கொண்டு நாட்டை அடிமைப்படுத்தி வைத்திருக்கும்.

## 4. இலங்கை மக்களுக்கு எதிராக நூற்றுக்கணக்கான புதிய இராணுவ முகாங்கள்...

மக்களைக் கண்டு அஞ்சும் மகிந்த அரசு, இராணுவத்தை பலப்படுத்தி நாட்டை இராணுவமயமாக்குகின்றது. நாடு முழுக்க ஏற்கனவே இராணுவமயமாக்கப்பட்டுள்ள நிலையில், புதியதாக நூற்றுக்கணக்கான புதிய இராணுவ முகாங்களை நிறுவவுள்ளதாக மகிந்தா குடும்பம் அறிவித்துள்ளது. வடக்கு கிழக்கிலோ கெடுபிடியான இராணுவ ஆட்சி தான் ஏற்கனவே நடக்கின்றது. இராணுவத் தலையீடு இல்லாத சிவில் சமூக நிகழ்வுகள் அங்கு கிடையாது. இதை மீறி நடந்தால் அதை சட்டவிரோத செய லாகவும், இராணுவத்துக்கு எதிரான சதியாகவும் கூறி, அதற்கு எதிராக இராணுவத்தைக் கொண்டு கெடுபிடிகளையும் ஒடுக்குமுறைகளையும் ஏவுகின்றது.




வடக்கு நோக்கி செல்லும் பெரும் வீதிகளில் உள்ள தேநீர் கடைகளைக் கூட மக்களிடம் விட்டுவைக்காது, அதை இராணுவம் தான் நடத்துகின்றது. வடக்குக்கிழக்கில் இராணுவம் தலையிடாத எதுவும் கிடையாது. புத்தர் சிலையை ஆங்காங்கே நிறுவுவது, வடக்கு கிழக்கு மக்களின் ஆதி வரலாற்றை மாற்றி எழுதுவது என்று, எங்கும் இராணுவம் தன் மூக்கை நுழைத்து வருகின்றது.

யுத்தம் நடந்தபோது மக்களுக்கும் இராணுவத்துக்கும் இருந்த பாரிய இடைவெளி, வெளிப்படையாகவே கொலை, பாலியல் வன்முறை, சித்திரவதை, கடத்தல், சொத்தழிப்பு ..., என்று பல தளத்தில் இயங்கியது. யுத்தத்தின் பின்னாக, மக்களின் அன்றாட வாழ்வினுள் தலையிட்டு அதன் கலாச்சார சமூக கூறுகளுக்குள் புகுந்து ஒடுக்குமுறையை ஏவுகின்றது. ஓரினம், இனமாக நீடிக்க அடிப்படையாக இருக்கின்ற பொருளாதாரம், நிலத்தொடர், மொழி, பண்பாட்டுக் கூறு என்பன அடிப்படையானது. இன்று பண்பாட்டுக் கூறு மீது கூட, இராணுவம் தலையிட்டு தாக்குதலை நடத்துகின்றது.

தமிழ்மக்களின் பண்பாட்டுக் கலாச்சாரத்துடன் அந்நியமானவர்கள், அதுவும் தமிழ்மக்களை ஆயுத முனையில் ஒடுக்கியவர்கள் தமிழ்மக்களின் அன்றாட சமூக வாழ்வியலில் தலையிட்டு இராணுவமயமாக்கல் மூலமாக மக்களை அடக்கியொடுக்கி ஆள்வதை தொடர்கின்றனர்.

இதன் பின்னணியில் இன்று வடக்கு கிழக்கில் பௌத்தத்தைப் பரப்புவதற்காக, மகிந்த குடும்பம் எடுகின்ற மற்றோர் அடாவடித்தனமான நடவடிக்கை

தான் பௌத்தத்தைப் பரப்பும் சங்கம். இதன் மூலம் மக்களை மதரீதியாகவும் பிரித்து அடக்குமுறையை ஏவியும் ஆள நினைக்கின்றது. இதற்கு அமைவாக சாதிய முரண்பாட்டை கூர்மையாக்கி, பௌத்த மதத்தை வடக்கில் திணிப்பதன் மூலமும், மக்களை பிரித்து மோதவிடுவதன் மூலமும் இராணுவ ஆட்சியை திணிக்கின்றனர்.

வடக்குக் கிழக்குப் பகுதியில் உள்ள இராணுவமயமாக்கலை, வடக்குக் கிழக்கு அல்லாத பகுதிக்கு மகிந்தா குடும்ப சர்வாதிகாரம் படிப்படியாக முன்நகர்த்துகின்றது. நாடு தழுவிய அளவில் நூற்றுக் கணக்கான புதிய இராணுவ முகாங்களை நிறுவும் முயற்சி, நாட்டை இராணுவமின்றி இனி மகிந்தா குடும்பம் ஆள முடியாது என்ற உண்மையை அடிப்படையாகக் கொண்டது.

பல்கலைக்கழக மாணவர்களுக்கு இராணுவ பயிற்சி, ஆசிரியர்களுக்கான இராணுவப் பயிற்சி, வடக்குக் கிழக்கு கடந்து பிரதேசங்களில் இராணுவம் உருவாக்கியுள்ள மலிவு விலைக் கடைகள், இராணுவத்தை முன்நிலைப்படுத்திய அரச நிகழ்வுகள் மற்றும் இலங்கை முழுக்க அதிகரிக்கும் இராணுவத் தலையீடுகள், இலங்கை முழுக்க இராணுவ ஆட்சியை படிப்டியாகவே மகிந்தா குடும்பம் பிரகடனம் செய்கின்றது.

இந்த நிலையில் இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பது என்பது, இந்த இராணுவ மயமாக்கலுக்கு எதிரான திசையில் தான் அது இயல்பில் இருக்கின்றது. இந்த இராணுவமயமாக்கல் கூட, தீர்வுத் திட்டத்தை சாத்தியம் அற்றதாக்குகின்றது. அவசரகாலச் சட்டத்தை நீக்குதல், திருத்துதல் என்பதெல்லாம், இந்த இராணுவமயமாக்கல் உள்ளடக்கத்துக்கு உட்பட்ட எல்லையில் தான் முரண்டுபிடித்து நிற்கின்றது.

தனது குடும்ப சர்வாதிகார ஆட்சியை பாதுகாக்க, சர்வதேச நாடுகளுக்கு இடையிலான முரண்பாட்டை கையாள்வது, இயல்பில் அவர்கள் தலையீடுகளை அதிகரிக்க வைத்துள்ளது. இது அரசுக்கு எதிரான கூலிக் குழுக்களை ஆயுதமேந்திய வடிவில் தோற்றுவிக்கும் எல்லையில் தான், அரசு தனக்கு எதிரான சர்வதேச முரண்பாடுகளை உருவாக்கி வருகின்றது. மக்களைப் பிளக்கின்ற முரண்பாடுகளை கூர்மையாக்கிய படி, இராணுவம் மூலம் கண்காணிக்கும் ஆட்சி அமைப்பாக மாற்றியபடி, இலங்கையை கொந்தளிப்பான சூழலுக்குள்ளும், சதிகளுக்குள்ளும் அடக்கியொடுக்கி ஆள நினைக்கின்ற மகிந்தா குடும்ப சர்வாதிகாரம் இலங்கை வாழ் அனைத்து மக்கள் மேலான இராணுவ ஆட்சி தான், மகிந்த சிந்தனையிலான சாரப்பொருள். மக்களைக் கண்டு அஞ்சும் மகிந்த குடும்பம் இராணுவத்தை நம்பி செயலாற்றுகின்றது.

இதை புரிந்துகொண்டு, அனைத்து மக்களையும் ஒன்றிணைத்து போராடாத வரை, நாம் எதையும் வெல்லப் போவதில்லை. இதுதான் எம் முன்னுள்ள அனைத்தும் தழுவிய உண்மையுமாகும்.

**பி. இரயாகரன்**

## இறந்தவர்களின் தோத்திரம்

– சிறீ

அருள் நிறைந்த அம்மா வாழ்க
டெல்லி சர்க்காரும் சர்வலோகமும்
உம்முடனே இருக்கக் கடவதாக
பெண்களுக்குள் தமிழ்நாட்டில்
ஆசீர்வதிக்கப்பட்டவள் ஆனீர்
தமிழர்களின் திருவயிற்றின்
கனியாகிய கன்னித்தாயே
முள்ளிவாய்க்காலில் மரித்த எங்களுக்காக
எங்கள் மரணநேரத்திலும்
டெல்லி சர்க்காரை
சங்காரம் வேண்டாமென்று
வேண்டிக் கொண்ட தாயே
எங்கள் சந்ததியினருக்காக
நாங்கள் வேண்டிக் கொள்கிறோம்
எங்கள் சந்ததியினரை இரட்சித்தருளும்
அவர்களை அவர்கள் சித்தத்தில் வாழ அனுமதித்தருளும்.
முள்ளுக் கிரீடம் அணிந்து
சிலுவையில் அறையப்பட்டு
மரணித்தார் நாதர் இயேசு
நாங்கள் பிறருக்காய் மண்ணுக்குள்
மரணிக்கப்பட்டோம் தாயே.
உயிர்த்தெழுந்து நாங்கள் வருகிறபோது
தாயே உமக்கே தோத்திரம்
உண்டாகக் கடவது.


எங்களுக்காக டெல்லி சர்க்காரின் சகாயமாய்
சிலுவை சுமப்பதற்கும் சாரீரம் தருவதற்கும்
சத்தியுடையவளாயிருக்கிற கன்னிகையே
எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்

ஆச்சர்யத்துக்குரிய ஜெயா மாதாவே
வாக்குத்தத்தத்தின் லலிதப் பெட்டியே
பரலோகத்தினுடைய வாசலே
சமாதானத்தின் இராக்கினியே
தங்கள் இந்தியநாடு இலங்கையிலும்
காஷ்மீரிலும் தண்டகாருண்யத்திலும் செய்த
போர்க்குற்றங்கள் அனைத்தையும் பொறுத்தருளும்
டெல்லியின் திருவுளப்படி நடப்பதற்கு வேண்டிய
மன இருதய கீழ்ப்படிதலை மகிந்தவுக்கு
என்றும் கொடுத்தருளும் தாயே.

### பலிகொடுத்தவர்களின் வேண்டுதல்

டெல்லி சர்க்காரின் இராக்கினியே
மாமனிதர்களுடைய சரணமே
சர்வலோகத்துக்கும் நாயகியே
நாங்கள் எல்லாரும் உம்முடைய பிள்ளைகளாயிருக்கிறோம்
எப்படியாவது எங்களை இரட்சிக்க வேண்டும் என்று
டெல்லியை மன்றாடும் தாயே
மாதாவே ஆண்டவளே உம்மை நம்பினோம்
எங்களைக் கைவிடாதேயும்.
விசேஷமாய் நாங்கள் சாகும்போது
பிசாசுகளுடைய தந்திரங்களையெல்லாம் தள்ளிப்போட்டு
உம்முடைய டெல்லித் திருக்குமாரர்களின் பாதங்களுக்கு
நாங்கள் வந்து சேருமட்டும் தேவரீர் துணையிரும்.
இது நிமித்தமாக உம்முடைய திருப்பாதத்தில் விழுந்து
உம்முடைய ஆசீரைக் கேட்கிறோம்.
இதை அடியோர்களுக்கு இரக்கத்தோடே
கட்டளை பண்ணியருளும் தாயாரே மாதாவே ஆண்டவளே

www.tamilarangam.net



# இனம் மாறும் தமிழர்கள்..!

## இலங்கை என்ற இழந்து சொர்க்கம் (பகுதி-2)

-கலையரசன்.

கொழும்பு நகரின் மத்தியை அண்மித்துள்ளது கொட்டாஞ்சேனை. சிங்களத்திலும், ஆங்கிலத்திலும் கொட்டஹென என்று அழைக்கப் படுகின்றது. இன்று கொழும்பில் வாழும் தமிழர்கள் பலர், அந்தப் பெயரை அதிகமாக பாவித்து வருகின்றனர். முப்பது வருடங்களுக்கு முன்னர் நான் வாழ்ந்த காலத்தில், "கொட்டாஞ்சேனை" என்ற தமிழ்ப் பெயர் எமது நாவில் அடிக்கடி தவழும். கொழும்பு நகரில், தமிழர்கள் செறிவாக வாழும் இடங்களில் கொட்டாஞ்சேனையும் அடங்கும். தென் கொழும்பில் மத்தியதர வர்க்க குடியிருப்புகளை அதிகமாக கொண்ட வெள்ளவத்தையில் இருந்து பெரிதும் வேறுபடுகின்றது.




வெள்ளவத்தையில் வசிப்பவர்களில் பெரும் பான்மையானோர் யாழ்ப்பாணத் தமிழர்கள். அதற்கு மாறாக, கொட்டாஞ்சேனையில் இந்திய வம்சாவழித் தமிழர்களும், முஸ்லிம்களும் அதிகமாக வாழ்கின்றனர். அவர்களையும் இரண்டு வகையாகப் பிரிக்கலாம். இந்திய உற்பத்திப் பொருட்களை இறக்குமதி செய்யும் மொத்த வியா-பாரிகள், நகைக்கடை முதலாளிகள், போன்ற பணக்கார இந்தியத் தமிழர்களும் அங்கே தான் வசிக்கின்றனர். அதே நேரம், அந்தப் பிரதேசத்தை அண்மித்துள்ள கொழும்புத் துறைமுகத்தில் கூலித் தொழில் செய்ய வந்த, வறிய இந்தியத் தமிழர்களும் பெருமளவில் வாழ்கின்றனர். கொட்டாஞ்சேனையில் எந்த தெருவில் நுழைந்து, எதிரில் வரும் எவருடனும் தமிழில் பேசலாம். தமிழ் கடைகள், உணவு விடுதிகள் மட்டுமல்ல, தினசரி தமிழ்த் திரைப்படம் மட்டுமே காண்பிக்கும் மூன்று திரையரங்குகள் உள்ளன. இந்துக் கோயில்கள்,இஸ்லாமிய பள்ளிவாசல்களில் மட்டுமல்லாது, அற்புதம் நிகழ்ந்த இடமாக கருதப்படும் அந்தோனியார் தேவாலயத்திலும் தமிழ்க் குரல்கள் ஒலிக்கும்.

கொட்டாஞ்சேனையில் வசிப்பவர்களில் பெரும்பான்மையானோர் தமிழ் மொழி பேசும் மக்கள் என்பதால், அங்கிருக்கும் பாடசாலைகளிலும் தமிழ் மொழி மூலம் கல்வி கற்பிக்கப்பட்டதில் வியப்பில்லை. வசதியானவர்கள் தமது பிள்ளைகளை கிறிஸ்தவ மிஷனரிகளால் நடத்தப்படும் கான்வென்ட் பாடசாலைகளுக்கு அனுப்புவார்கள். கீழ் மத்தியதர, உழைக்கும் வர்க்க மக்கள் தமது பிள்ளைகளை, அரசுப் பள்ளிக்கூடங்களுக்கு அனுப்புவார்கள். நானும் "கொட்டாஞ்சேனை மகாவித்தியாலயத்தில்" தான் ஆரம்பக் கல்வி கற்றேன். பொதுவாக மிஷனரி, அரசுப் பாடசாலைகள் இரண்டிலும், தமிழ் மொழி மூலம் கல்வி அளிக்கப்பட்டு வந்தது. இருப்பினும், சில மிஷனரி பாடசாலைகள் அப்போதே சிங்கள மொழிவழிக் கல்வியை புகுத்தத் தொடங்கிவிட்டன. பல வருடங்களுக்கு பிறகு, கொட்டாஞ்சேனை மிஷனரிப் பாடசாலைகளில் படித்த நடுத்தர வர்க்க தமிழர்கள் பலரை, இங்கிலாந்தில் நான் சந்தித்தேன்.

அவர்களில் பலர் பாடசாலைக் கல்வி முழுவதும் சிங்கள மொழி மூலம் படித்திருந்தனர். அவர்களின் பெற்றோர் முதலாளிகளாகவும், வியாபாரிகளாகவும் இருந்தனர். தமது பிள்ளைகள் "அந்தஸ்தில் உயர்ந்த" மிஷனரி பாடசாலையில், சிங்கள மொழியில் கல்வி புகட்டுவதை விரும்பினார்கள். தாம் தமிழில் படிக்க முடியவில்லையே என்ற கவலை, பிள்ளைகளுக்கும் இல்லை. அதற்கு மாறாக, அரசு பள்ளிக்கூடமான மகா வித்தியாலயத்தில் தமிழில் படித்த என்னைப் போன்றவர்களை தரக்குறைவாக கருதுவதை உணர முடிந்தது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

இலங்கையில் இனப் பிரச்சினையின் (மொழிப் பிரச்சினையின்?) நதிமூலம் கண்டுபிடிப்பது மிகவும் சிக்கலானது. நாற்பது வருடங்களுக்கு முன்னர், யாழ்ப்பாணத்தை பூர்வீகமாகக் கொண்ட, கொழும்பில் தொழில் புரிந்த நடுத்தர வர்க்க தமிழர்கள் சிங்கள மொழியில் கல்வி கற்க மறுத்து போராடினார்கள். அதே நேரம், அவர்களில் ஒரு பிரிவினரும், இந்திய வம்சாவழி நடுத்தர வர்க்கமும், சிங்கள மொழி மூல கல்வியை விரும்பி ஏற்றுக் கொண்டது. அதற்குக் காரணம் அவர்களது வர்த்தக அபிலாஷைகள். பெரும்பான்மை மக்கள் பேசும் மொழியில், தமது பிள்ளைகள் பாண்டித்தியம் பெறுவது, எதிர்கால வர்த்தக நோக்கத்திற்கு நன்மை பயக்கும் என்று நம்பினார்கள். இருந்த போதிலும், இனக்கலவரங்களின் போது, அவர்களது வீடுகள், வர்த்தக ஸ்தாபனங்கள், சிங்களக் காடையரால் தாக்கப்பட்டன. இந்தியாவில், குஜராத்தில் முஸ்லிம் விரோத கலவரம் நடந்த அதே பாணியில் தான், கொழும்பில் தமிழர் விரோத கலவரங்கள் இடம்பெற்றன. தமிழர்களைக் கொல்வதற்கு, சொத்துக்களை நாசமாக்குவதற்கு சிங்கள உதிரிப் பாட்டாளி வர்க்கத்தை சேர்ந்தவர்கள் பயன்படுத்தப் பட்டனர். சிங்கள அரசியல்வாதிகளும்,முதலாளிகளும் பின்னுக்கு நின்று அவர்களை ஏவிவிட்டனர்.

மேலெழுந்தவாரியாக பார்க்கும் பொழுது, தமிழர்கள் மீதான இனத்துவேஷத்தின் வெளிப்பாடாகத் தெரியும். உண்மையில் தமிழ் மேட்டுக்குடியினரின், வசதியான மத்தியதர வர்க்கத்தின் செல்வத்தை கொள்ளையடிப்பது உள்நோக்கமாக இருந்தது. அவர்களின் வர்த்தகத்தை சிங்கள முதலாளிகள் அபகரித்துக் கொண்டனர். அவர்களின் பதவிகள், சிங்கள நடுத்தர வர்க்கத்தினரிடம் போய்ச் சேர்ந்தது. இலங்கையில் இவ்வாறு தான் சிங்கள மேலாண்மை நிலை நிறுத்தப் பட்டது. வெளிப்பார்வைக்கு அது இனப்பிரச்சினை. ஆழமாக ஆராய்ந்தால், பொருளாதார முரண்பாடுகளின் வெளிப்படுத்தல். மேற்குறிப்பிட்ட விபரங்களை தந்தவர்கள், எனது ”கொட்டாஞ்சேனை நண்பர்கள்”. அவர்களுக்கு தமக்கு நேர்ந்த அனுபவத்தைக் கொண்டு, அரசியலை பகுத்துணரும் தன்மை இருக்கவில்லை. சராசரி தமிழ்த் தேசியவாதிகளைப் போன்று, சிங்கள அரசின் கொடுங்கோன்மை பற்றி எல்லாம் திட்டித் தீர்த்தாலும், தமிழீழத்தை ஆதரிக்கவில்லை. வர்த்தகத்தை மட்டுமே மையப்படுத்திய வாதப் பிரகாரம், தமிழீழம் கிடைத்தால் அவர்கள் இழக்கப் போவது அதிகமாகவிருந்தது. மேற்கத்திய சார்பு, முதலாளித்துவ நலன் பேணும் ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியை நம்பிக்கையோடு எதிர்பார்த்தார்கள். கொழும்பு வாழ் தமிழ் சமூகம், இன்றைக்கும் ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஆதரவுத் தளமாகவே உள்ளது. ஐ.தே.க. ஆதரவு அரசியல், வட கொழும்பில் வாழும் இந்திய வம்சாவழித் தமிழர்களையும், தென் கொழும்பு யாழ்ப்பாணத் தமிழர்களையும் ஒன்று சேர்க்கின்றது. தமிழ்தேசியம், இன்று கொழும்பு வாழ் தமிழர்களையும் வசீகரித்துள்ளது. அதற்குப் பின்னால், ஐ.தே.க. வின் நுண்ணரசியல் இழையோடியதை அவதானிக்கக் கூடியதாகவிருந்தது. இது குறித்து பின்னர் விரிவாக ஆராயலாம். அதற்கு முன்னர், இனக்கலவரத்தின் பின்னர் கொழும்பு தமிழரை பாதித்த இனப்பிரச்சினைகளின் கூறுகளை சிறிது பார்க்கலாம்.

இனப்பிரச்சினை எங்கே இருக்கின்றது என்பதை, நான் படித்த பாடசாலைக்கு பழைய மாணவனாக சென்ற பொழுது உணர முடிந்தது. கொட்டாஞ்சேனை மகா வித்தியாலயம் ஒரு ஆரம்ப பாடசாலை, வீதியின் இரு மருங்கிலும் கட்டிடங்களைக் கொண்டிருந்தது. பாடசாலையின் பெரும் பகுதி, சிங்களப் பாடசாலையாக மாறிவிட்டிருந்தது. நாங்கள் விளையாடிக் களித்த மைதானத்தின் ஒரு பகுதியில் புத்தவிகாரை எழுப்பப்பட்டிருந்தது. நான் படித்த காலத்தில் அப்படி எதுவும் இருக்கவில்லை. ஒரு கணம், சரியான இடத்திற்கு வந்திருக்கிறேனா? என்ற சந்தேகம் எழுந்தது. பாடசாலையின் உள்ளே சென்ற போது, எங்களை வரவேற்ற அதிபர் ஒரு சிங்களவர். நாம் கொண்டு சென்ற கமெராவினால் படம் எடுக்க விரும்பிய போது தடுத்தாட்கொண்டார். “தமிழர்கள் என்றாலே கெட்டவர்களாக இருப்பார்கள்,” என்ற எச்சரிக்கை உணர்வு அவர் மனதில் எழுந்திருக்கலாம். வெளியே வந்து, சுற்று முற்றும் தலையைத் திருப்பிப் பார்த்தேன். வலது பக்க கட்டிடங்களின் முன்னால் இருந்த அறிவுப்புப் பலகையில் “இந்து பாடசாலை” என்று எழுதப் பட்டிருந்தது. அருகிலேயே புதிதாக ஒரு சைவக்கோயில். குழப்பம் மேலும் அதிகரித்தது. முன்பு கொட்டாஞ்சேனையில் சிங்களவர்களின் எண்ணிக்கை மிக மிகக் குறைவு. நான் படித்த காலத்தில், அந்தப் பாடசாலையின் உத்தியோகபூர்வ பெயர்: “கொட்டாஞ்சேனை அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை”. அன்று அது ஒரு மதச்சார்பற்ற பாடசாலை. இன்று அது, ‘பௌத்த பாடசாலை’, ‘இந்துப் பாடசாலை’ என்று இரண்டாக பிளவுபட்டு விட்டது. இனப்பிரச்சினை மொழி சார்ந்தது மட்டுமல்ல, மதம் சார்ந்ததும் தான்.

“இந்துப் பாடசாலை” என்ற மத அடையாளத்தை ஏற்றுக் கொள்பவர்களுக்கு, “பௌத்தபாடசாலையை” எதிர்க்கும் யோக்கியதை கிடையாது. சிறுபான்மை மதங்களுக்கு சலுகைகள் கொடுத்து வாயை மூட வைத்திருப்பதால் தான், பௌத்த-சிங்கள மேலாதிக்கம் ஆட்சி செய்கின்றது. கொட்டாஞ்சேனையில் புதிதாக முளைத்த கிறிஸ்தவ சபைகளின் சுவரொட்டிகள் பரவலாக காணப்பட்டன. இதுவும் இருபது ஆண்டுகளுக்குள் நான் கண்ட மாற்றம். முன்பெல்லாம் “மரபுவழி மதங்களை” சேர்ந்தோரே அதிகமாக இருந்தனர். தற்போது வெளிநாட்டு நிதியில் இயங்கும் கிறிஸ்தவ சபைகள் பெருகி வருகின்றன. பௌத்தம், இந்து போன்ற பெரும்பான்மை மதங்களை சேர்ந்தோரே, “புதிதாகப் பிறந்த கிறிஸ்தவர்களாக” ஞானஸ்நானம் பெற்று

வருகின்றனர். இவர்களில் 99 வீதம் பேர், ஏழ்மை நிலையில் வாழ்பவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. யாழ் சைவ-வெள்ளாள ஆதிக்க மனப்பான்மை கொண்ட தமிழர்கள், “மதம் மாறிகளை” பரிகசிப்பது வழக்கம். “ஒரு வேளை உணவுக்கு வழியற்றவர்கள்... சாப்பாடு, காசு கிடைக்கும் என்ற ஆசை வார்த்தைக்கு மயங்கி மதம் மாறுகிறார்கள்...” இவ்வாறெல்லாம் இளக்காரமாக பேசி வந்தனர். அது உண்மையாகில், தனியொருவனுக்கு உணவளிக்க முடியாத மதத்தால் என்ன பிரயோசனம்? மேலும், இந்து மதத்தில் நிலவும் சாதிய கட்டுப்பாடுகளைப் பற்றி யாரும் பேசுவதில்லை. காலங்காலமாக, உயர்சாதியினை சேர்ந்தவர்களுக்கு மட்டும் செல்வம்,வசதி,வாய்ப்பு கிடைப்பது எப்படி? ஒரு சாதிய சமூகத்தில் முன்னுக்கு வர வாய்ப்பற்ற தாழ்த்தப்பட்ட மக்கள் மதம் மாறினால் வாழ்வு வளமாகும் என்பது நப்பாசையாக இருக்கலாம். ஆனால், அவர்களின் அறிவுக்கெட்டிய வரையில் தெரிந்த வழி அது தான். அவ்வாறு மதம் மாறியிருந்த, மத்தியகிழக்கு நாடுகளுக்கு பிழைக்கச் சென்றவர்களை சந்தித்திருக்கிறேன்.

“முஸ்லிம் மத அடிப்படைவாத” நாட்டில் பிழைக்கச் சென்று, கிறிஸ்தவர்களாகி திரும்பி வந்திருந்தார்கள். இலங்கையில் நவ-தாராளவாத பொருளாதாரம் அறிமுகப்படுத்தப்பட்ட பின்னர் தான், உழைக்கும் மக்களின் “புதிய கலாச்சாரம்” தோற்றம் பெற்றது. அது வரையும் பெரும்பான்மை உழைக்கும் மக்கள், நகர்ப்புறங்களில் தொழிலகங்களிலும், நாட்டுப்புறங்களில் வயல்களிலும் வேலை செய்து வந்தனர். அரைக் காலனிய சமுதாயத்தில், அவர்களின் வறுமை நிலையில் மாற்றம் ஏற்பட்டதில்லை. ஐக்கிய தேசியக் கட்சி கொண்டு வந்த நவ-தாராளவாதம், அவர்களுக்கு வெளிநாடு செல்லும் வாய்ப்பை வழங்கியது. இதனால் பலர் வெளிநாடு சென்று உழைத்து பணம் அனுப்பி வசதி வாய்ப்புகளை பெருக்கிக் கொண்டனர். அதற்கு “நன்றிக்கடனாக”, அவர்களில் பலர் ஐ.தே.க. அனுதாபிகளாக இருக்கின்றனர். தேர்தல் காலங்களில், அவர்களது குடும்ப உறுப்பினர்கள் கண்ணை மூடிக் கொண்டு ஐ.தே.க.வுக்கு வாக்களிப்பார்கள். இது மட்டுமே அவர்களின் ஒரேயொரு அரசியல் நிலைப்பாடன்று. ஆங்கில மோகமும், மேற்கத்திய கலாச்சாரமும் இன்று உழைக்கும் வர்க்க மக்களையும் பீடித்துள்ளது. அதன் பாதிப்பால், இன்னும் “முற்போக்காக” சிந்திக்கின்றனர். அதாவது, “வாய்ப்பற்ற” இந்து மதத்தை உதறித் தள்ளுவது மட்டுமல்ல, “பிரயோசனமற்ற” தமிழ் மொழியையும் மறந்து விடுகின்றனர். மதம் மாறுவதன் மூலம், தமது இனத்தையும் மாற்றிக் கொள்கின்றனர். இது குறித்து, எனது அனுபவங்களூடாக விளக்க விரும்புகிறேன்.

மத்திய கிழக்கில் வேலை செய்யும், விடுமுறைக்கு கொழும்பு வந்திருந்த பெண்ணொருவர், தனது



குடும்ப உறுப்பினர்களுடன், தமிழும், சிங்களமும் கலந்து பேசிக் கொண்டிருந்தார். தொழில் புரியும் நாட்டில், ஒரு சர்வதேச பாடசாலையில் ஆங்கில மொழியில் கல்வி கற்கும் பிள்ளைகளின் தாய்மொழி சிங்களம் என்று பதிவு செய்ததாக தெரிவித்தார். இந்துக் கணவனை விவாகரத்து செய்த, கண்டியை சேர்ந்த கிறிஸ்தவ-தமிழ்ப் பெண்ணொருவர், தனது மகளுடன் சிங்களத்தில் மட்டும் உரையாடினார். சரளமாக சிங்களம் பேசுவதைக் காணும் சிங்கள நண்பர்கள், தன்னை சக இனத்தவராக கருதுவதாக, பெருமையுடன் தெரிவித்தார். இப்படியானவர்கள் விதிவிலக்கல்ல.

இவர்களைப் போல ஆயிரக்கணக்கான “தமிழர்கள்”, தாய்மொழியான தமிழை விட, ஆதிக்க மொழியான சிங்களத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கிறார்கள். அனேகமாக, 83 இனக்கலவரத்திற்கு பின்னர் கொழும்பில் வளர்ந்த தமிழ் பிள்ளைகள், சிங்கள மொழிப் பாடசாலைகளில் கல்வி கற்றுள்ளனர். தமது பிள்ளைகள் சிங்கள மொழியில் கல்வி கற்பதை, பல பெற்றோர் முழு மனதுடன் ஆதரித்துள்ளனர். கொழும்பில் இன்றைக்கும் தமிழ்ப் பாடசாலைகள் இயங்கிக் கொண்டிருக்கின்றன. அப்படி இருந்தும், பல தமிழ்ப் பெற்றோர் தமது பிள்ளைகளை சிங்களப் பாடசாலைகளில் ஆர்வம் காட்டுவதால், தமிழ்ப் பாடசாலை மாணவர் தொகையில் வீழ்ச்சி ஏற்படுகின்றது. இலங்கை அரசு இன ஒடுக்குமுறையை மிக நுணுக்கமாக செயற்படுத்தி வருகின்றது. சிறிலங்கா அரசு, அதன் அறுபதாண்டு கால வரலாற்றில், பேரினவாத அரசாக இருந்த போதிலும், தமிழ் மொழிக் கல்வியை தடை செய்யவில்லை. ஆனால், பொருளாதார நெருக்குவாரங்களால் தமிழர்களே சிங்கள மொழிக் கல்வியை தேர்ந்தெடுக்க வைக்கின்றது. இன்னொரு பக்கம், வட மாகாணத் தமிழர்கள் அதிகளவில் வெளிநாடு செல்ல நாட்டம் காட்டுவதாலும், தமிழ் மொழி பேசுவோர் எண்ணிக்கை குறைந்து வருகின்றது. இலங்கையில் முப்பதாண்டுகளாக நடந்த போரில் இழந்த தமிழர்களின் எண்ணிக்கையை விட, புலம் பெயர்வதாலும், தாய்மொழியை புறக்கணிப்பதாலும்

www.tamilarangam.net

அதிகளவு தமிழர்கள் இழக்கப்பட்டு வருகின்றனர். இலங்கைப் பிரச்சினை குறித்து ஆழமான அறிவு கொண்ட ஐரோப்பிய புத்திஜீவிகள் பலர், "இலங்கையில் இருப்பது இனப்பிரச்சினையா? அல்லது மொழிப்பிரச்சினையா?" என்று கேட்டனர். பல தடவை, அந்தக் கேள்விக்கு பதில் கூற முடியாமல் முழித்திருக்கிறேன்.

இலங்கையில் தமிழ்மொழியை அழிந்து விடாமல் காக்க வேண்டுமென்றால், அதைப் பேசும் மக்களுக்கும் பிரக்ஞை இருக்க வேண்டும். நான் அனுபவத்தில் கண்டறிந்த உண்மைகள் பல அதிர்ச்சி அளித்தன. இன்று "ஈழத்தமிழர்" என்று அழைக்கப்படும், வட-கிழக்கு மாகாணங்களை பூர்வீகமாக கொண்ட தமிழர்களின் எண்ணிக்கை 12வீதம். அதே நேரம், மலையகத்திலும், கொழும்பிலும் வாழும் "இந்திய வம்சாவளி" தமிழரின் எண்ணிக்கை 7வீதம். முன்னைய பிரிவில் கணிசமான தொகையினர் தொடர்ச்சியாக மேற்கத்திய நாடுகளை நோக்கி புலம்பெயர்ந்து வருகின்றனர். பின்னைய பிரிவில், ஒரு தொகையினர் சிங்கள மொழியை தாய்மொழியாக்கிக் கொள்கின்றனர். இவ்வாறு "இனம் மாறும்" முதலாவது தலைமுறையினர், தங்களை தமிழராகவும், சிங்களவராகவும் சந்தர்ப்பத்திற்கேற்ப அடையாளப் படுத்திக் கொள்கின்றனர். ஆனால், இரண்டாவது தலைமுறை, தம்மை முழுச் சிங்களவராக அடையாளப் படுத்துகின்றனர். கிறிஸ்தவ மதத்தை சேர்ந்தவராக இருத்தல் அல்லது கிறிஸ்தவராக மாறுவதால் இலகுவாக இனம்மாற முடிகின்றது. இலங்கையில் புத்தபிக்குகள் கூட இனவாதம் பேசுவது சாதாரணம் என்பதால், ஒருவரும் பௌத்த மதத்திற்கு மாற விரும்புவதில்லை. அதே நேரம், சிங்களவர்களிலும் கிறிஸ்தவர்கள் இருப்பதால், தமிழ்க் கிறிஸ்தவர்கள் சிங்களம் பேசுவது புதுமையாக கருதப்படமாட்டாது. சிறிலங்கா பேரினவாத அரசை எதிர்த்து, தமிழீழம் அமைக்கப் புறப்பட்ட, வட இலங்கையை சேர்ந்த அரசியல் தலைமை, "இன்னொரு தமிழ் சமூகத்தின்" பிரச்சனைகளை புறக்கணித்து வந்துள்ளது. இத்தனைக்கும், கொழும்புத் தமிழர்களில் பெரும்பான்மையானோர் தமிழ்த் தேசியத்திற்கு ஆதரவானவர்கள்.

இன்றைக்கும் பிரபாகரன் இறக்கவில்லை என்று நம்பிக் கொண்டிருப்பவர்கள் இவர்களது அரசியல் நிலைப்பாட்டை, தமிழகத் தமிழரின் ஈழ ஆதரவு நிலைப்பாட்டுடன் ஒப்பிடலாம். இந்திய முதலாளிகள் நடத்தும் வீரகேசரி பத்திரிகை, (ஐ.தே.க.சார்பு) மகாராஜா நிறுவனத்தின் சக்தி டி.வி. என்பன, தமிழ்த் தேசியக் கோணத்தில் இருந்தே செய்திகளை தெரிவித்து வந்தன. அத்தகைய பலமான ஊடகங்களின் செல்வாக்கு பொதுக் கருத்தை தீர்மானித்ததை மறுக்கவியலாது. இருப்பினும், இன்னோர் அம்சமும் கொழும்புத் தமிழரை தமிழ்த் தேசியத்தின் பக்கம் உந்தித் தள்ளியது. இனக்கலவரங்களால் "ஈழத்தமிழர்கள்" மட்டுமே பாதிக்கப்பட்டது போலவும், அதனால் தான் அவர்களின் ஈழக்கோரிக்கை நியாயமானது என்று தமிழகத்தில் பலர் பேசி வருகின்றனர். இனக்கலவரங்களால் பாதிக்கப்பட்ட "இந்திய வம்சாவழி" மக்கள் குறித்து, இந்தியாவில் வாழும் தமிழர்களே பேசுவதில்லை. தமிழர்களைக் கண்டாலே இனவெறி நஞ்சைக் கக்கும் சிங்களவர்களை, கொழும்பிலும், மலையகத்திலும் வாழும் தமிழர்கள் தினசரி சந்திக்கிறார்கள். பெரும்பான்மை சிங்களவர்கள் இனத்துவேசிகள் இல்லை என்பதால், இன்றைக்கும் அவர்கள் அந்தப் பிரதேசத்தில் வாழ முடிகின்றது. ஆனால், இரண்டாந்தரப் பிரஜையாக நடத்தப்படும் அவலத்தை நேரடியாக அனுபவித்து வருகின்றனர். வட-கிழக்கு மாகாணத்தில் தமிழீழம் அமைந்தால், அல்லது புலிகளின் பலத்தைக் காட்டி, சிங்கள பேரினவாத அரசிடம் உரிமைகளைப் போராடிப் பெறலாம் என நம்பினார்கள். ஆனால், வட இலங்கைத் தமிழ் அரசியல் தலைமை, அந்த மக்களை வெறும் பார்வையாளர்களாக வைத்திருக்கவே விரும்பியது.

கொழும்புத் தமிழரின் தமிழீழ ஆதரவு கருத்துருவாக்கத்திற்கு, சிறிலங்கா அரசும் பங்களிப்பை வழங்கியுள்ளமை முரண்நகையானது. தொலைக்காட்சி என்பது, இதுவரை கண்டுபிடிக்கப்பட்ட தொழில் நுட்ப சாதனங்களில் பலமான ஊடகம். போரினால் பாதிக்கப்படும் வட-கிழக்கு மக்களின் அவலம், கொழும்புத் தமிழரின் மனதையும் பாதித்தது. தமது இன மக்கள் கொல்லப்படுகிறார்கள், என்ற இனவுணர்வு பரவலாக காணப்பட்டது. வடக்கில் கொல்லப்பட்ட அப்பாவி மக்களின் பரிதாபத்தை உணர்த்தி, சிங்கள பாசிஸ்டுகளுடன் வாதாடிய கொழும்புத் தமிழர்களை நேரில் கண்டிருக்கிறேன். அரசியல் சார்பற்ற சாமானிய சிங்கள மக்களும், கொல்லப்படும் அப்பாவித் தமிழர்களுக்காக பரிதாபப்பட்டிருக்கிறார்கள். ஆனால், தமிழர்களால் மட்டுமே அதனை உணர்வுபூர்வமாக புரிந்து கொள்ள முடிகின்றது. அதே நேரம், வட-கிழக்கு மக்கள் மீதான பரிவு, ஒரு காலத்தில் "பஞ்சத்தால் வாடிய சோமாலிய மக்கள் மீதான அனுதாப அலை" போன்ற ஒன்றை தோற்றுவித்துள்ளது.

"வடக்கு-கிழக்கில் காட்டப்படும் தமிழர்களை விட", தாம் நல்ல நிலையில் வாழ்வதாக, கொழும்புத் தமிழர்கள் நினைக்கிறார்கள். தங்களுக்கு எந்தப் பிரச்சினையும் இல்லை என்றும், பலர் என்னிடம் நேரடியாக தெரிவித்தனர். ஒரு வகையில், இது இலங்கை அரசின் சூழ்ச்சி பலித்து விட்டதை தான் எடுத்துக் காட்டுகின்றது. அதாவது, இனப்பிரச்சினை தென்னிலங்கையில் தான் கருக்கொண்டது. இன்று அது வட-கிழக்கிற்கு மட்டுமே சொந்த மான "ஈழப்பிரச்சினையாக" மாற்றப்பட்டுவிட்டது.

(தொடரும்)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# பிரமாண்டமான சதுரங்கப் பலகையில் ஆடிய ஆட்டம்..

-சுதேகு

.

பின்லேடன் கொலை!

சர்வதேச நாடுகள் எங்கிலும் சல்லடைபோட்டுத் தேடப்பட்டு வந்த ஒருவர் பில்லேடன். அமெரிக்காவின் பயங்கரவாதிகள் பட்டியலில் முதல் நபராக இவர் இடம்பெற்றும் இருந்தார். இவரை அண்மையில் அமெரிக்க சிறப்புப்படையினர் சுட்டுக் கொன்று விட்டதாகச் செய்திகள் வெளிவந்திருந்தன. எப்படி இலங்கையில் பிரபாகரன் சுட்டுக்கொல்லப்பட்ட செய்திகள் வெளிவந்தபோது, அவரது ஆதரவாளர்களால் நம்பமுடியாமல் திகைத்துப்போய் இருந்தனரோ, அதேமாதிரி பில்லேடனின் ஆதரவாளர்கள் மத்தியிலும் இது காணப்பட்டது. பின்லேடன் உலகநாடுகளை எல்லாம் மிரட்டிக்கொண்டிருந்தாரோ இல்லையோ, அமெரிக்காவின் கண்களில் தன் விரலைவிட்டு ஆட்டிப்படைத்துக் கொண்டிருந்தார் என்பது மிகையாகாது. அமெரிக்காவால் "தேடி"வரப்பட்ட பயங்கரவாதப் பட்டியலில் முதல் இடத்தைப் பிடித்த பின்லேடன், சுட்டுக்கொல்லப்பட்டதை நம்பமுடியாத அதிர்ச்சியிலும் ஆச்சரியத்திலும் பலர் உறைந்துபோயும் உள்ளனர். பாக்கிஸ்தான் தலைநகரில் இருந்து சுமார் ஒருமணிநேர பயணதூரத்தில் அபோட்டாபாத் நகரம் இருக்கிறது. பாக்கிஸ்தானின் மிகப்பெரிய இராணுவத்தளத்துக்கு மிக அருகாக இந்த நகரத்தில், ஓர் இராணுவ அக்கடமிக் குடியிருப்பும் (காக்குல்) அமைந்திருந்தது. இதிலிருந்து 20யார் தூரத்தில் இருந்த ஒரு பெரிய பங்களாவில் பில்லேடன் பதுங்கி இருந்தாராம்.

இந்த இடத்தை அமெரிக்கா "தீவிர முயற்சி கொண்டு" கண்டுபிடித்ததனால், உடனே தாக்குதலுக்குத் திட்டமிடப்பட்டதாம். திட்டத்தின் படி எடுக்கப்பட்ட அதிரடி நடவடிக்கையில் பில்லேடன் கொல்லப்பட்டதாகவும் வெள்ளைமாளிகைச் செய்திகள் வெளியாகியும் இருந்தன. இஸ்லாமாபாத்தில் இருந்து கிட்டத்தட்ட 60 கி.மீ தூரத்தில் இருந்த இக்கட்டிடத்தில் நடத்தப்பட்ட தாக்குதலில் பில்லேடனும் அவரது 3 பாதுகாவலரும் அவரது மகன் ஒருவரும் கொல்லப்பட்டதாக முதலில் செய்திகள் வெளியாகின. 40 நிமிடங்கள் வரை நீடித்த இத்தாக்குதலை வெள்ளைமாளிகை அதியுயர் நிர்வாகம் திரையில் நேரடியாகப் பார்த்துக் கொண்டிருந்ததாகவும் "வெள்ளைச் செய்தி"களே தெரிவித்தும் இருந்தது. பில்லேடன் தனது இளம் மனைவியை மனிதக்கேடயமாகப் பாவித்த நிலையில் அவரை சுட்டுக்கொன்றதாக முதலில் செய்திகள் வந்தன. பின்னர், பில்லேடனின் உடலில் எந்த மனிதக்குண்டுகளோ அல்லது ஆயுதங்கள் ஏதும் தரித்திருக்காத நிராயுத பாணியாகவே அவர் இருந்நிருந்தார் எனச் செய்திகள் மாற்றப்படத் தொடங்கியது.

இவ்வாறு நாளொரு வண்ணமும் பொழுதொரு வண்ணமுமாகப் பல புதிய செய்திகள் வெளிவரத் தொடங்கியது. பில்லேடன் தனது தாய்வழிச் சொந்தத்தில் முதலாவது திருமணத்தைப் புரிந்திருந்தார். 14வயதான இப்பெண்ணை பில்லேடன் தனது 17வயதில் திருமணமும் செய்திருந்தார். பின்லேடன் இதுவரை 5 பெண்களைத் திருமணம் செய்திருந்தார். முதல் இரு மனைவிகளும் விவாகரத்துச் பெற்றுவிட்ட நிலையில், ஏனைய 3 மனைவிகளும் இத்தாக்குதலை அடுத்து அதிகாலையிலேயே பாக்கிஸ்தான் இராணுவத்தால் கைது செய்யப்பட்டும் இருந்தனர். பில்லாடனின் இளம் ஆசைமனைவியான ஏமன் நாட்டைச் சேர்ந்த அமெல் அலி ஷாடா(29) இத்தாக்குதல் நடக்கும் போது பில்லேடனுடனே தங்கியிருந்தார். இவர் இத்தாக்குதலில் காலில் குண்டடியும் பட்டிருந்தார். ஏனைய இரு மனைவிகளும் 6 பிள்ளைகளும் மற்றும் 4 உதவி யாளர்களும் இஸ்லாமாபாத்துக்கு வடக்கே 60 கி.மீ தொலைவிலுள்ள மலைப்பகுதியில் வைத்துக் கைதுசெய்யப்பட்டதாகவே செய்திகள் வெளிவந்தன. பில்லாடனின் மகனான கம்ஷா (20) இத்தாக்குதலில் கொல்லப்பட்டதாகச் செய்திகள் வந்திருந்த போதும் இது சரிவர உறுதிப்படுத்தப்பட்டிருக்கவுமில்லை. இறுதியாகத் தாக்குதல் நடந்த சமயம் இம்மகன் அவ்விடத்தை விட்டுத் தப்பிச் சென்றுவிட்டதாக பில்லேடனின் இம்மூன்று மனைவிகளும் பாக்கிஸ்தான் இராணுவத்திடம் தெரிவித்திருப்பதாக பிறிதொரு செய்தியும் வெளிவந்துமிருந்தது.

அமெரிக்கா தாங்கள் மேற்கொண்ட இந்த நடவடிக்கை பற்றி பாக்கிஸ்தானுக்கோ வேறு நாடுகளுக்கோ ஏதும் தெரியாது என்றும் கூறியுள்ளது. நடவடிக்கை முடியும் தருவாயில் பாக்கிஸ்தான் போர் விமானம் ஒன்று தமது கெலிகப்டரை நெருங்கியதாகவும் "நல்லவேளையாக" அது தம்மீது தாக்குதல் நடத்தாமலே சென்றுவிட்டதாகவும் ஜான் பிரீனன் வாஷிங்டன் செய்தியாளரிடம் கூறியுள்ளார். மேலும் இத்தாக்குதல் நடவடிக்கையின்போது எந்த ஒரு பொதுமக்களுக்கும் காயமேற்படாதவாறு தாம் வெற்றிகரமாக முடித்திருப்பதாக வெள்ளை மாளிகை இவ்வெற்றியை தம்மக்களிடம் தெரிவித்திருந்தது. பில்லாடனை வைத்து அமெரிக்கா தொடங்கிய இந்தப் பிரமாண்டமான சதுரங்க ஆட்டத்தின் ஆட்டத் தொடர்....



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## ஆட்டம்: 1

அல்கய்டா எனப்படும் "தளம்" அமெரிக்க ஏகாதியத்தியம் மற்றும் ரசிய சமூக ஏகாதிபத்தியங்களாக இருதுருவ ஏகாதிபத்திய பலப்பரீட்சை இவ்வுலகத்தை ஆட்டிப்படைத்த காலத்தில், ரசியா ஆப்கானிஸ்தானில் காலூன்றி இருந்தது. சோவியத் துருப்புக்களுக்கு எதிராகப் போராட இஸ்லாமிய கெரிலாப்படையான முகாஜதீனி அழைக்கப்பட்டார். தனது தாய்நாடான சவுதி அரேபியாவில் முகாஜிதீனிகளுக்கு ஆதரவாக அரேபிய மாணவர் இளைஞர் தொண்டர் படையை அமைக்க அமெரிக்கா பில்லாடனைத் தேர்ந்தெடுத்தது. ஆண்டொன்றுக்கு 22ஆயிரம் கோடி ரூபா வர்த்தகம் செய்யும் பெரும் செல்வந்த குடும்பத்தில் 1957 மார்ச் 10ஆம் திகதி பில்லேடன் பிறந்திருந்தார். அட்டாசின் 23 மனைவிகளுக்குப் பிறந்த மொத்தம் 54பிள்ளைகளில் 17வது மகனாக அவரது பத்தாவது மனைவிக்கு (ஹமிதா) பிறந்த பில்லேடன், "தளம்" என்ற அர்த்தத்தைக் கொண்ட அல்கைடா என்ற இயக்கத்தை அமெரிக்க உதவியுடன் உருவாக்கினார். இதற்கு முன்னர் ஆப்கானின் புனிதப் போருக்கு பணம் திரட்ட "மக்தாப் அல் கடாமத்" என்ற அமைப்பை (84) இவர் நிறுவியும் இருந்தார்.

ஆப்கானை சோவியத் ஒன்றியம் ஆக்கிரமித்தபோது, அமெரிக்கக் கட்டளைப்படி தனது தாய்நாடான சவுதி அரேபியாவில் இருந்து ஆப்கானுக்கு வந்திருந்தார் பில்லேடன். 79 முதல் முதல் 10 வருடங்கள் ஆப்கானில் ரசிய படைகளுக்கு எதிராக, தமது எசமானருக்காகச் செயற்பட்டார். அங்கிருந்த முகாஜதீன் அமைப்பில் இணைந்து முஸ்லிம் அடிப்படைவாதத்துக்கான ஆப்கானுக்காகப் போரிட்டார். ரசிய சமூக ஏகாதிபத்திய படைகளுக்கு எதிராக பாக்கிஸ்தான் உளவுப்படையான (ஐ.எஸ்.ஐ) என்ற உளவுப்படையின் ஊடாக அமெரிக்கா தீவிரவாதிகளை ஆப்கானிலும், பாக்கிஸ்தானிலும் உருவாக்கியது. ரசியாவுக்கு எதிரான தன்னியல்பான மாணவர் கிளர்ச்சிகளை ஒன்றுதிரட்டி முல்லா ஓமர் தலைமையில் தலிபான் என்னும் அடிப்படைவாத இயக்கத்தையும் அமெரிக்காவுக்காக உருவாக்கியது பாக்கிஸ்தான் உளவுப்படை. இதே காலத்தில் தான் ஈரான் - ஈராக் போர் நடந்து வந்தது (80-88). இப்போரில் சதாமுக்கு உறுதுணையாக அமெரிக்கா உதவியது. ஆப்கானில் இருந்த முகாஜிதீன் அமைப்பினருக்கும், பாக்கிஸ்தான் உளவுப்படையால் உருவாக்கப்பட்ட இதர தீவிரவாதக் குழுக்களுக்கும் அமெரிக்கா உதவிகளைத் தாராளமாக வழங்கி வந்தது. கைபர் கணவாய் இந்துக்குஸ் மலைத்தொடர்ப் பகுதி வழியாக ஆப்கானுக்குள் படைகளும், ஆயுதங்களும் கொண்டுவந்து குவிக்கப்பட்டன. அமெரிக்காவே இவர்களைப் பயிற்றுவித்து உருவாக்கியும் வளர்த்தது. இரசியாவுக்கு எதிரான செயற்பாடுகளுக்கு பாக்கிஸ்தான் மற்றும் ஆப்கானில் முகாஜிதீன்களின் உதவியைப் பெற அமெரிக்கா அவர்களை வளர்த்தும் விட்டது. இது தொடர்பாக கடந்த வருடம் அமெரிக்க இராணுவ அதிகாரி டேவிட் பெட்ரஸ் ஊடகம் ஒன்றுக்கு இவ்வாறு தெரிவித்தும் இருந்தார். "எங்களது பணம் சவுதி அரேபியா மற்றும் பலர் அளித்த பணம்தான் தீவிரவாதிகளை உருவாக்குவதற்கு ஐ.எஸ்.ஐ க்கு உதவியாக இருந்தது".

ஈரான்-ஈராக் போர் முடிந்த கையோடு சதாம் குசைன் படைகள் குவைத்துக்குள் ஊடுருவத் தொடங்கியது. இதை அமெரிக்கா எதிர்க்கவும் எச்சரிக்கை செய்யவும் தொடங்கியவுடன், ரசியா சதாமுக்கு உதவியது. இரண்டு வருடத்துக்குள் சோவியத் ஒன்றியம் 16 துண்டுகளாக உடைந்தது (92). இவ்வாறு உடைந்த ஐந்து துண்டுகளான துர்மேனிஸ்தான், உஸ்பெகிஸ்தான், கசாக்கிஸ்தான், தாட்சிகிஸ்தான், கீர்கிஸ்தான் ஆகிய முன்னாள் சோவியத் குடியரசுகள் தமது பிரதேசங்களில் அமெரிக்கா இராணுவ நடவடிக்கைக்கும் தளம் அமைப்பதற்கும் கதவுகளை அகலத் திறந்து விட்டன. இந்த அமெரிக்கப்படைகளின் புதிய வரவு, மத்திய ஆசியாவின் சரித்திரத்தில் ஒரு புத்தம்புதிய அத்தியாயமாகும். மகா அலெக்சாண்டருக்குப் பின்னர் அமெரிக்காவும் மற்றைய மேற்குலக இராணுவங்களும் இம்மண்ணில் காலடிவைக்கும் ஒரு பிரமாண்டமான சதுரங்கப் பலகையை இது வழங்கியது.

இந்தக்காலங்களில் பில்லேடன் உட்பட இந்தத் தீவிரவாதிகளை ஆப்கானின் சுதந்திர வீரத் தலைவர்களாக அன்றைய அமெரிக்க அதிபர் ரீகன் புகழ்ந்தும் வந்தார். கூடவே, இந்த நிகழ்காலத்தில் பொஸ்னியாவிலும், கொசோவாவிலும் நடந்த யுத்தங்களிலும் பில்லேடன் அமெரிக்காவுக்குக் கையாளாக உதவியே வந்தார். குவைத் மண்ணில் இருந்து சதாமின் படைகளை விரட்ட தனது தாய்மண்ணான சவுதியில் அமெரிக்கப் படைகளைக் கொண்டுவருவதை பில்லேடன் எதிர்க்கத் தொடங்கினார். எகிப்தில் இருந்து தொடங்கிய முஸ்லீம் சாம்பிராச்சியத்துக்கான, முஸ்லீம் அடிப்படைவாதம் "புனிதப்போராகக்" கட்டப்பட்ட நிலையில் அமெரிக்காவின் இந்த நடவடிக்கை முரண்பாடுகளை இயல்பாகவே தோற்றுவித்தது. அல் கைடாவின் இந்த முரண்பாடுகள் 94ஆம் ஆண்டு பில்லாடனின் தாய் மண் (சவுதி அரேபியாவின்) பிரஜா உரிமையைப் பறிப்பதில் போய்முடிந்தது. இதனால் பில்லேடன் தனது முதலாவது மனைவி நஜ்வா கானம் மற்றும் பிள்ளைகளுடன் சூடானில் தஞ்சமடைந்தார். 80களில் எண்ணையைக் கண்டறிந்த சூடானின் அப்போதைய சர்வாதிகார அதிபரான நிமோரி சவுதி அரேபியாவுடன் நெருக்கமான உறவுகளைப் பேணிவந்தார். இஸ்லாமிய ஷாரியச் சட்டத்தை நாடெங்கிலும் திணித்தவரும்





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

இவர்தான். இஸ்லாமியர் அல்லாத தென் சூடானியர் இதற்கெதிராகக் கிளர்ந்தெழச் செய்தனர். பேர் நகரில் இருந்த இராணுவ முகாம் சூடான் அரசுக்கு எதிராகக் கலகத்தில் குதித்தது. இதே நகரத்தைச் சேர்ந்த இராணுவத் தளபதி ஜான் கரங் தென் சூடான் கிளர்ச்சிக் காரர்களுடன் இணைந்து போராட்டத்தைத் தொடங்கினார். 83 இல் இவரது தலைமையில் உருவானதுதான் "சூடான் மக்கள் விடுதலை இயக்கம்" (SPLM). 89 இல் சூடானின் இராணுவத் தளபதி அல்-பீர், இஸ்லாமிய முன்னணியான அடிப்படைவாதக் கட்சிகளுடன் இணைந்து ஆட்சிக் கவிழ்ப்பை நிகழ்த்தினார்.

இதையடுத்து சூடானின் எண்ணை வளத்தை கொள்ளையிடுவதற்கு அமெரிக்க ஏகாதிபத்தியம் என்கின்ற தீராத விளையாட்டுப்பிள்ளை அவசரமாக அலுவலில் இறங்கியது. இது தென் சூடானின் "தனிநாட்டுக்" கோரிக்கையாக உசுப்பிவிடப்பட்டது. கிறீஸ்தவ தெற்குச் சூடானில், கிறீஸ்தவ சபைகள் உட்பட மேற்குலகம் கெனியா வழியாக அமெரிக்காவுடன் இணைந்து ஆயுதங்களை வழங்கியது. தென் கிராமப்புறங்கள் சூடான் மக்கள் விடுதலைப் படையால் சூழப்பட்டு, ஓர் நீண்ட நெடிய கொடிய உள்நாட்டு யுத்தம் (22 வருடம்) நடந்து முடிந்தது. இந்த எண்ணைக்கான ஏகாதிபத்தியத்தின் மனக்கணக்கால் யுத்தத்தில் ஏறத்தாழ 2லட்சம் மக்கள் கொல்லப்பட்டதுடன், 4லட்சம் மக்கள் வரை அகதிகளாகினர். இந்த யுத்தக்காலத்தில் தான் பில்லேடன் சூடானில் தஞ்சமடைந்திருந்தார் (94). இங்கிருந்துதான் அல் கைடாவின் முதலாவது தாக்குதலை பில்லேடன் தொடங்கினார். தொடர்ந்து நைரேபி, கெனியா, தன்சானியா உள்ளிட்ட இடங்களில் அமைந்திருந்த அமெரிக்கத் தூதரகங்களை அல் கைடா தாக்கத் தொடங்கியது. சூடான் அதிபர் அல் - பீர் டார்பர் பகுதியில் ஓர் இனப்படுகொலையைக் கட்டவிழ்த்து விட்டதற்காக அவரை ஐரோப்பிய அமெரிக்க நாடுகள் "போர்க்குற்றவாளியாக" அறிவித்தது. (இன்று மகிந்தவைப் போல). இனப்படுகொலை மற்றும் அல் கைடா போன்ற பயங்கரவாதிகளுக்கு அடைக்கலத்தைக் கொடுத்திருந்த சூடான் அதிபர், போர்க்குற்றவாளியாக சர்வதேச நீதிமன்றத்தால் சித்தரிக்கப்பட்டார். பயங்கரவாதப் பட்டியலில் சூடான் நாடு சேர்க்கப்பட்டது.

இந்த நெருக்குவாரங்களால் சூடான் அரசு பில்லேடனையும் அவரது குடும்பத்தையும் 96 இல் நாடு கடத்துவதாக அறிவித்தது. இதையடுத்து பில்லேடன் திரும்பவும் ஆப்கானிஸ்தானில் தஞ்சமடைந்தார். இக்காலத்தில் அமெரிக்காவால் பாக்கிஸ்தான் உளவுப்படை ஊடாக உருவாக்கப்பட்ட தலிபான்கள் மற்றும் தீவிரவாதக் குழுக்களின் உதவியுடன் ஆப்கான் அரசு வீழ்த்தப்பட்டிருந்தது. ரசிய சமூக ஏகாதிபத்தியத்தின் ஆதரவாளனும் முன்னாள் ஆப்கான் அதிபர் முகமத் நஜீபுல்லாவையும் அவரது சகோதரனையும் தலிபான்களும் ஏனைய (அமெரிக்க) பாக்கிஸ்தான் தீவிரவாதிகளும் அடித்தே கொன்றனர். கொல்லப்பட்ட இவரது உடலை காபூல்வரை ஜீப்பிலே கட்டி இழுத்து, தெருவோரத் தூண் ஒன்றில் தொங்கவிட்டனர். தலிபானின் இந்தத் தர்பார் ஆட்சிக் காலத்தில் (98) பில்லேடன் புனிதப் போரைப் பிரகடனப்படுத்தினார். பாலஸ்தீனத்துக்கு எதிராகவும், இஸ்ரேலுக்கு ஆதரவாகவும் அமெரிக்கா செயற்படக் கூடாது என்றும், இஸ்லாமிய நாடுகளில் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கும் அமெரிக்க இராணுவத்தை உடனே வாபஸ் பெறவேண்டும் எனவும் அல்கைடா கோரியது. அப்படிச் செய்யாதவரை அமெரிக்க இராணுவத்தையும், அந்நாட்டினரையும் கொன்று குவிக்கும் "புனிதப் போரான" பத்வா மத உத்தரவை பில்லேடன் பிறப்பித்தார். அடிப்படைவாதம் எப்பொழுதும் எந்த மக்களுக்கும் எதிரானது என்பதை அமெரிக்கா சரியாப் புரிந்து கொண்டது. இது தமக்கு இலாபமானது என்பதாலேயே இந்த நாறும் ஏகாதிபத்தியம் இதை வளர்த்தது. கிழக்கு ஆபிரிக்க நாடுகளில் இருந்த அமெரிக்கத் தூதரகங்கள் மீதான தாக்குதலுக்கு பதிலடி கொடுக்கத் தொடங்கியது அமெரிக்கா. அமெரிக்க கிளிண்டன் நிர்வாகத்தால் அப்கான் தளமீதான தாக்குதல் நடந்தது. இத்தாக்குதலில் பில்லேடன் உயிர் தப்பினார். அவர் இரு நிமிடங்களுக்கு முன் அத்தளத்திலிருந்து வெளியேறி இருந்தார். அமெரிக்காவின் பல மில்லியன் பெறுமதியான கப்பலை பில்லேடன் ஓட்டைவிழுத்தித் தாக்கியபோது, பில்லேடன் என்றபெயர் மூலை முடுக்கெல்லாம் பிரபல்யமாகத் தொடங்கியது. அதைத் தொடர்ந்து அமெரிக்காவின் இரட்டைக் கோபுரத் தாக்குதல் பில்லேடனை பயங்கரவாதத்தின் கோபுரத்தில் நிறுத்தியது.

**ஆட்டம்: 2**




அல்∴பைடா எனப்படும் "இலாபம்" இந்தப் பிரமாண்டமான சதுரங்கப் பலகை வாஷிங்ரன் இரட்டைக் கோபுரத் தாக்குதலுக்கு முன்னர், பயங்கரவாதிகளை உருவாக்குவது மற்றும் இராணுவச் சதிகள் (படுகொலைகள்) மூலமாகவே ஆடப்பட்டது. 2001ஆம் ஆண்டுக்குப் பின்னான இந்தப் பத்துவருடத்தில் இதே பயங்கரவாதத்தை ஒழிக்கும் யுத்தமாகவும், இறுதி 5வருடங்களில் புதிய தொடக்கமாகவும் ஆடப்பட்டது. இந்தப் பிரமாண்டமான சதுரங்கப் பலகை யூரேஷியாவை அடிப்படையாகக் கொண்ட உலகின் பிரமாண்டமான ஒரு துருவ தலைமைத்துவத்துக்கான யுத்த ஆட்டத் தொடக்கமாகும். குறிப்பாக தெற்காசியாவின் பாரசீக வளைகுடாவை மையப்படுத்திய ஒரு நீண்டகால காலனித்துவ யுத்தம் என்ற கண்ணோட்டத்திலேயே இந்தச் சதுரங்க ஆட்டம்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தெரிவு செய்யப்பட்டதாகும். இருப்பினும், 2001 ஆம் ஆண்டு நியூயோக் இரட்டைக் கோபுரத்தை அல் கைடா விஸ்வரூபம் எடுத்துத் தாக்கியதாக அமெரிக்கா இந்தச் சதுரங்க ஆட்டத்தை வெளிப்படையாகவே ஆடத் தொடங்கியது. பயங்கரவாதத்துக்கு எதிரானது என்ற கோசத்தோடு மேற்குலகையும் சேர்த்து வெளிப்படையாக பலமாக ஆடநினைத்த ஆட்டமாகும்.

2025ஆம் ஆண்டுக்குள் அமெரிக்காவின் பொருளாதாரத்தை உலகில் முதலிடத்திலும், ஐரோப்பிய யூனியனை இரண்டாம் இடத்துக்கும் கொண்டுவருவதற்கான ஒரு மூர்க்கத்தனமான ஆக்கிரமிப்பு ஆட்டமாகும். சுருங்கச் சொன்னால் இது மத்திய ஆசியாவை ஆக்கிரமிக்கும் சுனாமி ஆட்டமுமாகும். மத்திய ஆசியா எனப்படுவது சோவியத் யூனியனில் இருந்து உடைந்த மேற்சொன்ன 5நாடுகள் உள்ளடங்கலாக, ஈரான், ஆப்கானிஸ்தான், பாக்கிஸ்தான் ஆகிய நாடுகளுக்கு வடக்காக அமைந்திருக்கிறது. அதேவேளை அதன் மேற்கெல்லையாக காஸ்பிக் கடலையும், கிழக்கில் சீனாவையும் கொண்டு அமைந்திருக்கும் கனிமவளங்கள் கொட்டிக்கிடக்கும் ஒரு கேந்திரப் பிரதேசமாகும்.

பில்லேடனை "சுதந்திர வீரர்கள்" என்று சொன்ன வெள்ளைமாளிகையே இப்போது "பயங்கரவாதி பில்லேடன் (அல் கைடா)" என்று பிரகடனப்படுத்தியது. "உலகப் பயங்கரவாதி பில்லேடன்" என்பது, காஸ்பியன் பள்ளத்தாக்கில் இருக்கும் அமெரிக்காவுக்கான புதிய வளங்களாகும். பாரசீக வளைகுடாப் பகுதியில் இருந்து மேற்கு நோக்கி குழாய்வழியாக உறிஞ்சி இழுக்கப்படும் கனிவளத்துக்கான இரண்டாவது ஆட்டமே, அல் ஃபைடா (இலாபம்) என்பதே இவ்வாட்டம். இவ்வாட்டமானது 2001 இரட்டைக்கோபுரத் தாக்குதலுடன் மத்திய ஆசியா மற்றும் பாரசீக வளைகுடா மீதான அமெரிக்க புஸ்சின் ஆட்டமாக ஆரம்பமாகி இருந்தது. இதற்காக அமெரிக்கா உள்நாட்டு மக்களுக்கு இவ் ஆட்டத்தில் ஏற்படும் இழப்புக்கள் மற்றும் மனிதப்படுகொலைகள் யுத்த மீறல்கள் அனைத்தையும், ஒரு புனிதமான ஜனநாயக உணர்வாக தமது மக்களுக்குக் காட்டத் தரைமட்டம் ஆனதுதான் வாஷிங்டன் இரட்டைக் கோபுரம். இதற்காகவே அமெரிக்காவால் வளர்த்த கிடாயே அதன் மார்பில் பாய்ந்ததான "கதையை" மறுபுறத்தில் மறைக்க, அல் கைடாவை அல் ஃபைடாவாக தனது இலாபமாக மாற்றியது அமெரிக்கா. பில்லேடன் என்கின்ற தனது வேள்வித் தலைக்கிடாயின் தலைக்கு 25 மில்லியன் டொலர் சன்மானமாகவும் அறிவித்தது அமெரிக்கா. அமெரிக்காவின் இரட்டைக் கோபுரம் சரிந்து விழுந்தது போக, இதன்பின் உலகில் கோடானகோடி சொத்துக்கள் மண்ணாய்ப் போனது. பல இலட்சக்கணக்கான உயிர்கள் கொத்துக்கொத்தாகப் பலியெடுக்கப்பட்டன. இந்த உலகத்தால் ஒருபருக்கை சோற்றைக்கூட கொடுக்க முடியாத பில்லியன் கணக்கான அகதிகளையும் உருவாக்கி விட்டது. 2001 ஆண்டுக்குப்பின் பயங்கரவாத்தை கைவிடவேண்டும் என்று சொல்லப்பட்ட போதும், பயங்கரவாதத்தை வலிந்த யுத்தத்தால் தீர்ப்பதே நடைமுறையாக எங்கும் இருந்தது.

2001 ஆண்டு கட்டுநாயக்கா விமானநிலையத்தை தாக்கிய விடுதலைப் புலிகளும், இதே பயங்கரவாதப் பட்டியலில் இருந்த சூடானும் 2002 இல் தத்தமது உள்நாட்டுப் பிரச்சனையில் சமாதான பேச்சுக்களுக்குத் திரும்பியிருந்தன. சூடானில் பிரிவினையையும் இலங்கையில் அதிகாரப் பரவலும் இந்த ஆட்டத்தால் முன்வைக்கப்பட்ட விசித்திரமான ஒரு நாணயத்தின் இரண்டு பக்கங்கள். இலங்கையில் புலிகளின் இருப்பும், சூடானில் பிரிவினையுடன் கூடிய அமைதியும் இந்த ஆட்டத்தின் இலாபமாகப் பார்க்கப்பட்டதே ஒழிய மக்களுக்கான தீர்வாகப் பார்க்கப்படவில்லை. சூடானின் எண்ணை வளத்தையும் கனிமவளங்களையும், நைல் நதியின் நீராதார சொர்க்க வளங்களையும் கொள்ளை இடுவதற்கான பிரிவினையாக அது இருந்தது. இலங்கையில் ஒரு பிடி மண்ணும், ஒரு குவளை கடலும் உலகமயமாதலுக்காக விளைகின்ற நில, கடல் வளங்களின் மேற்கின் பங்குப் போட்டியின் இலாபமாக "அதிகாரப் பரவலாக" இது இருந்தது. சூடானின் உள்நாட்டு யுத்தத்தில் வெளியேறிய மேற்கு எண்ணைக் கம்பனிகளால் அங்கு சீனாவின் இருப்போடு போட்டி போட முடியவில்லை. சூடானில் கொப்பளித்துக் கொண்டிருக்கும் எண்ணை இருப்பான அபெய் மாகாணத்தை சூடானுக்கே சொந்தமில்லாமல் வடக்குத் தெற்காகப் பிரித்து விடுவதே இவ்வாட்டத்தின் இலாபமாகும். இது சீனாவை அகற்றிவிட்டு மேற்கத்தைய எண்ணைக் கம்பனிகள் காலூன்று வதற்கு வசதியான பிறிதொரு ஆட்டமுமாகும். 2003இல் பயங்கரவாத்துக்கு எதிரான யுத்தம், அணு ஆயுத்துக்கு எதிரான போர் என ஆப்கான் முதல் ஈராக் வரை இவ்வாட்டம் ஆடப்பட்டது.

ஈராக்கில் 4வருடத்துக்குள் 12இலட்சம் மக்கள் கொல்லப்பட்டனர். 361ஊடகவிய லாளர்கள் கொல்லப்பட்டனர். இதில் 33பேர் பெண் ஊடகவியலாளராக இருந்தனர். இதில் 337பேர் ஈராக்கைச் சேர்ந்தவர்கள். 24பேர் வெளிநாட்டைச் சேர்ந்த ஊடகவியலாளராக இருந்தனர். வன்முறை அற்ற முறையில் 6ஊடகவியலா-ளர்கள் கொல்லப்பட்டனர். இதில் 2பெண்களாவர். 201செய்தியாளர்களும், 29படப்பிடிப்பாளரும், 06 வீடியோ பதிவாளரும், மேற்கூறியவர்களுக்குத் துணையான 43பேரும், 12மொழிபெயர்ப் பாளர்களும், 17வாகன ஓட்டுனரும், 15 பாதுகாவலரும், 14உதவியாளர்களுமாக மொத்தம் 337ஈராக் ஊடகவியலாளர்கள் கொல்லப்பட்டிருந்தனர். அணுவாயுதம் என்று சாக்குப்போக்குச் சொல்லி அமெரிக்கா ஆடிய இந்த ஆக்கிரமிப்பு யுத்தத்தில் சதாம் கைதுசெய்யப்பட்டு தூக்கில் போடப்பட்டார். இவ் ஆக்கிரமிப்பு யுத்தம் ஓய்வுக்கு வருவதற்கு ஒரு வருடத்துக்கு முன்னமே வடஆபிரிக்கா மற்றும் மேற்காசியாவைச் சேர்ந்த அரபு நாடுகளில் அமெரிக்காவின் கூட்டாளிகளால் கொண்டுவரப்பட்ட தனியார் மயமாக்கலால் வேலையில்லாத் திண்டாட்டம் அதன் எல்லையை மீறியிருந்தது. அமெரிக்காவுக்கும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

மற்றும் மேற்கு நாடுகளுக்குமாக உள்ளூர் எடுபிடிகள் இணைந்து நடத்திய பகற் கொள்ளையால் இந்நாடுகள் திவாலாகிப் போயின. மத்தியதர வர்க்கத்து இளைஞர்களின் வேலையில்லாத் திண்டாட்டம் விண்ணை இடித்தது. ஏறத்தாள சரி பாதியான இந்நாட்டு மக்கள் வெறும் 2 டொலருக்கு நாட்கூலியாக வாழவேண்டிய வறுமை வயிற்றில் அடித்தது. எங்கே இது புரட்சியைக் கொண்டுவந்து விடுமோ என்று இந்தப் பிரமாண்டமான சதுரங்க ஆட்டம் பயந்துபோனது. அதனால் அதன் அரையிறுதி ஆட்டத்தை “புதிய துவக்கமாக” ஆட நினைத்தது.

இந்த இரட்டைக் கோபுரத் தாக்குதலுக்குப் பழிவாங்க அமெரிக்கா மத்திய ஆசியா மற்றும் வளைகுடா மீதான ஆக்கிரமிப்பை ஆரம்பித்திருந்தது. செப்.11 -2001 இரட்டைக் கோபுரத் தாக்குதலில் விமானக் கடத்தல் காரராக 15பேர் கைதாகி இருந்தனர். இவர்கள் அனைவரும் சவுதி அரேபியக் குடிமக்களாகவே இருந்தனர். இதில் ஒருவர்கூட ஈரானில் இருந்தோ மற்றும் பாக்கிஸ்தான் ஆப்கானில் இருந்தோ வந்திருக்கவுமில்லை. மேலும் இத்தாக்குதலில் பில்லேடன் சம்மந்தப்பட்டதை அமெரிக்கா ஆதாரபூர்வமாக நிரூபித்தால், பில்லேடனை சரணடையச் செய்ய தாங்கள் தயாராக இருப்பதாக தலிபான் அறிவித்தது. ஆனாலும் அமெரிக்கா இதைக் காதில் விழுத்தவில்லை, ஆப்கான் மீது மிதமிஞ்சி ஆக்கிரமித்தது. அங்கு தனது வளர்ப்பு நண்பனுக்கு (வேள்விக்கிடாயுக்கு) ஆதரவாகச் செயற்பட்டுவந்த தலிபான் ஆட்சியை வீழ்த்தியது அமெரிக்கப்படை. அன்றிலிருந்து தொடங்கியதுதான் பில்லேடன் மற்றும் ஸவாஹிரி போன்ற முக்கிய வளர்ப்புக் கிடாய்களின் மீதான இரத்த வேள்வி “ஒசாமா பில்லேடனும், அல் கைடா இயக்கத்தின் முக்கிய தலைவர்களும் எங்கிருந்தாலும் அங்கு நேரடியாக தாக்குதல் நடத்துவோம்” என அமெரிக்க அரசு சூழுரைத்தது. இக்காலப் பகுதியில் சித்திரல் மலைப் பிராந்தியத்தில் பில்லேடனும், தலிபான் தலைவரும் ஆன முல்லாவின் நடமாட்டங்கள் காணப்படுவதாக அமெரிக்கா கூறியது. சித்திரல் மலைப் பிரதேசம் சீன எல்லையை ஒட்டிய வடமேற்குப் பிரதேசமும், மற்றும் ஆப்கானின் குக்கிரம் பள்ளத்தாக்கில் இருந்து டோனரா போரா மலைக்குன்றுவரை நீண்டு காணப்படும் பகுதியாகும். 2001 ஆம் ஆண்டுக்குப் பின், பில்லேடன் பாக்கிஸ்தானுக்குள் உள்நுழைய ஏதுவாக டோரா போரா யுத்தக்களத்தை புஸ் நிர்வாகம் தமது உளவுக்காய்களாக இச்சதுரங்கப்பலகையைப் பயன்படுத்தியது. இது 1996 இல் புலிகளை வன்னிக்குள் அனுப்பியது போன்றது.

இந்தப் பிரமாண்டமான சதுரங்க ஆட்டத்தின் முதல் பத்துவருடத்தின் (2001-2011) கடைசி முதலாண்டுக் காலத்தில் பில்லேடனைப் பிடிப்பதற்கான அமெரிக்க அரசு ஆப்கானில் மேற்கொண்ட தாக்குதல்கள் குறித்து கடந்த வருடம் அமெரிக்கத் தலைமை வழக்கறிஞர் எரிக் ஹோல்டன் ஒரு செய்தியைக் கூறியிருந்தார். பில்லேடனை உயிருடன் பிடித்து அமெரிக்க நீதிமன்றத்தில் நிறுத்தும் சாத்தியம் தமக்கு இல்லை என்று அவர் அடித்துக் கூறியிருந்தார். மேலும், “ஒன்றில் அமெரிக்கப்படை பில்லேடனைக் கொன்று விடும் அல்லது அவரது ஆட்களாலேயே அவர் கொல்லப்பட்டு விடுவார். எனவே உயிருடன் ஒசாமாவை நீதிமன்றத்தில் நிறுத்துவது என்பது சாத்தியமில்லை” என்றும் அவர் கூறியிருந்தார். பில்லேடனை உயிருடன் பிடித்து வந்து அமெரிக்க நீதிமன்றத்தில் நிறுத்தினால், எந்த ஓர் அமெரிக்கக் குடிமகனுக்கும் உள்ள உரிமையை பில்லேடன் பயன்படுத்திக் கொள்வார் என்ற “குடியரசுக் கட்சியினரின்” எதிர்வாதத்துக்கே இவர் இவ்வாறு பதிலளித்தார். பில்லேடனைக் குறிவைத்து சாட்டுக்கு அமெரிக்கா ஆப்கானில் தாக்குதலைத் தொடுத்துக் கொண்டிருந்த வேளையில், பில்லேடன் பற்றி நாளொரு செய்தியும் பொழுதொரு வதந்தியுமாக செய்திகள் வெளிவந்து கொண்டிருந்தன.

- பில்லாடனுக்கு புற்றுநோய்.
- சிறுநீரகம் பழுதடைந்து விட்டது.
- பாக்கிஸ்தானுக்குத் தப்பி ஓடிவிட்டார்.
- ஆப்கான் மலைப்பகுதியில்தான் அவர் பதுங்கியுள்ளார்.
- ஆப்கான் எல்லையை ஒட்டிய பாக்கிஸ்தான் பழங்குடி மக்கள் மத்தியில் தங்கியுள்ளார்.
- பில்லேடன் இறந்துவிட்டார்.

இப்படிப் பல செய்திகள் வெளிவந்தன! பில்லேடன் இறந்து விட்டதாக இரண்டு வருடங்களுக்கு முன்(28 .04. 09) பாக்கிஸ்தான் அதிபர் சர்தாரி தெரிவித்தார். ஆனால் இதற்கு தம்மிடம் ஆதாரம் இல்லை என்றும் கூறினார். ஆனாலும் இச் செய்தி உலக ஊடகங்களில் பிரபல்யமானது. (இக்காலத்தில் ஒசாமா இறந்து விட்டதாகவே சுயாதீன ஊடகங்கள் நம்பின) இச்செய்தியை முதன் முதலில் அமெரிக்க அதிபர் ஒபாமா மறுத்தார். அவர் பாக்கிஸ்தானில் மறைந்திருப்பதாகவே அவர் கூறினார். கடந்த ஒக்டோபர் மாதம் 19ஆம் திகதி, 2010 பில்லேடன் பாக்கிஸ்தானின் உளவு அமைப்பான (ஐ.எஸ்.ஐ) இன் பாதுகாப்புடன் பாக்கிஸ்தானின் கிழக்குப் பகுதியில் வசிப்பதாக (சீ.என்.என்) ஒரு செய்தியை வெளியிட்டது.- ஆப்கானிலுள்ள நேட்டோப் படைகளின் மூத்த இராணுவத்தலைவர் ஒருவரை மேற்கோள் காட்டி இத்தகவல் சீ.என்.என் இல் வெளியாகியிருந்தது. பில்லேடனும் அவரின் நெருங்கிய இதய சகாவான அய்மன் அல் ஸவாஹிரி (பில்லேடனின் மூளை) தனித்தனி வீடுகளில் வசிப்பதாகத் தெரியவந்துள்ளது. இவர்கள் இருவரதும் வீடுகளும் அருகருகே இருப்பதற்கு வாய்ப்புக்களில்லை. அவர்கள் மலைக்குன்றுகளில் பதுங்கி இருக்கலாம் என்று கூறப்படுவது மிகவும் தவறான தகவல் என்றும் அந்த பெயர்குறிப்பிட விரும்பாத நேட்டோவின் மூத்த அதிகாரி கூறியதாக அந்தச் செய்திகள் மேலும் தெரிவித்தன. இதே வேளை பில்லேடன் ஆப்கானில் இல்லை என்று அந்நாட்டின் அயலுறவு அமைச்சர் ஸல்மாய் ரசௌல் கூறியிருந்தார்- “பாக்கிஸ்தானும் பங்கரவாதத் தாக்குதலுக்கு இலக்காவதால் அந்நாட்டுடன் பேச்சுவார்த்தை நடத்தி வருகிறோம். பயங்கரவாத எதிர்ப்பில் கூட்டுறவு கொள்ள விவாதித்து வருகிறோம் என்றும் (08.11.10)இல் கூறினார். இவ்வாறு செய்திகள் அமளிதுமளியாக வெளியா-கிக் கொண்டிருக்கும் போது, அல் கைடாவைத் தாக்குகிறோம் என்று சொல்லிக் கொண்டு அமெரிக்கா

பாக்கிஸ்தானின் எல்லைப் பகுதிகளைத் தாக்கத் தொடங்கியது. இவ்வாறு அது வசிரிஸ்தானைத் தாக்கத் தொடங்கியது. இப்பிரதேசம் சீன வடமேற்கு முதல் ஆப்கான் வரையான பள்ளத்தாக்குப் பளங்குடியினரின் பிரதேசமாகும். 2009 முதல் இன்றுவரை இது பயங்கரவாதிகளைத் தாக்குகிறோம் என்று கூறியே இத்தாக்குதலைத் தொடுத்துவந்தது. 2009 இல் பில்லாடனின் மூன்றாவது மகனான சாட் கொல்லப்பட்டது தவிர இவ்வருடம் அமெரிக்காவின் 14 தாக்குதல்கள் குறிதவறி இருந்தன. இதில் 300க்கும் மேற்பட்ட மலைவாசிகளான பழங்குடி மக்கள் பரிதாபமாகக் கொல்லப்பட்டனர். பில்லாடனின் 3வது மகன் அல்கைடாவின் தற்கொலை படைக்குப் பொறுப்பாக இருந்தவர் என்று கூறப்படுகிறது.

2003 ஆண்டு சாட் ஈரானில் கைது செய்யப்பட்டதாகச் செய்கிகள் வெளியாகி இருந்தன. இவர் கைது செய்யப்பட்டு ஈரானில் வீட்டுக்காவலில் வைக்கப்பட்டிருந்தாரா? அல்லது விடுதலை செய்யப்பட்டிருந்தாரா? என்பது இன்றுவரை மர்மமாகவே இருக்கிறது. பாக்கிஸ்தானில் அமெரிக்கா நடத்திய ஏவுகணைத்தாக்குதல் ஒன்றில் இவர் கொல்லப்பட்டு விட்டதாக அமெரிக்க தேசிய வானொலி 22யூலை 09இல் அறிவித்தது. இதைத் தலிபான் 9யூலை 09இல் உறுதிப்படுத்தி இருந்தது என்பதும் குறிப்பிடத்தக்கது. அமெரிக்கா தனது தரப்பில் உயிச்சேதங்களைத் தவிர்ப்பதற்கு இப்பள்ளத்தாக்குகளில் ஆளில்லா விமானம் மூலம் தாக்கியது. “ட்ரோன்” என்னும் இந்த ஆளில்லா விமானம் 20மணிநேரம் துல்லியமாக நோட்டமிடவும், 400மணிநேர நிகழ்வுகளைத் தொடர்ந்து பதிவிடவும், விரைவாகத் தரவுகளை வழங்கும் திறன் கொண்டது. பில்லேடனைப் பிடிப்பதற்கும் தலிபான்களை அடக்குவதற்கும் தான் தாக்குதல் செய்வதாகவும், இதனால் எந்த ஒரு பொதுமக்களும் பாதிக்கப்படவில்லை என்றும் அமெரிக்கா முதல் மகிந்தாவரை கூறப்பட்டு வரும் ஒரு பசப்பு வார்த்தைதான் இதுவும்.

இவ் எல்லைப் பிரதேசங்களில் 2009இல் 53முறை அமெரிக்கா தாக்கியிருக்கிறது. 2010இல் பாக்கிஸ்தான் உட்பட 118 முறை அமெரிக்கா தாக்கியிருக்கிறது. இதுவரை இப்பழங்குடி மக்கள் 2189பேர் கொல்லப்பட்டிருக்கிறார்கள். மொத்தமாக பாக்கிஸ்தானில் நடத்திய போரில் 20,000 பொதுமக்கள் பலியாகியுள்ளனர். 50,000 பேர்வரை காயமடைந்துள்ளனர். ஆப்கானிஸ்தானில் 1566 அமெரிக்கப் படைகள் மரணத்தைச் சந்தித்தனர். 875 துணை இராணுவத்தினரும் இதில் கொல்லப்பட்டனர். நியூயோக் இரட்டைக் கோபுரத் தாக்குதலுக்குப் பின்னான பின்லேடனின் கொலை வரைக்குமான கடைசி 8வருடங்களில், பயங்கரவாதத்துக்கு எதிரான போருக்காக அமெரிக்கா தனது கூட்டாளி நாடான பாக்கிஸ்தானுக்கு 19.5பில்லியன் டொலர்-களை வழங்கியுள்ளது. இதில் “பாதுகாப்புக்காக” வழங்கப்பட்டது மட்டும் 13.3பில்லியன் டொலர்கள் ஆகும். இதுவே இச்சதுரங்க ஆட்டத்தில் அல்கைடா தொடர்பாக பாக்கிஸ்தானுக்குக் கிடைத்துவந்த அல்ஃபைடா எனப்படும் இலாபமாகும்.

(தொடரும்)


**5000இற்கும் மேற்பட்ட தமிழ்த் தேசியப் போராட்ட ஆவணங்களை தன்னகத்தே உள்ளடக்கிய இணையம் WWW.TAMILARANGAM.NET**

பட்டையங்கள் – பத்திரிகைகள் – பிரசுரங்கள் – நூல்கள் – படங்கள் – ஒலி ஒளிப் பதிவுகள் – அஞ்சல்களென தமிழினத்தின் கடந்தகால வரலாற்று ஆவணங்களை தன்னகத்தே உள்ளடக்கிய தனித்துவமிக்க ஓரிணையம் WWW.TAMILARANGAM.NET. இலங்கையின் இனங்கள் சார்ந்து, மறைக்கப்பட்டு – அழிக்கப்பட்ட எத்தனையோ ஆவணங்களை ஒன்றுதிரட்டி WWW.TAMILARANGAM.NET பொக்கிசமாக – சாட்சியமாக – வரலாற்று அரசியல் கல்வித் தேடலுக்கான பதிவுகளாக ஆவணப்படுத்தி வருகின்றது. அவற்றை நீங்கள் WWW.TAMILARANGAM.NET சென்று காணலாம். தற்போது இத்தளத்தில் 5000இற்கும் மேற்பட்ட ஆவணங்கள் இணைக்கப்பட்டுள்ளன. இதுவரை கிடைக்கப்பெற்ற ஆவணங்களை விடவும், பல்மடங்கு ஆவணங்கள் தங்களில் பலரிடமும் இருக்கலாம். அவற்றினை தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள் இற்கு தந்து உதவுங்கள். தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள் இல் பதிவேற்றியதும், அந்தந்த ஆவணங்கள் உரியோரிடம் பொறுப்பாகக் கையளிக்கப்படும். இந்த வகையில் தங்களிடமுள்ள ஆவணங்களை காலத்தால் அழிந்து போகாது காப்பதற்கும், எங்களின் எதிர்காலச் சமூகத்திற்காக அவற்றை ஆவணமாகப் பதிவுசெய்ய

WWW.TAMILARANGAM.NETஇன் மின்னஞ்சல் முகவரியான TAMILARANGAM@TAMILARANGAM.NET ஐ தொடர்புகொண்டு வழங்குமாறு சமூகப் பொறுப்புடன் தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள் கோருகின்றது.

சமூகப் பற்றுக்கொண்ட ஒவ்வொருவரையும், இத் தளமான WWW.TAMILARANGAM.NETஇற்கு உதவுவதோடு தங்களையும் இணைந்து செயற்படுமாறும் அழைப்பதுடன், இதுவரை ஆவணங்களைத் தந்து உதவியோர்க்கு தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள் தனது மனமார்ந்த நன்றிகளைக் கூறுகின்றது.

WWW.TAMILARANGAM.NET

மின்னஞ்சல்: TAMILARANGAM@TAMILARANGAM.NET

www.tamilarangam.net

# அபலை



-நிலாதரன்

ஐயோ...
ஐயோ..

ஏன் இந்த வாழ்க்கை எனக்கு..?
கடவுளே, இந்த ஊரிலே வந்து வாழ்வதை விட நான் செத்துத் தொலைச்சிருக்கலாம். கேவலம், வெட்கம் விட்டுப் போய் சரணடைந்தேனே.. அப்பவே கழுத்திலிருந்த சயினற்றை அடிச்சு கதையை முடிச்சிருக்க வேணும், மாதினியைப் போல் மித்திராவைப் போல் களத்திலேயே.. உடனேயே உயிரைத் துறந்திருக்க வேண்டும். மற்றவர்களைப் போல் வாழவேண்டும் என்ற எண்ணமும் ஆசையும் எனக்கு வந்திருக்கவே கூடாது.

ஒரு முறையல்ல, இருமுறையல்ல, பல முறைகள் தன் தலையில் அடித்தபடியே கதறிக் கதறி அழுதழுது குளறிக் கொண்டிருக்கிறாள். ஆறதல்படுத்தி களைச்சுப் போய் இனிமேலும் என்னால் முடியாது என்ற நிலையில் பேத்தி பூரணக்கிழவியும் தாங்க முடியாமல் விக்கி விக்கி அழுது புலம்பிக் கொண்டிருக்கின்றாள்.

ஆச்சி, என்னைச் சாகவிடு...
செத்தால் ஒரு நாளைக்குத் தானே...
இங்கே இருந்தால் ஒவ்வொரு நாளும் செத்துக் கொண்டிருக்க வேண்டும். இங்கே வந்து இந்தச் சமூகத்தோடு சேர்ந்து வாழ வேண்டும் என நினைத்தேனே எவ்வளவோ முட்டாள்தனம் என்பதை இப்ப தானே உணர்கிறேன்.

நீ ஒருத்தி மட்டும் தனித்துப் போய்விட்டாயே என நினைத்துத் தான் உன்னைப் பார்க்க ஓடோடி வந்தேன் இல்லாவிடில் என்ற வார்த்தைகள் பூரணம் கிழவியின் காதுகளில் ஒலியாய் வலித்துக் கொண்டிருக்கின்றது.

வடமராட்சி முழுவதையும் இராணுவம் சுற்றிவளைத்து குச்சொழுங்கையில் இருந்து பெரிய தெருக்கள் வரை சென்றிகள் போட்டு வழிமறித்து, வீடு வீடாய்ச் சல்லடையிட்டு, நின்ற இருந்த ஆண்களையெல்லாம் பிடிச்சுக் கொண்டு போய் இராணுவ முகாங்களுக்கென்றும், கொஞ்சப் பேரை கொண்டு போய் அந்த ஊரின் வேதக்கோயிலுக்குப் பக்கத்திலுள்ள வாசிகசாலைக்கு உள்ளேயும் வைச்சு குண்டுவைத்து தகர்த்த போது... இவள் பருவம் அடையாச் சின்னப்பெண். பிறகு ஒருநாள் வானிலிருந்து வீசப்பட்ட குண்டுத் தாக்குதல்களினாலும் எறிகணை வீச்சுக்களினாலும் இனி இருக்க முடியாது என்ற நிலை வந்த போது, கிடந்ததையும் கண்ணில் பட்டதையும் எடுத்துக் கொண்டு அப்பாவுக்குத் தெரிந்த ஒரு ஆள் வீட்டில் போய் நின்றுவிட்டு ஊருக்குத் திரும்பி வந்த வேளை ஊரே சுடுகாடாய் எரிந்திருந்ததைக் கண்டும் ஆங்காங்கே வழிகளில் கிடந்த அனாதைப் பிணங்களைப் பார்த்தும் கதிகலங்கிப் போன நிலையிலும் இனி மேல் தமிழர்கள் இங்கே உயிரோடும் நிம்மதியாகவும் வாழ வேண்டுமென்றால் இனி நானும் இயக்கத்துக் போய் என்னால் இயன்ற பங்களிப்பு உதவிகளையும் செய்யத்தான் வேண்டும் என்ற எண்ணம் இவள் மனதில் வேரோடத் தொடங்கி விட்டது.

எங்களின் சகலவிதமான அடக்கு முறைகளுக்கு எதிரானதும், பெண்களின் சுதந்திரத்தையும், கௌரவத்தையும், பேணிப் பாதுகாக்கக் கூடிய மிகவும் இறுக்கமான கட்டுக்கோப்பான இராணுவப் பலம் பொருந்திய இயக்கம் இது தான் என்றும், தன் மனதிலே நீண்டதொரு வலைப்பின்னலை தனக்குள்ளேயே பின்னிக் கொண்டிருந்தாள்.

உன்ரை கொக்காவுக்கு படி படி என்று எத்தனை தரம் சொல்லிக் கத்திக் குளறியும் ஒரு பிரயோசனமும் இல்லாமல் போய்விட்டது. கடைசியிலே காதல் என்று விழுந்து எல்லாவற்றையும் அழிச்சுப் போட்டு சும்மா வீட்டுக்கே கிடக்கிறாள்.

நீயும் அப்படி வராமல் நல்லாப் படிச்சு யூனிவசிற்றிக்குப் போய் என்ரை ஆசையை நிறைவேற்ற வேண்டும் என்றும், எங்களுக்கத் தான் அந்த நேரத்திலே தொடர்ந்து படிக்க வசதியில்லாமல் போய்விட்டது, நீயாவது படிச்சிடு என்ற தகப்பனின் வார்த்தைகளையும் இவள் மறக்காமல் இல்லை. மீண்டும் மீண்டும் ஏற்பட்ட இராணுவச் சுற்றிவளைப்புக்களாலும் கெடுபிடிகளினாலேயும் பள்ளிக்கூடங்கள் எல்லாம் மூடப்பட்டு ஒன்றுமே



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இயங்காத நிலையில் நாளாந்த சாதாரண வாழ்க்கையும் ஸ்தம்பித்து முடங்கிப் போகவும், தொடர்ந்து அடித்துக் கொண்டிருந்த கெலித் தாக்குதலினாலும் எங்கேயோ இருந்து வந்த செல்தாக்குதலினால் மற்றவர்களோடு சேர்த்து தன் தாய் தகப்பனையும் பறிகொடுத்திருந்தாள். தப்பிப்போன அக்காவோடும் பூரணக்கிழவியோடும் காலத்தைக் கழித்துக் கொண்டிருந்த வேளையில் தோழிகள் கயல்விழியோடும் மாலினியுடனான சினேகம் தான் இவளை இயக்கத்தினுள் கொண்டு போய்ச் சேர்த்தது. ஆறு மாத பயிற்சிக் காலம். சொல்லொணாத் துயரமும், துன்பங்களையும் கஸ்ரங்களையும் தாங்கிய படியே தன் தாய் தந்தையின் நினைவுகளையும் கனவுகளையும் மனதில் நிறுத்தி எரிந்து கருகிப் போன தன் கிராமத்தையும் இறந்து போன தன் ஊர் மக்களையும் எண்ணி எண்ணி தனது பயிற்சிகளை வலுப்படுத்திக் கொண்டாள்.

ஒரு தரமல்ல இரண்டுதரமல்ல எத்தனையோ நேரடித்தாக்குதல்கள்... நேருக்கு நேர் நின்று அடிபடும் தைரியமும் துணிவும் இருந்ததால் உயிரைச் துச்சமென மதித்து எதிரிகளை அடித்து அடித்து விரட்டினாள். அவள் நின்று நடத்திய அனைத்துச் சண்டைகளிலும் வெற்றிக் கனிகளோடே திரும்பி வந்தாள். அனைத்துப் பாசறைக் கூடங்களிலும், சகல படையணிப் பிரிவுகளிலும் இவளது வீரமும் சாகசங்களும் காட்டுத் தீ போல் பரவிக் கொண்டது. தலைவர் வரை கூட இவளது ஆற்றலும் வீரமும் அறியப்பட்டது.

போராடவே பிறந்த பெருமைக்குரியவள் என்பதால் ஒரு குறிப்பிட்ட குறுகிய கால எல்லைக்குள்ளே பெண்கள் படையணியின் பொறுப்புக்கே தலைமை தாங்கும் தகமையையும் பெற்று விட்டாள். ஈழவரலாற்றில் என்றுமே கண்டிராத இரத்தக் கறையையும் எண்ணிலடங்கா இழப்புக்களையும், கணக்கேயற்ற சக தோழர்களையும் பறிகொடுத்த அந்த ஆனையிறவுத் தாக்குதல்களில் முன்னணிப் பொறுப்பில் நின்று வெற்றியைத் தட்டிக் கொண்டு வந்தாலும் வழமைபோல சந்தோசத்தையும் அந்த வெற்றிக் களிப்பையும் அவளால் கொண்டாட முடியவில்லை. ஏற்றுக் கொள்ளவும் முடியாமலிருந்தது.

ஆனையிறவுச்சமர் ஐந்து நாட்களுக்கு மேல் தொடர்ந்து கொண்டிருந்தது. இரண்டு பக்கங்களிலிருந்தும் ஆட்டிலறித் தாக்குதல்களும் பீரங்கி குண்டுகளும் மழை மழையாய்ப் பொழிந்து கொண்டிருந்தது. எங்கிருந்தோ வந்த ஏவுகணைக் குண்டொன்று, இவளருகிலே களமாடிக் கொண்டிருந்த சக தோழி கயலின் மேல்வந்து வீழ்ந்து தலை வேறு முண்டம் வேறாய்ச் சிதற... அவளின் இரத்தம் வந்து முகத்தில் அடித்த போது இவளின் இதயக்குலையும் ஒரு கணம் அறுந்து வீழ்ந்தது போல் உணர்ந்து கொண்டாள். முகத்திலிருந்து வழிந்தோடிய இரத்தம் இவள் வாயில் வந்து உப்புக் கரித்தது. பன்னிரண்டு வருடச் சினேகம். தன் கண் முன்னிலையிலே சிதறுண்டு பிணமாய்க் கிடக்கிறாள் சினேகி. இரண்டு கால்களையும் இழந்து, இரண்டு கைகளும் அறுந்து தொங்கிய நிலையில் நெஞ்செல்லாம் பிழந்து, குற்றுயிராய்க் கிடந்த இன்னொரு சகோதரி அக்கா அக்கா... என்னை... இப்படியே விட்டிட்டுப் போயிடாதேயுங்கோ... நீயே என்னைக் கொன்று விடு.. எனக்கேட்டுக் கெஞ்சிய வேளை தன் இடது பக்கத்திலிருந்த கைத்துப்பாக்கியை எடுத்து ஒரு கையால் தன் கண்களையே பொத்தியபடி அந்தச் சகோதரியின் நெற்றியிலே வெடிவைத்து கருணைக் கொலை செய்து விட்டுத் திரும்பிய இவளுக்கு இந்த வெற்றி வெறும் வெற்றுக் காற்றாகவே தென்பட்டது.

இந்த இழப்புக்கள் பற்றிய உண்மைகளும் சம்பவங்களும் வெளியே வரக்கூடாது என்ற இயக்கக் கட்டுப்பாடுகளும் விதிகளும் அந்த கொடும் போரிலே பலியான பல குழந்தைப் போராளிகளின் இழப்பும் இவளை இன்னொரு பக்கச் சிந்தனைக்கும் இட்டுச் சென்றது.

உலகமே ஒரு கணம் இலங்கையைத் திருப்பிப் பார்க்கும் அளவிற்கு இந்தப் போர் பற்றியும் அதன் சாகசங்கள் பற்றியுமே எங்கும் பேசப்பட்டது. உலகத்திலேயே தலைசிறந்த இராணுவம் இந்த இயக்கம் தான் என்றும் ஒரு போதுமே அழிக்க முடியாத பலம் பொருந்தியவர்கள் என்றும் இந்தப் போர், வரலாற்றில் தன்னைப் பதிவு செய்து கொண்டது. காலங்கள் மெல்ல மெல்ல நகர்ந்து கொண்டிருந்தது.

ஆங்காங்கே சிறுசிறு தாக்குதல்களும் சண்டைகளும் நடைபெற்றுக் கொண்டிருக்க சமாதானப் பேச்சுக்களும் என்றும் சமரசங்கள் என்றும் நாடு அமைதி நிலைக்குத் திரும்பியது. எல்லோரும் எல்லா இடங்களுக்கும் போய் வந்தார்கள். எதுவிதக் கட்டுப்பாடுகளுமின்றி எது வித இடைஞ்சல்களுமின்றி எல்லோரும் நிம்மதியாகவே நடமாடினார்கள். இப்படியிருந்தால் கூடப் பரவாயில்லை என்றும் ஒரு நேரச் சோறாவது தின்னவும், நிம்மதியாக நித்திரை கொள்ளவும் முடிகின்றதே என்று இன்பமடைந்தார்கள். இடிந்து கிடந்த வீடுகளும் உடைந்து போன கோவில்களும் புனருத்தாரணம் செய்யப்பட்டது. கோவில்களின் கொடியேற்றங்களும் கும்பாவிசேகங்களும் திக்குத் திசையெல்லாம் திருவிழாக் கோலம் பூண்டது. நீண்ட கால இடைவெளிக்குப் பின்னர் புலம்பெயர் தமிழர்களைப் போல் இவளும் தன் இருப்பிடம் தேடி விரும்பி வந்தாள். சமூகம் நிறையவே மாறியிருந்தது. இழப்புக்கள் தான் எல்லாவற்றையும் மாற்றியிருந்தது. புதிதாய்த் தோன்றிய கல்வீடுகளும் சுற்றிவைக்கப்பட்டிருந்த மதிற்சுவர்களும் அந்தக் கிராமத்தையே முழுமையாக மாற்றியிருந்தது.

வீட்டுக்கு வீடு நின்ற மோட்டார் சையிக்கிள்களின்

www.tamilarangam.net

வரிசைகள் வெளிநாட்டில் இருந்து காசு வருகின்றது என்பதை காட்டிக்கொடுத்தது. எங்கேயோ இருந்து அகதிகளாக குடிபெயர்ந்து வந்தவர்கள் இப்பவும் அப்படியே இருப்பதைக் கண்டும் ஆச்சரியப்பட்டாள். அக்காவையும் இரண்டு குழந்தைகளையும் கண்டவுடன் அவள் அடைந்த ஆனந்தம் சொல்லிலடங்கா... ஆச்சியைக் கண்டு கட்டித்தழுவிய போது கண்களிலிருந்து நீர் தாரை தாரையாய் வழிந்தோடியது உங்களையெல்லாம் காணாமல் கண் மூடியிருப்பேனோ என்றும் எத்தனை தரம் செத்துச் செத்துப் பிழைத்திருப்பேன் எனச்சொல்லி முடிக்க முன்னரே அக்காவும் வந்து கட்டிப் பிடித்து ஆரத்தழுவிக் கொண்டாள். குழந்தைகள் இரண்டும் இந்தச் செயல்களை விடுப்புப் பார்த்துக் கொண்டு நின்றன.

குண்டுச் சத்தங்களையும் பீரங்கி வேட்டுக்களையும் செல்லடிச் சத்தங்களையும் கேட்டுப் பயந்து போன மக்களுக்கு லவ்ஸ்பீக்கர் சத்தங்களும் மூன்று கால பூசை மணி ஒலிகளும் அவர்கள் மனதிலே பாலை வார்த்தது. எத்தனையோ வருடங்களின் பின்னர் எத்தனையோ மனிதர்கள் நிம்மதியாய் நித்திரை கொண்டெழும்பினார்கள்.

நீண்ட கால இடைவெளிக்குப் பின்னர் தமிழர்களுக்குக் கிடைத்த பொற்காலம் இதுவே என்று எல்லோரும் கதைத்துக் கொண்டார்கள். இப்படியே இன்பமாய் காலம் கழிந்து கொண்டிருந்த வேளையில் ஒப்பந்தங்கள் கிழித்தெறியப்பட்டு பொல்லாப் போன அந்தக் கொடிய போர் மீண்டும் தனது தாண்டவத்தை ஆடத் தொடங்கியது.

எல்லோர் மனதிலும் இருந்த இன்பமும் மகிழ்ச்சியும் பறிக்கப்பட்டு அந்த இதயங்களிலெல்லாம் ஆணிகள் அடித்து இறுக்கப்பட்டது. முன்னெப் போதும் இல்லாதவாறு இராணுவம் பல படைப் பிரிவுகளாய் பிரிக்கப்பட்டு நாலாபக்கமும் புடை சூழ்ந்து தரைவழியாகவும் வான்வழியாகவும் வன்னியில் வந்திறங்கியது.

என்றுமே கொண்டிராத படைப்பலத்துடனும் வெளிநாட்டு உதவிகளுடனும் அதிநவீன புதியரக இராணுவத் தளபாடங்களுடனும் இலங்கை இராணுவம் முன்நோக்கி நகர்ந்து கொண்டிருக்கிறது. வன்னிப்பிரதேசம் எங்கும் கொத்துக் குண்டுகள் மழையாய்ப் பொழிந்தது. பனை மரங்களோடு பச்சை மரங்களெல்லாம் பற்றி எரிந்து கொண்டிருக்கின்றது. எங்கும் ஒரே புகைமண்டலம் எங்கும் மரண ஓலங்கள். எதிலுமே இரத்த வெடில்கள் குஞ்சுகள் குழந்தைகள் கூட வழி தெருவெல்வாம் பிணக் குவியலாய் பரந்து கிடந்தார்கள். தாயை இழந்த குழந்தைகளும் தந்தையைப் பறிகொடுத்த பாலகர்களாயும் தலையை இழந்த முண்டங்களுமாய் ஆங்காங்கே ஆட்களின் அங்கங்களும் தசைகளும் தொங்கித் தூங்கிக் கொண்டிருந்தது. சொல்ல முடியாக் கொடும் துயரம் மெல்ல மெல்ல அரங்கேறிக் கொண்டிருந்தது. உலகம் எங்குமே கண்டிராத அந்த இன அழிப்புப் போராட்டமும் வரலாற்றுத் துரோகமும் மிகவும் இலகுவாக நடைபெற்றுக் கொண்டிருந்தது.

ஒரு மனித இனத்தை இன்னொரு மனித இனம் மிருகங்களைப் போல் வேட்டையாடி கொன்று குவித்தது. இவளோ மற்றப் பொறுப்பாளிகளோ ஏன் மக்களோ ஒருவருமே இப்படி முடியும் என எதிர்பார்க்கவில்லை. பலத்த சண்டையின் மத்தியிலும் பலத்த இழப்புக்கள் மத்தியிலும் கிளிநொச்சி கைப்பற்றப்படுகின்றது. எங்கும் சிங்களக் கொடிகள் ஏற்றப்படுகின்றது.

எத்தனையோ சண்டைகளையும் சமர்களையும சாதித்த இயக்கம் கொஞ்சம் ஈடாடியே போய்விட்டது. என்ன எங்கள் இயக்கமா இப்படி பின்வாங்குகின்றது... அவளால் ஏற்றுக் கொள்ள முடியாமல் இருக்கின்றது. எத்தனை சமர்களைத் தனித்து நின்று சாதித்த இவளாலும் தொடர்ந்து போராட முடியாமல் போனது. இனியும் இங்கே நிற்க முடியாது படைவீரர்கள் எல்லோரும் பாதுகாப்புத் தேடி முல்லைத்தீவு நோக்கி நகர்ந்து கொண்டிருந்தார்கள். இயக்கத்தின் பாதுகாப்புக் கருதியும் வேறு வழியுமின்றி ஏதுமற்ற நாதிகளாக அந்த அப்பாவி மக்கள் கூட்டமும் இவர்களுடன் அள்ளுண்டு சென்று கொண்டிருக்கிறது.

வானிலிருந்து குண்டுத் தாக்குதல்கள் தொடர்ந்த வண்ணமே இருந்தது. நினைக்க முடியாத பேரிழப்புக்கள். பிணக் குவியல்களின் மத்தியிலே ஆளையாள் முந்தியடித்தபடி ஒவ்வொருவரும் தங்கள் உயிரைக் கையில் பிடித்தபடி ஓடிக்கொண்டிருக்கிறார்கள். இராணுவம் நாலாபக்கமும் சூழ்ந்து விட்டது. இனித் தப்பிக்க முடியாது என்ற எண்ணம் போராளிகளிடத்திலும் மக்களிடத்திலும் உருவாகிவிட்டது. பங்கருக்குள் பதுங்கியிருந்த மக்கள் கூட எழுந்து வந்து இந்தக் கூட்டத்துடன் இணைந்து இராணுவ கட்டுப்பாட்டுப் பகுதியை நோக்கி நடக்கத் தொடங்குகின்றார்கள்.

திரும்பிய பக்கமெல்லாம் பிண நாற்றவாடைகளோடு கந்தக வாசமும் காற்றோடு காற்றாய் கலந்து மூக்கைத் துளைத்தது. பீரங்கி வெடிச் சத்தங்களாலும் ஓலக்குரல்களாலும் செவி நிரம்பி வழிந்தது. அழு கையும் விசுப்பல்களோடும் வன்னி நெடு நிலப்பரப்பு சுடுகாடாய் எரிந்து கொண்டிருந்தது. இனிமேல் போராடுவதில் எந்தப் பிரயோசனமும் இல்லை. தகவல்கள் பரிமாறிக் கொள்ளப்படுகின்றது. இக்கட்டான நிலைக்கு எல்லாப் போராளிகளும் வந்துவிட்டார்கள். ஆங்காங்கே சந்தித்த சில போராளிகள் ஒன்றுகூடுகின்றனர். இனிமேல் நாங்கள் எல்லாம் சரணடைவோம் என்று மூத்த போராளிகளில் ஒருவன் விளக்கம் கொடுக்கின்றான். எல்லோரும் சைனைற் குப்பிகளைக் கழற்றி எறிந்துவிட்டு மக்களோடு மக்களாய்ச் சேர்ந்து கொள்ளுங்கள் எனக் கூறிவிட்டு புகையோடு புகையாய் மறைந்து போகிறான்.

இவளால் ஜீரணிக்க முடியாமல் மூச்சு அடைத்துக் கொண்டது. இதையே...யா... நானும்... அவளால் ஏற்றுக் கொள்ள முடியாமல் இருந்தது. ஒவ்வொரு உறுப்பினர்களுக்கும் உயிரை துச்சமென மதித்து நடக்கப் பழக்கிய அமைப்பின் வழிநடத்தலில் வளர்ந்த இவளுக்கு நினைத்துப் பார்க்கவே...கொஞ்சம் கூட முடியாமல் இருந்தது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

எதிரியின் முன்னால் சைனைற் அடியாமல் எப்படிப் போய்ச் சரணடைவது...? எமது எத்தனையோ உறுப்பினர்கள் சைனைற் அடித்துச் செத்ததெல்லாம்... கண்ணை மூடியபடியே தன் கழுத்திலிருந்த சயினற் குப்பியைப் பிடிக்க என்னக்கா இப்படியென்றால் நாங்கள் எல்லோரும் இதை முன்பே செய்திருந்து சரணடைந்திருந்தால் இந்த ஆயிரக்கணக்கான மக்களையும் அநியாயமான இந்த இழப்புக்களையும் காப்பாற்றியிருக்கலாம் அல்லவா..?

கொஞ்ச மாதங்களுக்கு முன்னர் தானே என்னையும் வலுக்கட்டாயமாக இழுத்து வந்து சேர்த்தனீங்கள். சின்னப் பிள்ளையவள் அவளை விட்டிட்டுப் போங்கோ என்று அம்மாவும் அப்பாவும் கத்திக் குளறியபோது என்னையும் விட்டிட்டு வந்திருந்தால்..? என்ற அந்தக் குழந்தைப் போராளி மைதிலியின் கேள்விகள் இவளின் இதயத்தில் ஈட்டி போல் வந்திறங்கியது. அவளை ஒருதரம் இறுக்கி அணைத்துக் கொண்டாள். தன் கழுத்திலிருந்த சைனைற் குப்பியையும் அவள் கழுத்திலிருந்த குப்பியையும் சடக்கென இழுத்து அறுத்து வீசியெறிந்தாள். அவளுடன் தோளோடு தோள் நின்ற மற்றச் சக போராளிகளும் கழற்றி எறிகின்றார்கள். இந்தச் சைனைற் குப்பிகளுக்கு இப்படி ஒரு மதிப்பு வரும் என்று அவள் கனவிலும் கூட நினைத்திருக்கவே இல்லை. எப்போவோ தூக்கிய துப்பாக்கிகளையும் இன்று தான் கீழே இறக்கி வைக்கின்றனர்.

எதிரியிடம் மண்டியிடுவதற்குப் பதிலாக உயிரையே மாய்த்துக் கொள்ளும் மறவர் மரபு அன்றுடன் முற்றுக்கு வந்தது. தனியொரு தமிழ்வீரன் இருக்கும் வரை போராடிக் கொண்டே இருப்பான் என்ற பசப்பு வார்த்தைகள் எல்லாம் பொய்ப்பித்துப் போனது. பல புதிர்களும் கட்டுக்கோப்புகளும் விடைகளே தெரியாத பல கேள்விகளுடனும் வீழ்ந்தே தகர்ந்து சுக்குநூறாய்ப் போனது.

ஆயிரக்கணக்கான மக்கள் சாப்பிடாமலும் தண்ணிகூடக் குடியாமல் காய்ந்து, வற்றிப் போன உடல்களோடு நடைப் பிணங்களாகவும் தொங்கிய தலைகளோடு, குற்ற உணர்ச்சிகளோடும் கொந்தளித்த இதயங்களோடு எங்கே போய் சேருகின்றோம் எனத் தெரியாமல் சிங்கள இராணுவத்தினர் காலடியிலே போய்ச் சரணடைய, அவர்களோடு சேர்ந்து இவளும் சரணடைந்தாள்.

சிறையென்றும் சித்திரவதைகளென்றும் உடலுள.. அனைத்துச் சித்திரவதைகளையும் அனுபவித்தவளாய் புனர் வாழ்வென்றும் புதிய அத்தியாயங்கள் என முடித்து இவள் திரும்பி வந்து தான் இப்போது அழுது கொண்டிருக்கிறாள். தான் இங்கே வந்து வாரங்கள் பல கடந்து விட்டாலும் இன்னமும் தன் சகோதரியும் அத்தானும் வந்து பாத்துவிட்டுப் போகவில்லையே என்ற வலி அவளை வதைத்துக் கொண்டிருக்கின்றது.

முன்பெல்லாம் பின்னாலேயும் முன்னாலேயும் கலைச்சுக் கொண்டிருந்த இவளின் சொந்த மச்சான் ஒருவன், எங்கேயோ வெளிநாட்டிலிருந்து கலியாணம் முடிக்கவென்று வந்தவேளை இவளைப்போய் பார்க்கக் கூடாது என்ற அவனது தாய் தகப்பனின் வார்த்தைகளும் கட்டளைகளும் இவள் காதுக்கெட்டியிருந்தது.

இது எல்லாவற்றையும் விட இவள் இயக்கத்துக்கு போவதற்கு முன்னர் இவள் பாடம் சொல்லிக் கொடுத்த பக்கத்து வீட்டு விஜயா அன்ரியின் மகளைக் கண்டு கதைத்த போது விஜயாவும் அவள் புரிசன் லிங்கமும் சேர்ந்து பிள்ளை இந்தப் பக்கம் வந்து கிந்து... போய்... பழகி.. பிள்ளைகளுடனும் கதைச்சு.. எங்கடை நிம்மதியைக் குலைச்சுப் போடாதே... இனிமேலாவது நாங்கள் கொஞ்சம் சந்தோசமாய் வாழ வேண்டும் என்று ஆசைப்படுகிறோம் என்ற வார்த்தைகள் இவள் இதயத்தையே எரித்துச் சாம்பலாக்கி விட்டது.

இவளின் உறவினர்களும் அயலவர்களும் கூட செய்யக் கூடாத ஒரு பெரும்பாவத்தைச் செய்துவிட்டு வந்திருக்கின்றாள் என்றே பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். நாங்கள் எல்லாம் அப்போது வரும்போது ஏதோ சாகசம் செய்ய வந்தவர்கள் என்றும், நாங்களே தமிழீழத்தின் கண்கள் என்றும் தலையிலே தூக்கிக் கொண்டாடி, சோத்துப் பார்சலும் தந்து தூக்கி விட்ட இதே சமூகம்...? என்னை ஏன் ஒதுக்க வேண்டும்

அரசியலற்ற வெறும் இராணுப்பலமே தான் எல்லாம் என்ற மாயைக்குள் மயங்கி நம்பி வளர்ந்ததால், மக்களை வென்றெடுக்காமல் அவர்களிடமிருந்து அந்நியப்பட்டு விட்டோமா..? தனக்குள்ளேயே கேள்விகளைக் கேட்டுக் கேட்டு பதில்களைத் தேடிக்கொண்டிருந்தாள்.

அந்த அமைதிச் சூழலில் கிழவியின் முனகல் மட்டுமே தெளிவாய்க் கேட்கிறது. மூலையின் ஒதுக்குப்புறமாய் சாய்ந்திருந்தவள் குனிந்த தலையை நிமிர்த்திய வாறு தனது இரண்டு கண்களிலிருந்த வழிந்த நீரைத் துடைத்துக் கொண்டாள்.

ஆச்சி அழாதே... ஏன் நீ அழ வேண்டும். அல்லது நான் அழ வேண்டும். மீண்டும் இந்தச் சமூகத்தில் வாழ்ந்து காட்டுவேன். பாழாய்ப் போன இந்தச் தமிழ்ச் சமூகம் யாருக்கு என்ன நடந்தால் என்ன. தான் மட்டும் நல்லாயிருந்தால் காணும் என்று நினைக்கும் இவர்கள் மத்தியில் எதிர்த்து வாழ்ந்து காட்டுவேன் என எழுந்து இறுமாப்பாய் நின்றாள்.

அவள் நின்ற வேகத்தையும் ஆவேசத்தையும் கண்டு இப்போதாவது இந்தச் சனத்தைப் புரிந்து கொண்டாயே என்று அவளை இறுக அணைத்தக் கொண்டாள் கிழவி.

www.tamilarangam.net



# நிபுணர்குழு அறிக்கை மக்களுக்கு நீதியை பெற்றுத்தருமா?

-அகிலன்.

அமெரிக்கா என்னடா..! ஐ.நா. என்னடா..!
நான் நினைக்கிறதை செய்பவன். எனக்கு யார்
பற்றியும் கவலை இல்லை..,
என கோத்தபாயாவும்..,
மக்களையும் வெள்ளைக் கொடியோடு
வந்தவர்களைக் கொன்றொழித்தது யார்?
பிரபாகரனை நாமா இல்லாதாக்கினோம்?
இதை நேர்கொண்டு கண்டது யார்?
நிபுணர் குழுவிற்கு மாலைக்கண்ணா?
அல்லது மஞ்சள் காமாளையா?
என மகிந்தாவும் குமுறுகின்றார்கள்.

பயங்கரவாதத்தை ஒழிக்கப் பன்நாட்டுப் படையா பயன்பட்டது? இல்லை எம்படைதானே! எம்படைக்கு இவர்கள் துவக்கு தூக்கிக் கொடுத்தார்களா? பேரினவாத இனவெறிப் போதை ஊட்டினார்களா? குண்டுமழை பொழிய விமானம் ஓட்டினார்களா? மக்கள் கண்ட துண்ட முண்டமாய் இரத்த ஆற்றில் மிதக்க, பிணக் காடாக்கியதை என்ன பூதக்கண்ணாடி கொண்டா இவர்கள் பார்த்தார்கள்? மானங்கெட்டவர்கள். இவர்களுக்கொரு நிபுணர்குழு, அதற்கொரு விசாரணை நடாத்தும் அதிகாரமாம்.., யார் கொடுத்தார்கள் இவ்வதிகாரம், யாரிடம் கேட்கின்றார்கள் விசாரணை..? இப்படி கட்டப்பொம்மன் பாணியில் வசனம் பேசுகின்றனர், அழுகி நாறியுள்ள பேரினவாதக் குட்டைக்குள் மூழ்கியுள்ள விமல்வீரவன்ச ஹெலஉறுமய போன்ற இனவெறியாளர்கள். இதற்கு மேலும் வலுச்சேர்க்கும் வகையில் இறுதிக்கட்ட யுத்தத்தில் பொதுமக்கள் யாருமே சாகடிக்கப்படவில்லையென பிள்ளையான், கருணா, டக்ளஸ் என பேரினவாத அன்ட கோ. வினர் கண்கண்ட சாட்சியம் அளிக்கின்றனர். இதைவிட இந்தியா, ரஷ்யா, சீனாவிற்கும் சமகாலத்தின் பிரதான பிரச்சினையும் இதுவே. இதில் இந்த குழப்பம் நிறைந்த அறிக்கைகள், உறுமல்கள், துள்ளல்கள், கொந்தளிப்புக்களுக்கான காரணம்தான் என்ன? ஐ.நா.சபை அப்படி என்னதான் செய்துவிட்டது?

2009-ம் ஆண்டு மே-17 ந் திகதி நந்திக்கடலில் விடுதலைப் புலிகள் சரணடைந்ததைத் தொடர்ந்து, இந்த கொடூரமான போர் முடிவிற்கு வந்தது. இதன் பின்பான ஓராண்டு வரை, ஐ.நா. சபை எந்தவிதமானதொரு நடவடிக்கையும் எடுக்கவில்லை. பல்லாயிரக்கணக்கான அப்பாவி மக்களின் உயிர்களை மனிதாபிமான முகம் கொண்டு பார்க்காமலே இருக்க, மகிந்த கோத்தபாயவின் குடும்ப அரசும், சரத்பொன்சேகாவின் மக்கள் நல இராணுவமும் தொடர்ந்து படுகொலைகளைச்செய்தது. அப்பாவி மக்கள் பயங்கரவாதப் போரென்ற பெயரில் கொடூரமாக கொலை செய்யப்பட்டபோதும், ஐ.நா.சபை வேடிக்கை பார்த்துக்கொண்டுதான் இருந்தது. இறுதிப்போர் அசிங்கமானதொரு முடிவினை எட்டியபோதுதான், பான்கீ மூன் இலங்கைப் பயணத்தை மேற்கொண்டு, இடம்பெயர்ந்த மக்கள் தங்க வைக்கப்பட்டிருந்த முகாம்களை பார்வையிட்டார். அச்சமயம் அவரால் விடப்பட்ட அறிக்கைகள், பத்திரிகைகளுக்கு கொடுத்த பேட்டிகள் கொடூரமாகப் போரைத் தொடுத்த மகிந்த பேரினவாத அரசின் செயற்பாடுகளுக்கு அங்கீகாரம் வழங்குவதாகவே இருந்தது.

செப்ரெம்பர் 2008-ல் வன்னியில் செயற்பட்ட ஐ.நா. அமைப்புகள், மனித உரிமை அமைப்புகள் அனைத்தும் அங்கிருந்து வெளியேற்றப்பட வேண்டுமென்ற இலங்கை அரசின் உத்தரவை ஐ.நா.சபை கைகட்டி, வாய்பொத்தி, எவ்வித எதிர்ப்புமின்றியே ஏற்றுக்கொண்டது. 2009-ம் ஆண்டு மே 17-ந் திகதிக்கு முன்பாக தேசிய, சர்வதேசியத்தின் பிரதான கருத்துருவாக்கம் இலங்கையில் நடைபெற்றது. பயங்கரவாதப் போர் ஒழிப்பென்பது பேரினவாத குறுந்தேசிய இனவெறிப் போராட்டத்தின் கொடூரம் நிறைந்த முடிவிது. சர்வதேச சட்டங்களை நினைவிற் கொண்டோ அல்லது வெளிப்படைத் தன்மையுடனோ





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இலங்கையின் அரசுத் தலைவர்கள் இப்போரை முன்னெடுக்கவில்லை. இதற்காக இத்தலைவர்கள் போர்க்குற்றவாளிகள்தான் என்ற சொல் உச்சாடனத்தைக் கூட எந்தச் சர்வதேசப் பயங்கரவாத ஒழிப்பாளர்களும், ஐ.நா.சபையும் கூட சொல்லவில்லை.

இன்று பயங்கரவாதத்திற்கு சர்வதேச ரீதியாக ஏற்றுக் கொள்ளப்படக்கூடிய எந்தவொரு வரைவிலக்கணமும், ஐக்கிய நாடுகள் சபையிடம் இல்லை. இதற்கு அர்த்த புஸ்டியுள்ள விரிவான சாசனம் ஒன்று வரையப்படுவதை, ஐ.நா.சபையின் கொள்கை வகுப்பாளரான அமெரிக்காவும், ஐரோப்பவும், இதன் ஏவலகளும் தடுத்துக் கொண்டுதான் இருக்கின்றன. *2001*-செப்டெம்பர் *11*-ல் அமெரிக்காவில் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்களுக்குப்பின், பயங்கரவாதத்திற்கு எதிரான உலகளாவிய போரைப் பிரகடனம் செய்த அன்றைய அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ் அமெரிக்காவின் பக்கம் நிற்காதவர்கள் பயங்கரவாதிகளின் பக்கமே நிற்கின்றார்கள் எனக்கூறி ஓர் கோமாளித்தனமான வரைவிலக்கணத்தை வகுத்தார். அமெரிக்க ஏகாதிபத்தியம் வகுத்த இவ்வரைவிலக்கணத்திற்கு ஊடாக, உலகின் ஏகாதிபத்திய எதிர்ப்பாளர்கள், தேசபக்தர்கள், தேசிய விடுதலைப் போராட்டத் தலைவர்கள், புரட்சிகர வெகுஜனத் தலைவர்கள், போராளிகள் அனைவரும் பயங்கர வாதப் பட்டியலில் இடப்படுகின்றனர்.

ஒப்பீட்டு வகையில் இப்படியானதோர் பின்புலத்திலேயே மகிந்தப் பேரினவாதமும் புலிகளுக்கு எதிரான யுத்தத்தை பயங்கரவாத யுத்தமாக முன்னெடுத்தனர். யுத்த முடிவிற்குப் பின் தான், ஐ.நா.சபையின் செயலாளர் நிபுணர் குழு கொண்டு அதை அறிக்கையாக்கியுள்ளனர்.

*3000*சிவிலியன்களை கொன்றொழித்த ஒசாமா பின்லேடனை கொலை செய்வதற்கான மரண தண்டனை தீர்மானத்தை அமெரிக்க ஜனாதிபதி யினால் எடுக்க முடியுமானால் சுமார் ஒரு இலட்சம் சிவிலியன்கள் மற்றும் தலைவர்களை கொன்றொழித்த பிரபாகரன் தலைமையிலான புலிகள் அமைப்புக்கு எதிராக யுத்தம் செய்தது தவறாகுமா..? என மகிந்த மந்திரி ஒருவர் கேட்கின்றார். இக்கேள்விகளுக்குள் உள்ள யதார்த்த உள்ளடக்கம் தான் என்ன?

பின்லேடனை ஒபாமா பயங்கரவாதியாக்கி எப்படி தான் சாகடித்ததாக நாடகமாடுகின்றாரோ, இப்பாணியிலேயே மகிந்தா பிரபாகரனையும், புலிகளையும் சாகடித்ததாக சொல்கின்றார் இந்த மந்திரி. புலிகள் மக்கள்சார் விடுதலை இயக்கமல்ல, பயங்கரவாத இயக்கமென்பதிலும் மாற்றுக் கருத்திற்கு இடமில்லை. ஆனால் புலிகளை உருவாக்கியது எது? சிங்களப் பேரினவாதத்தின் தொடர் இனவாத நடவடிக்கைகளும், அதன் செயற்பாடுகளும் தான், இது இல்லாமல் புலி உருவாகவில்லை. அரை நூற்றாண்டுகால தொடர் இனவாதமும், இன அடக்கு முறைகளும், அதற்கெதிரான நியாயமான போராட்டங்களை கறைபடிந்த கொடிய போர்க்கரம் கொண்டு அடக்கியதன் பரிணாம வளர்ச்சியே, இலங்கையின் இப்போர்க்குற்றச் செயற்பாடும்.

ஈழத்தமிழர்களுக்கு எதிராகத் தொடுக்கப்பட்ட மனிதகுல வரலாற்றில் நடந்த இன்னுமொரு மிகக் கொடூரமான இனப்படுகொலை பற்றியும், மனித உரிமை மீறல்கள் அட்டூழியங்களையும் இந்த அறிக்கை பட்டியலிட்டுள்ளது. போர்க்குற்றங்கள் பற்றிய அனைத்துலகச் சட்டங்களின் படி, இலங்கை அரசே விசாரணையை நடத்திக் குற்றவாளிகளைத் தண்டிக்க வேண்டும் என்றும், வடக்குகிழக்கு மாகாணங்களில் வாழும் தமிழ் மக்களுக்கு அதிகாரப் பகிர்வை வழங்கி, அதன் செயற்பாடுகளைக் கண்காணிக்க சுதந்திரமான பன்னாட்டுக் குழுவை ஐ.நா. பொதுச் செயலாளர் அமைக்க வேண்டும் என்றும் இந்த நிபுணர்குழு பரிந்துரைத்துள்ளது.

என்ன இது..! அதியுன்னத நிபுணத்துவம் கொண்டதானதோர் அறிக்கையை வடித்தெடுத்துள்ளது இந்நிபுணர்குழு. இலங்கையின் அரசியல்சாசன விதிகளின்படி ஜனாதிபதியே சகலதின் படைத்தல் - காத்தல் - அழித்தல் என்பதன் முழுமுதற்கடவுள். இவரன்றி இலங்கை அரசியலில் ஓர் அணுவும் அசையாது. இக்குற்றத்தில் ஈடுபட்டவர் இந்த ஜனாதிபதி. ஆக தன்னைத்தான் விசாரிப்பதா..! இப்பேர்ப்பட்டவரிடம் போய் விசாரணை நடாத்து.., குற்றவாளியைக் கண்டுபிடி.., தண்டனை கொடு என்கின்றார்கள் இந்த நிபுணர்கள்.

வெள்ளைக் கொடியுடன் வந்தவர்களை கொன்றொழி என உத்தரவிட்டவர் கோத்தபாயா, நான் இல்லை. இதை எங்கு வேண்டுமானாலும் சொல்வேன் ஆனால் சொல்லமாட்டேன்..! என்கின்ற இவரின் சமகாலப் பேரினவாதப்பக்தி வேறு. இப்படி சொன்னவரை சிறையில் அடைத்துவிட்டு, தன் தம்பியை குற்றமற்றவரென நீதிவழங்கியுள்ள கொலைஞரிடம் சர்வதேச நிபுணர்கள், தமிழ் மக்களுக்காக நீதிப்பிச்சை கேட்கின்றனர். அதற்கப்பால் மேலும் ஒருபடி சென்று தமிழ் மக்களுக்கு அதிகாரப் பகிர்வு வழங்கலாம், அதைக் கண்காணிக்க சுதந்திர சர்வதேசக் குழுவாம்.

இதை ”மேதினியின் நீதி வழுவா மகிந்த மன்னன்” அனுமதிப்பாராம். குற்றவாளிகளைக் கண்டுபிடிப்பது, தண்டனை வழங்குவது, மகிந்தா..! இவர்கள் சிபார்சில் அவர் வழங்குவதை? கண்காணிக்க சுதந்திர சர்வதேசக்குழு..! இதை இந்நூற்றாண்டின் இன்ரலியன் அரசியலாக கொள்ளலாம்தானே?

இதனால்தான் என்னவோ தெரியவில்லை, இந்நிபுணர்குழு அறிக்கையை நாடுகடந்த கடக்காத



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தமிழ்த்தேசியர்களின் பெரும்பகுதியினர் மகிழ்ச்சிப் பெருவாக்கத்துடன் வரவேற்கின்றனர். இவர்களுக்கு இலங்கை அரசிற்கெதிராக, புலிகளுக்கு சாதகமாக யார் எதைச் சொன்னாலும் இடம் பொருள் ஏவல் என்பதைக்கூட கவனத்தில் கொள்ளாது வரவேற்பர். புளகாங்கிதம் அடைவர். தற்போதைய தமிழக முதல்வர் ஜெயலலிதா அவர்கள் சில மாங்காய் மடையர்களை சந்தோசப்படுத்த பத்திரிகையாளர் சந்திப்பின்போதான தனது பேட்டியில் "ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சாவை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் நிறுத்தி தண்டனை வாங்கிக் கொடுப்பேன்" என்று சொன்னவுடனேயே பட்டாசு கொளுத்தாத குறையில் இருந்து, ஆர்ப்பரித்துக் சந்தோஷம் கொண்டாடிய தமிழ்த்தேசியர்களும் உண்டு. தமிழ்த்தேசியத்தின் தற்போதைய "தேசியத்தலைவி" என விளித்து வாழ்த்தும் உடன் பிறப்புக்களையும், பேரவை சங்கங்களையும் காண்கின்றோம்.

தமிழ்த்தேசியத்தின் கடந்த அரை நூற்றாண்டிற்கு மேற்பட்ட விடுதலை அரசியல் என்பது அன்னிய அரவணைப்பின் பாற்பட்டதே. அதுவன்றிய மக்களைச் சார்ந்து, இதன் சுயத்தின் பாற்பட்டதெதுவும் இல்லை. இதை வட்டுக்கோட்டையில் இருந்து முள்ளிவாய்க்கால் வரை கண்டறியலாம். அத்தோடு வெள்ளைக்கொடி ஏந்தியது ஈறாக, பிரபாகரன் சரணடைந்தால் எல்லாம் சரிவரும் என்று, எல்லாவற்றையும் இல்லாதாக்கியதும், சுயத்தின் அரசியல் பாற்பட்டதல்ல. அந்நியத்தின் அரசியல் ஊட்டத்தின் பாற்பட்டதே.

இன்று எம்முன் உள்ள பிரதான கேள்வி? மகிந்தப் பேரினவாதம் பெரும் கோபக்கனல் கொண்டு கொக்கரிக்கும் அளவிற்கும்.., தமிழ்த்தேசியம் பேரானந்தம் அடைந்திருக்கும் அளவிற்கும்.., ஐ.நா தலைமையிலான நிபுணர்குழு தயாரித்த அறிக்கை, குற்றவாளிகளை கண்டுபிடித்து நீதி தருமத்தின் முன்னால் நிறுத்தி, அதற்கான தக்க தண்டனை பெற்றுத்தருமா? இல்லையென்பது இந்நிபுணர்களுக்கு மாத்திரமல்ல, தேசிய மற்றும் சர்வதேசத்தின் சாதாரண மக்களுக்கே தெரியும்.

பேரினவாத இனவெறிப் போராட்டத்தின் கொடூரம் நிறைந்த இனவழிப்பு நடவடிக்கையில். சர்வதேச சட்டங்களை நினைவிற் கொண்டோ அல்லது வெளிப்படைத் தன்மையுடனோ இலங்கையின் அரசுத்தலைவர்கள் இப்போரை முன்னெடுக்கவில்லை. இதற்காக இத்தலைவர்கள் போர்க் குற்றவாளிகள்தான் என்ற ஒன்றை மௌனமாக சொல்லியுள்ளார்கள். ஊர் உலகறிந்த ஒன்றை மணி கட்டின மாடு சொன்னால் எப்படியோ அப்பாங்கில் இருந்தே இதைக் கொள்ளவேண்டும். இலங்கை அரசியலில் எப்பிரச்சினைகள் வந்தாலும், அதற்கமைக்கப்படும் ஆணைக்குழுக்களுக்கும், ஏனைய குழுக்களுக்கும் பஞ்சமிருக்காது. ஆனால் இவைகள் தோல்விகண்ட வரலாறுகள் தான் உண்டு. மாண்புமிக்கோர்களால் அமைக்கப்படும் ஆணைக் குழுக்களின் வேண்டுகோள்கள் படிமுறையாக உதாசீனம் செய்யப்பட்டு, சில வழக்குகள் ஆக்கப்பட்டு விசாரணைகளுடன் கிடப்பிலேயே கிடக்கின்றன. 90-களின் நடுப்பகுதியில் குமாரதுங்காவின் ஆட்சிக்காலத்தில் பல ஆணைக்குழுக்கள் அமைக்கப்பட்டன. சுயாதீனமான அர்ப்பணிப்புடைய ஆணையாளர்களால், தற்போதைய நிபுணர் குழு போன்று பெறுமதியான அறிக்கைகள் தயாரிக்கப்பட்டும் வெற்றிகரமான விசாரணைகள் எதுவும் நடைபெறவில்லை. அந்நிலையே இந்த போர்குற்ற விசாரணைக்கும் வரும். ஆனால் "வராது" என்னும் நிலை இருந்தால் வரவேற்கத்தக்கதே.

இன்றைய தேச-கால-வர்த்தமான நிலையில் இலங்கை, அமெரிக்க-மேற்கத்தைய நாடுகளுக்கு எதிரான தாகவே உள்ளது. இதற்கு ரஷ்ய-சீன அரவணைப்பே பிரதான காரணி. இது இந்தியாவிற்கும் பெரும் தலையிடி. கடந்தகால மேலாதிக்க இறுக்கப் பிடியிலிருந்த இலங்கையின் தளர்வில் இந்தியா தடுமாறுகிறது. தமது பக்கம் கொஞ்சமாவது இசையாவிட்டால் இறுதிக் கட்டப்போரில் மீறிய மனித உரிமைகளை, போர்க்குற்றங்களை ஆவணப்படுத்தி.., மகிந்த அரசை குற்றவாளியாக்கி.., தண்டனை வழங்குவோமென அமெரிக்க மற்றும் மேற்கு நாடுகள் உலகம் பான்கீன் மூலம் வெள்வெருட்டு விடுகின்றது. இம்முரண்பாடுகளின் சர்வவியாபகத் தன்மைகளுக்கு ஊடாகவே நிபுணர் குழு அறிக்கையை நாம் உற்றுநோக்க வேண்டும். சமகால நிலையில் ஐ.நா.சபை, அமெரிக்கவும், மேற்கும், இந்தியாவும், ரசியாவும், சீனாவும் சிங்களப் பேரினவாதம், குறுந்தமிழ்த் தேசியவாதம், தத்தம் வர்க்க நலன் சார்ந்த சுயநல அரசியலுக்கூடாகவே இதை அரசியலாக்கின்றனர். இதில் அடக்கி ஒடுக்கப்பட்ட மக்கள் நலன்சார்ந்த எதையும், இவைகளுக்கூடாக எதிர்பாக்க முடியாது.

இந்நிலையில் தேசியசர்வதேச மக்களையும், மக்கள்சார் அமைப்புக்களையும் நியாயமான எம்மக்கள் சார்ந்த கோரிக்கைகளின் அடிப்படையில் ஒன்றிணைக்க வேண்டும். தமிழ்மக்கள் மீது நடாத்தப்பட்ட அனைத்து யுத்தமீறல்களையும் விசாரிக்க சுதந்திரமான - சுயாதீனமான சர்வதேச விசாரணை கோரி போராட வேண்டும். சர்வதேச நாடுகளிடமோ, பேரினவாதத்தின் சகதியில் மூழ்காதும் குறுந்தேசிய படுகுழியில் வீழ்ந்துவிடாது தமிழ்மக்கள் மீது நிகழ்த்தப்பட்ட கொடுமைகளுக்கெதிராகவும், அதற்கு நியாயம் கிடைக்கும் வண்ணம் வெகுஜன போராட்ட மார்க்கத்தைக் கொண்டு இதை அணுக வேண்டும். குறுந்தேசிய அரசியலை விடுத்து சிங்கள மக்களுடன் இணைந்து, பேரினவாதத்தை எதிர்த்துப் போராட வேண்டும். *1971, 1989-1990* இல் சிங்கள் மக்கள் மேலான இந்த இனவாத அரசின் படுகொலைக்கான நியாயத்தை நாம் கோருவதன் மூலமும், அதையொத்த தமிழ்மக்கள் படுகொலையை முன்நிறுத்தியும், இலங்கை மக்கள் அனைவரும் ஒன்றிணைந்து போராடுவதன் மூலம்தான் குற்றவாளிகளைத் தண்டிக்க முடியும். இதுவல்லாத எந்த வழிமுறையும், குற்றவாளிகளை பாதுகாக்கின்ற நடைமுறைக்கு ஊடாக, தங்கள் குறுகிய நலன்களை அடையும் அரசியல் பித்தலாட்டங்கள் தான்.

www.tamilarangam.net

# தனியாருக்கான ஓய்வூதியம்

## இலங்கை அரசும் உலக வங்கியும் சேர்ந்து நடத்தும் திருட்டு

பி.இரயாகரன்.

அனைவருக்குமான ஓய்வூதியத்தை மறுத்தும், ஆயுள் பூராவுமான ஓய்வூதியத்தை மறுத்தும், இறந்தால் குடும்ப உறுப்பினர் ஓய்வூதியத்தை தொடர்ந்து பெற முடியாதவாறு மறுத்தும் ஒரு ஓய்வூதியம். இப்படி தனியார் ஓய்வூதிய திட்டத்தின் பெயரில் அவர்கள் கொடுக்க முனைவது, பிச்சைக் காசுதான். இந்த பிச்சைக் காசைக் கொடுக்க, அரசு தன் நிதி எதையும் கொண்டு முன்னெடுக்கவில்லை. மாறாக ஓய்வூதியம் பெற தகுதியானவர்கள் சிறுகசிறுகச் சேர்த்த பணத்தை, அரசு தனதாக்கி அதைக்கொண்டு பிச்சை போடும் திட்டத்தைத்தான் ஓய்வூதியமாக அரசு அறிவிக்கின்றது. உலக வங்கியின் உத்தரவுக்கு அமைவாகத்தான், இதையும் கூட முன்னெடுக்கின்றது.

தேசம், தேசியம், நாட்டின் இறைமை பற்றி பேசும் இலங்கை அரசு, தேசத்தினதும் மக்களினதும் நலனுக்கு எதிரான ஒன்றை திணிக்கின்றது. இலங்கையில் தனியார்துறையில் ஓய்வூதியமில்லாத இன்றைய நிலையில், தமக்கு எதிரான இந்த திட்டத்தை உழைத்து வாழும் மக்கள் எதிர்க்கின்றனர். மக்கள் ஓய்வூதியத்தை பெற விருப்பமின்மையால் இதை எதிர்க்கவில்லை, மாறாக தமக்கு எதிரான அரசின் மக்கள் விரோத சதியை எதிர்க்கின்றனர்.

மே1 இனை அரசுக்கு எதிரான ஜ.நாவின் போர்க்குற்ற ஆவணத்துக்கு எதிரான தினமாக அரசு அறிவித்த போது, அன்றைய தினத்தை அரசின் ஓய்வூதிய திட்டத்துக்கு எதிரான நாளாக தொழிலாளர் அமைப்புகள் பிரகடனம் செய்திருந்தது. இப்படி இலங்கை மக்கள் இரண்டாக இருக்கின்ற நிலையில், உழைக்கும் வர்க்கத்தின் தொடர் ஆர்பாட்டங்கள் பாரிய வன்முறையாக மாறியுள்ளது. பேரினவாதத்தின் இனவழிப்பின் இரண்டாம் ஆண்டு போர் வெற்றி தின கொண்டாட்டங்கள் ஒருபுறம் நடக்க, உழைக்கும் வர்க்கம் அரசுக்கு எதிராக வீதியில் இறங்கி போராடியது. இந்த தொடர் போராட்டத்தில் பலர் காயமடைய, அதன் மேல் துப்பாக்கி சுடுகள் நடத்துகின்றது இந்த அரசு. தொடர் மோதல்கள் அடுத்து தொழிலாளர்கள் கட்டுப்படுத்த விசேட விடுமுறைகளை அறிவிக்கின்றது. போராட்டத்தை முறியடிக்கவும், திசைதிருப்பவும் ஓய்வூதிய திட்டத்தை ஆளும் கட்சி தற்காலிகமாக இடை நிறுத்துவதாக அறிவித்துள்ளது. ஆனால் அரசு இதை அறிவிக்கவில்லை. இப்படியும் மக்களை ஏய்க்கும் சதி. இப்படிப்பட்ட மக்கள் விரோத அரசு, இன முரண்பாட்டை முன்தள்ளியும் இராணுவ மயமாக்கியும், மக்களை அடக்கியாளவே முனைகின்றது.

மக்கள் விரோதமான இந்த ஓய்வூதிய திட்டத்துக்கான சதியை, 19.07.2010 அன்று உலக வங்கியுடன் அனுசரணையுடன் கையெழுத்திட்டது. நாட்டினதும், மக்களினதும் இறைமைக்கு எதிராக, பெருமூலதனத்தை மக்கள் பணத்தில் இருந்து திரட்டி அன்னியருக்கு தாரைவார்க்கவும், அதைக் கொண்டு தனியார் அரசு சொத்துகளை கைப்பற்ற உதவுவதும் தான் ஓய்வூதிய திட்டத்தின் உள்ளடக்கமாகும். அன்னிய முதலீடுகள், மற்றும் தனியார் மயமாக்கலுக்கான மூலதனத்தை அவர்கள் கொண்டு வருவதில்லை, மாறாக மக்கள் பணத்தை கொடுத்து தான் எப்பொழும் நடக்கின்றது. இந்த சதித் திட்டம்தான், இங்கு ஓய்வூதியமாகின்றது. இலங்கையில் மக்களை இன ரீதியாக தமிழ் சிங்கள மக்களாக பிரித்தாளமுனையும் அரசும், அரசுக்கு எதிரான குறுந்தேசிய அரசியலையும் கடந்து, சிங்கள தமிழ் தொழிலாளர்கள், ஊழியர்கள் ஒன்றிணைந்து அரசுக்கு எதிரான போராட்டத்தை நடத்துகின்றனர். அரசு திணிக்கும் ஓய்வூதிய திட்டம் என்பது, உலக வங்கிடன் சேர்ந்து அவர்களின் உழைப்பை திருடும் கொள்ளையாகும். எப்படி எனப் பார்ப்போம்.

1. இந்த ஓய்வூதிய திட்டத்துக்கான எந்த நிதியையும், அரசு வழங்கவில்லை.
2. இந்த ஓய்வூதிய திட்டம் அனைவருக்குமானதல்ல. இதில் ஒரே தொழிலில், ஒரே தொழிற்சாலையில் உள்ளவருக்கு கூட இது கிடையாது.
3. ஆயுள் வரையான ஓய்வூதியமுமல்ல. குடும்ப உறுப்பினருக்கான ஓய்வூதியத்தையும் இது மறுக்கின்றது.
4. ஓய்வுக்கான வயதை 5முதல் 10வருடத்தால் அதிகரிக்க வைக்கின்றது.
5. அவர்களிடம் திருடி ஓய்வூதியமாக மீளக் கொடுக்கவுள்ளது பிச்சைக் காசு.

இப்படி இதில் பல மோசடிகள். இலங்கை உழைக்கும் மக்களின் உழைப்பை உறிஞ்சும் அட்டையாக, உலகவங்கியும் இலங்கை அரசு சேர்ந்து இந்த ஓய்வூதிய திட்டதத்தை நடைமுறைபடுத்த முனைகின்றது.

இந்த ஓய்வூதிய திட்டத்துக்கான முதலீடு என்பது, ஓய்வூதியம் பெறுபவர்களை கொள்ளையிடுதலாகும். இந்த வகையில் அரசு கைவைத்திருப்பது, சிறுகச்சிறுக உழைத்து சேமித்த ஊழியர் சேமலாப நிதி, ஊழியர் நம்பிக்கை நிதியம், ஊழியர் சேவைகால கொடுப்பனவு ஆகியவற்றை அபகரித்து, அதைக்கொண்டு ஓய்வூதியமாக பிச்சை போடுவதாகும். அரசு இதற்கென்று எந்த நிதியையும் வழங்காது. இதனால் அனைவருக்குமான ஓய்வூதியம், ஆயுள் வரையான ஓய்வூதியம் என அனைத்தும் மறுக்கப்படுகின்றது. மொத்தத்தில் ஏமாற்று வேலை. அவர்கள் பணத்தை கொண்டு அவர்களுக்கு ஓய்வூதியம் என்பது, அதைப் பல முனையில் திருடுவதுதான்.

இந்த பணத்தை பற்றி முடிவெடுக்கும் உரிமை கூட அரசுக்கு கிடையாது. இந்த பணம் சிறுகச்சிறுக உழைத்து சேகரித்த மக்களுடைய பணம். 70 வயதுக்கு மேற்பட்ட, ஆனால் உரிமை கோராத இந்த சேமிப்பு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நிதி மீதான உரிமையை அவர்களும், அவர்கள் குடும்பம் இழந்து விடுவதாக இந்த ஓய்வூதிய சட்டம் மூலம் அரசு அறிவித்து அதையும் திருடுகின்றது. இன்று ஊழியர் சேமலாப நிதி மூலமான வருடாந்த இலாபம் மட்டும் 190கோடி ரூபாவாகும். அதை திருடுவது மட்டுமல்ல, இந்த ஓய்வூதியம் நிதிக்கு மாதம்மாதம் தங்கள் சம்பளத்தில் 2சதவீதத்தை செலுத்தவும் சட்டம் கோருகின்றது. சேவைகால கொடுப்பனவு கொடுக்கும் போது 10சதவீதத்தையும், ஊழியர் சேமலாப நிதி கொடுக்கும் போது 2சதவீதத்தை அரசு தனதாக்க சட்டம் கோருகின்றது. ஆனால் அரசு இதற்காக ஒரு சதத்தையும் வழங்கவில்லை.

இப்படிப்பட்ட ஓய்வூதிய திட்டத்தில் கணக்கு இல்லாத, அதற்குரிய பணமில்லாதவர்கள் ஓய்வூதியத்தை பெற முடியாது அல்லது அதைத் தொடர்ந்து பெறமுடியாது. இந்த ஓய்வூதிய கணக்கு என்பது 10க்கு குறையாமல் 19 ஆண்டுக்கு மேலாகவும் இந்த ஓய்வூதிய நிதியத்தில் அங்கத்தவராக இருந்து பணம் செலுத்தியிருக்க வேண்டும். இதன் மூலம் அவர் கடைசியாக பெற்ற வருமானத்தில் 15 முதல் 20 சதவீதத்தை ஓய்வூதியமாக, அதாவது பிச்சையாக பெற முடியும். 29 வருடம் இந்த ஓய்வூதிய நிதியத்தில் அங்கத்தவராக இருந்தால், கடைசியாக பெற்ற வருமானத்தில் 30 சதவீதத்தை ஓய்வூதியமாக அதாவது பிச்சையாக பெற முடியும். அரசு அறிவித்துள்ள இந்த ஓய்வூதிய பிச்சையில், பிச்சைக்காரன் கூட இலங்கையில் வாழமுடியாது. இங்கு பணவீக்கம் முதல் விலையேற்றம் வரை, இந்த பிச்சையை மேலும் மோசடியானதாக்குகின்றது. இந்த பிச்சை பெறும் நிபந்தனை, 10 வருடத்துக்கு குறைவாக நிதியை செலுத்தியவருக்கு கிடையாது. அத்துடன் முதுமையில் பெறும் குறைந்த கூலியை அடிப்படையாக கொண்டு, குறைந்தளவு பிச்சைதான் ஓய்வூதியம் என்பதே அரசின் கொள்கையாகும்.

இதில் உள்ள அடுத்த மோசடி ஓய்வூதியம் பெறுபவர் இறந்தால், அவரின் துணையோ குழந்தைகளோ அதை தொடர்ந்து பெற முடியாது. மாறாக மனைவி மற்றும் 18 வயதுக்கு குறைந்த குழந்தை இருந்தால், எஞ்சிய நிதியத்தில் 60 சதவீத்ததை மொத்தமாக பெறுவர். மிகுதி 40 சதவீதத்தை அரசின் சொத்தாக்கப்படும். அவர்கள் உழைத்துப் பெற்ற பணத்தை அவர்கள் இழப்பர்.

இந்த மக்கள் விரோத சட்டம், ஊழியர் நம்பிக்கை நிதியத்தை மீளப் பெறும் பெண்ணின் வயதான 50யும், ஆணின் வயதான 55யும் இல்லாதாக்குகின்றது. புதிய ஓய்வூதிய பிச்சைத் திட்டதின் கீழ், இருபாலாருக்குமான வயதை 60 வயதாக்கப்பட்டுள்ளது. ஓய்வு பெறும் பெண்ணின் வயது 10வருடமாக அதிகரிக்க, ஆணின் வயது 5வருடங்களால் அதிகரித்துள்ளது. இப்படி ஒட்டுமொத்தமாக உழைத்து வாழ்ந்த மக்களின் உழைப்பை மேலும் சுரண்டவும், ஓய்வின்பின் பிச்சைக்கார, பிச்சைக் காசில் வாழக் கோருவதும் தான் இந்த ஓய்வூதியத் திட்டமாகும்.

உலகவங்கியின் அடியாளாகவே, அரசு செயற்படுகின்றது. இவர்கள் பேசும் தேசம், தேசியம், நாட்டின் இறைமை எல்லாம், இந்த அடியாள் தனத்தின் இருப்பு சார்ந்த மோசடி தான், அரசியல் வெளிபாடுதான். இதை அரசியல் ரீதியாக உணர்ந்து கொள்வதன் மூலம்தான், மக்களுக்கான உண்மையான அரசையும் அவர்களின் நலன்களையும் அடையும் போராட்டத்தை நடத்த முடியும்.

# எப்போதும் வயல் விளைக்க..!

உச்சி மீது குத்தி வீழ்ந்த சூரியன்
சடலமாய்க் கிடந்து தகிக்கின்றான்
எந்தன் காய்ந்த தலை முகட்டில்.

நேற்றுப் பெய்த அடைமழையால்
எங்கு பார்த்தாலும்
பச்சைப் பசேலென்ற பற்றைக் காடுகள்.
ஆனாலும்..,
ஒவ்வொரு பகற் பொழுதும்
மேற்குக் கரையோரம் சாய்ந்து போகையிலே
எந்தன் நெஞ்சுக் கூட்டுள்ளே
சொந்த ஈரல்க்குலை அறுமாற்போல்
அழர்ந்து துடிக்கின்றேன்.

விடம் கொண்ட பிராணியினம்
அடை காத்துப் பொரித்தவையும்
இவ்விடம் எல்லாம் தமதென்று
தனித் தலைதூக்கி
இரு நாவுகளை நீட்டிநீட்டி
எம் பாதச் சுவட்டிடையே
நெளிந்தோடிப் பயங்காட்ட
இப் பற்றைக் காடுகளில்
பெரு ஊனுண்ணிமரம் கொடிகள்
வாழ்ந்த கொலைகாரக் காடுகளாய்
மனதெனதில் காட்சியாகின்றேன்..!?

உந்தக் காட்டுக்குள்
ஏரிழுத்து சூடடித்து
ஏழ்மையான மாடடித்து
அதன் தோலுரித்து தறிதைத்து
அதைக் காலுறையாக்கிய சிலர்
பேயோட்டும் படையணியாய்
இந்தக் காட்டுப் பக்கந்தான்
அடிக்கடி வருவினமாம்..?

இடக்கு முடக்காய்
அவர்களிடம் அகப்பட்ட பலபெயர்கள்
அடி மாடாய்..! அனாதரவாய்..!!
அந்த ஊனுண்ணி வனத்துக்கு
வற்றாத தீனியாகிப் போயினராம்..!?
இந் நிலையெல்லாம் எதற்காக..!!?

வனமழித்து அறு திணை வளர்த்த ஓரினத்தை..!
கடலலைந்து கரையொதுங்கி
பேரினமாகியோரின் தறுதலைகள்
எங்களை ஏறி உழுதனராம் என்பதனால்..!?
எம்மினப் பண்பென்ற பெருமைகளை
சுமையாகப் பினாத்துகின்ற
சுந்தரத் தமிழினமே..!

நீ..!?
உந்தனுக்குள் மனிதமற்றுச் சாதிபார்த்து
உனை அறுக்கும் ஆரியத்து மதங்களோதி
மறு இனத்தை மதிக்காத துவேசங்கொண்டு
குறு நிலமறுக்கும் பிரதேசவாதம் பூண்டு
தமிழ்க் குறுந்தேசிய வர்க்கம் போர்த்து
திரிகின்ற உன் தடம் பார்த்தும்
நான் அஞ்சுகிறேன்..! அஞ்சுகின்றேன்..!!
உனையான ஊனுண்ணி வனமிருக்கும்
எந்தன் நிலமான நிலம் பார்த்து.

ஆனாலும் நான் வருவேன் எனையான தோழருடன்
உந்த ஊனுண்ணி வனமழித்து
ஏர் பூட்டி அதையுழுது
எப்போதும் மக்களுக்காய்
பொதுவான வயல் விளைக்க.

– மாணிக்கம்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# தமிழ் மக்களை அரசியல் அனாதையாக்கும் தமிழ் பாராளுமன்றவாதிகள்...!

இலங்கையில் ஒரேயொரு தேசிய இனமே உண்டு என்று கூறி, ஒடுக்கும் பேரினவாதம் தான், தமிழினவாதத்தை தொடர்ந்து உருவாக்கின்றது. தமிழ் பாராளுமன்றவாதிகளோ, இதை குறுகிய தமிழினவாதமாக மாற்றிவிடுகின்றனர்.

தமிழர் விடுதலைக் கூட்டணியும், மற்றைய பாராளுமன்ற தமிழ்க் கட்சிகளும், குறுகிய தங்கள் தமிழ் இனவாதம் மூலம், மக்களின் பால் அன்பும் ஆதரவும் கொண்டவர்களாக தம்மைக் காட்டிக்கொண்டு மக்களிடையே வெறுப்பை வளர்க்கின்றனர். தம்மையொத்த சிங்கள அரசியல்வாதிகள் தான் இனவாதிகளாக இருக்கின்றனர் என்பதை சொல்லாது, மொத்த இனமக்களையும் எதிரியாக காட்டி தமிழ் இனத்தை ஒடுக்க உதவி செய்கின்றனர். மேற்கு நாடுகள், இந்தியா, சீனா ரசியா வரை சென்று எமது இனப்பிரச்சனையை விளக்கி தீர்வு காண முனைவதாக தம்மைக் காட்டிக் கொள்ளும் இந்த குறுந்தமிழ்தேசியவாதிகள், சிங்கள மக்களிடம் விளக்கி தீர்வு காண்பதற்கான முயற்சி எதையும் செய்வதில்லை. அன்று முதல் இன்று வரை, இதுதான் அதன் குறுந்தேசிய அரசியல். இந்த அரசியல் இனவிரிசலையே, இனங்கள் மத்தியில் தொடர்ந்து திணிக்கின்றது. தமிழர் விடுதலைக் கூட்டணி 1976ஆம் ஆண்டின் வட்டுக்கோட்டைத் தீர்மானமாக தமிழீழம் என்ற கோரிக்கையை முன்வைத்தது. இதன் மூலம் தொடர்ந்து தமிழ் மக்களின் முதுகில் ஏறி சவாரி செய்யப் புறப்பட்டது. இதன் தொடர்ச்சியில் தங்கள் அரசியல் எதிரிகளை அழிக்க உருவாக்கபட்ட கூலிக் குழுதான் "புதிய புலிகள்" என்ற அன்றைய புலிகளின் அமைப்பாகும். இந்த அரசியல் நீட்சியாக, புலிகளின் அரசியலும் தொடர்ந்தது. தமிழர் விடுதலைக் கூட்டணியின் இந்த அரசியலானது குறுகிய இனவாதம் மூலம் தங்கள் பாராளுமன்றக் கதிரைகளை தக்கவைத்து, தமது சொந்த வாழ்வியலை மேம்படுத்தவும் முனைந்தது.

இப்படி செயல்பட்ட தமிழர் விடுதலைக் கூட்டணியினர், தமக்கு வேண்டாத போட்டியான எதிராளிகளை அரசியலிலிருந்து அழிப்பதற்காக, பிரபாகரன் போன்ற இளைஞர்களை பயன்படுத்தினர். இந்த தனிநபர் அழிப்பை, இனவிடுதலைக்கான பாதையாக இந்த பாராளுமன்றவாதிகள் வழிகாட்டிய படிதான், தங்கள் அரசியல் எதிரிகளைக் கொன்றனர். இதைச் செய்த புலிகள் பேரினவாதத்தின் ஒடுக்குமுறையால் விரிவான இராணுவ வடிவத்தைப் பெற்றபோது, கூட்டணியின் சுயநலனுக்கு ஏற்ற கூலிக்குழுவாக அதனால் தொடர்ந்து நீடிக்க முடியவில்லை. அதனுடன் முரண்பட்ட இந்தப் பாராளுமன்றவாதிகள், தம் முந்தைய தீர்மானங்களை தொடர்ச்சியாக கைவிட்டு வந்தனர். த.வி.கூ வினர் பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சியாக இருந்த காலத்தில், தமக்கான சுகபோகங்களைப் பெறுவதில் குறியாக இருந்தனர். தமிழ் மக்கள் ஒரு தேசிய இனம் என்றோ, அவர்கள் சுயநிர்ணயத்துடன் வாழவழி கோலவேண்டும் என்றோ எண்ணிப்பாராது.., அதற்காக முனையாது குறுகிய இனவாதத்தில் மக்களை ஏய்க்க முனைந்தனர். அரசின் இன நடவடிக்கைகளை மக்கள் முன் எதிர்ப்பதுபோல நடித்தபடி, திரை மறைவில் அரசுடன் இணைந்து செயற்படவும் செய்தனர். தேர்தல்கள் நடக்கும்போது இனவாதத்தை தூண்டி மக்களின் நண்பர்களாகவும், மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்க மீண்டும் ஒரு சந்தர்ப்பம் கேட்பவர்களாக வலம் வருகின்றனர்.

தமிழ் மக்களோ.., இவர்களைச் செயற்பாட்டளவிலோ அல்லது மாற்று அரசியல் சக்தியாகவோ அடிப்படையில் ஏற்றுக் கொள்ளாவிட்டாலும், இவர்களுக்கு மாற்றாக ஒரு சக்தியும் இல்லாததால் இவர்களுக்கு வாக்களிக்கின்றனர். ஜனநாயகம் என்றால் வாக்குரிமை என்ற இந்த முதலாளித்துவ அரசுகளின் பிரச்சாரங்களாலும், இதனால் பிரச்சனையை தீர்க்க முடியும் என்று உருவாகும் பிரமையினாலும், தமது வாக்குகளை இந்த இனவாதக் கட்சிகளுக்கே தொடர்ந்து போடுகின்றனர்.

இதற்கு ஏற்றாற் போல் தமிழர் விடுதலைக் கூட்டணியினர், மேடைகளில் வீராவேசமான பாசாங்கு வார்த்தைகளை அள்ளி வீசுவதன் மூலம், மக்களின் வாக்குகளை பெற்று வந்தனர். இவ்வகையில் வாக்குரிமையை பெற்று தமது வாழ்வினை சுக போகமாக அனுபவிக்கவும், தாம் நினைத்த நேரங்களில் வெளிநாட்டுச் சுற்றுப் பயணங்களை மேற்கொள்ளவும், தமிழ் மக்களிடையே மீண்டும் மீண்டும் பொய்யான பிரச்சாரங்களை செய்யலானார்கள். இப்படி அவர்களின் அந்த அரசியல் சுயபோக அரசியலாகியது.

தமிழீழ விடுதலைப் புலிகள் தமது ஆயுதங்கள்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மூலம், மக்களைத் தேர்தலில் பங்குபற்றாது மறித்த போது, மக்கள் மந்தைகளாக வாக்குகளை பதிவு செய்யாமல் ஒதுங்கிக் கொண்டனர். ஆனால் இதே தமிழீழ விடுதலைப் புலிகள், பின்னர் மக்களிடம் ஓட்டுகளை பதிவு செய்யவும் கோரினர். இவ்வாறு மக்களை மீண்டும் மீண்டும் ஏமாற்றவும், தமது சுய இலாபத்திற்காகவும், இந்த வாக்குரிமையை பாவிக்கலானார்கள் இந்த குறுந்தேசிய ஏமாற்றுப் பேர்வழிகள்.

அதேபோல 80களில் ஆயுதப் போராட்டம் மூலமே தமிழீழம் பெற்றுக் கொள்வோம் எனப் புறப்பட்ட பல இயக்கங்களும், பின்பு ஆயுதப் போராட்டத்தை கைவிட்டு, மக்களை ஏமாற்றி பிழைப்பு நடாத்தும் கட்சிகளாக தம்மை மாற்றிக்கொண்டு, மக்களிடையே வாக்குகளைத் தேடி அலைகின்றனர். இதில் பிழைப்பு வாதத்தைவிட, தமிழ் மக்களின் இனச் சுயத்தினை அழிக்கும் கட்சியாக திகழ்கின்ற ஈபிடிபி முதல் பிள்ளையான் வரை தமக்கு அதிகமான வாக்குகள் வேண்டும் என்பதற்காக, மக்களைப் பலவழிகளாலும் பயமுறுத்தி தமக்கே வாக்குகளைப் போடவேண்டும் எனக் கோருகின்றனர்.

இவ்வாறான தமிழ் மக்களின் நலனில் நின்று எந்த கட்சியும் செயற்படுவது கிடையாது. மாறாக தமது சுய நலனில் நின்றே இயங்குகின்றன. வன்னி மக்கள், இடப் பெயர்வால் பாதிக்கப்பட்ட போது, அவர்களுக்கு ஆதரவாக நிற்க முடியாத இந்தக் கட்சிகள், தமிழர்களுக்கான தீர்வின் வரைவினைப் பற்றி, இந்தியா மற்றும் மேற்கத்தைய வல்லரசுகளுடன் பேச்சுவார்த்தை நடத்துகின்றனராம். இவர்கள் என்ன பேச்சு வார்த்தை நடத்தினாலும், தமிழ் மக்களை ஒரு தேசிய இனமாக அங்கீகரிக்கக் கூறி மக்களைச் சார்ந்து நின்று போராட்டத்தை இதுவரை நடத்தியது கிடையாது. ஆங்காங்கே பேசும் போது ஆண்ட பரம்பரை, மீண்டுமொருமுறை ஆள நினைப்பதில் என்ன குறை எனக் கேட்பார்கள். இவ்வாறு அடுக்குமொழியில் பேசும் இவர்கள், தமிழ் மக்கள் இலங்கையின் ஒரு தேசியஇனம் என்றும், அதற்கு சுயநிர்ணய உரிமை உண்டு என்பதையும், வலியுறுத்துவதில்லை. அதை அடையும் வழிமுறைகள் எதையும் முன்வைப்பதில்லை. இந்தியா வரும் என்ற எல்லைக்குள், சுயநிர்ணயத்தை அன்னியனுடன் சேர்ந்து காவு கொடுத்தனர்.

தமிழ் மக்களின் ஏகப்பிரதிநிதியாக தம்மைக் காட்ட முற்படும் இன்றைய தமிழ்க் கூட்டமைப்பு, ஒரு தமிழினத் துரோக அமைப்பு என்பதை யாரும் மறந்திட முடியாது. யுத்த காலத்தில் தம்மையும் தமது நலனையும் மட்டுமே கவனத்தில் கொண்டிருந்த இவர்கள், யுத்தப் பிரதேசத்தில் மக்கள் கொத்துக் கொத்தாக கொல்லப்பட்டபோது என்ன செய்தார்கள். தொடர்ந்தும் தமது பதவிகளில் இருந்த வண்ணம், ஆங்காங்கே அறிக்கை விட்டுக் கொண்டிருந்தனர். இதைவிட தற்போது கூட்டமைப்பாக மாறி அரசாங்கத்துடன் நடத்தும் பேச்சு வார்த்தைகள் பற்றி விபரம் வெளியிடப்பட மாட்டாது என்று வேறு அறிவித்துள்ளார்கள். மக்களுக்கு தாங்கள் என்ன பேசுகின்றோம் என்பதை மறைப்பது என்பது, தொடரும் மக்கள் விரோத செயற்பாடாகும். அரசியல் பேச்சு வார்த்தை உள்ளடக்கங்களை வெளியிட மறுப்பது என்பதும்.., ஒரு இனமக்களை பிரதிநிதித்துவப்படுத்தும்.., இந்த கூட்டமைப்பு தன் சொந்த துரோகத்தை மூடிமறைப்பதாகும். இந்த கூட்டமைப்பினர் என்ன சொன்னாலும், தமிழ் மக்களுக்காக எதையும் செய்யப்போவதில்லை என்பது திண்ணம்.

தமிழ் மக்கள் தமது சுயநிர்ணயத்தை நிறுவ, அதை சிங்கள மக்களிடம் பிரச்சாரம் செய்ய வேண்டும். இதற்காக சிங்களதொழிலாளர் வர்க்கத்துடன் இணைந்து நின்று போராட வேண்டும், தமது சுயநிர்ணயக் கோரிக்கை சிங்கள மக்களுக்கு எதிரானதல்ல என்பதை தெளிவாக எடுத்துரைக்க வேண்டும்.

ஆனால் இந்தப் பாராளுமன்ற குறுந்தேசிய பிழைப்புவாதிகள் இதை செய்யப்போவதில்லை. இதுவல்லாத இந்த அரசியல்வாதிகளின் வாக்குறுதிகளில் இருந்து, மக்களை முதலில் வென்றெடுப்பது அவசியமானது.

குறுந்தேசிய பராளுமன்றமும் சரி, ஆயுதமேந்திய தியாகங்களும் சரி, சுயநிர்ணயத்தை பெற்று தாரது. இந்த குறுந்தேசியம் மூலம் சுயநிர்ணயம் கிடைக்கும் என்பதும் பொய்யாகும். கடந்த 60 வருட குறுந்தேசிய அரசியலால் இது சாத்தியமில்லை என்பது நிரூபணமாகியுள்ள நிலையில், மக்கள் தமக்கான போராட்டம் மூலம் மட்டுமே இதைப்பெற முடியும். பாராளுமன்றவாதிகளை நம்பி நிற்காது, மக்கள் தமக்கான உரிமைக்காக போராட வேண்டும்.

புலிகளின் ஆயுதப் போராட்டம் தோற்றதால், தமிழ்த் தேசிய இனத்திற்கான போராட்டம் தோற்றுவிட்டதாக இல்லை. ஒடுக்குமுறை இருக்கும் வரை, எமது போராட்டமும் தொடர்ந்த வண்ணம் இருக்கும். பாராளுமன்ற அரசியல் என்றும் போலி யானதே. அதற்கு மாறாக ஒரு தேசிய இனமாக அங்கீகரிக்க கோருங்கள்.., அதற்காக போராடுகள்..!

சிங்கள மக்களே.., தமிழ் மக்கள் இனரீதியாக ஒடுக்கப்படுவதை அங்கீகரிக்காதீர்கள் அதற்கு எதிராகப் போராடுங்கள்.
தமிழ் மக்களே..! குறுந்தேசியத்தை
ஆதரிக்காதீர்கள். அதற்கு எதிராக போராடுங்கள்.
சிங்கள மக்களே..! தமிழ் மக்களே..!!
எங்கள் சுயநிர்ணயத்துக்காக குரல் கொடுங்கள்..!
அதற்காக போராடுங்கள்..!

**-சீலன்.**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# பிரபாகரன் உயிருடன் இருப்பதாக கூறி வியாபாரம் செய்த புலிக் குழுவின் தலைவர் நெடியவனின் கைது... !

பிரபாகரன் உயிருடன் இருப்பதாக கூறி பிரபாகரனை அனாதையாக்கி பிழைத்த கூட்டம், அரசியல் அனாதையாக மரணிக்கின்றது. பிரபாகரன் இருப்பதாக கூறி புலியின் சொத்துக்கு சொந்தக்காரகளான புலத்து புலிகளின் தொடர்ச்சியான அதன் சட்டவிரோத செயற்பாடுகளாலும், சொந்த சதிகளாலும் சட்டத்தின் பிடியில் சிக்கி வருகின்றனர். ஆம் சரியாக இரண்டு வருடம் கழித்து, எந்த ஆர்ப்பாட்டமும் இல்லாது, புலிகளின் மற்றொரு மரணம் மிக அமைதியாக நிகழ்கின்றது.

புலத்து தமிழ் மக்களை பிரதிநிதித்துவம் செய்வதாக கூறி புலிச்சொத்தை தமதாக்கிய கூட்டம், குண்டர்களையும் பிழைப்புவாதிகளையும் கொண்டு தம்மை புலத்தில் தக்கவைத்துக் கொண்டது. இன்று அதன் மரணம் கேட்பாரின்றி நடக்கின்றது. எந்த மக்களும் இதற்காக வீதியில் இறங்கிப் போராடவில்லை.

நாடு கடந்த புலிக் குழுவிற்கு போட்டியாக செயல்பட்ட நெடியவன் உட்பட, அந்த குழுவைச் சேர்ந்த பலர் கைதாகி வருகின்றனர். நிதி மோசடிகள், பினாமிச் சொத்துகள் முதல் அதன் சட்ட விரோத மாபியா நடவடிக்கைகள் பல சட்டத்தின் முன் வருகின்றது.

பிரபாகரனின் மரணத்தை மறுத்தும், மரணித்ததாக கூறியவர்களை துரோகியாக கூறியும், புலத்து புலிச்சொத்தை தனதாக்கி அதற்கு தலைமை தாங்கியவன் இந்த நெடியவன். புலிகள் சமாதானம் பேசிய காலத்தில், புலியின் உள்ளிருந்த முரண்பட்ட அதிகார குழுக்களின் ஒரு பிரிவின் துணையுடன் தான், தன் தலைமையை புலத்தில் நிறுவினான். இதன் மூலம் புலிகளின் பல பத்தாயிரம் கோடிப் பணத்தை புலத்தில் கட்டுப்படுத்திய நெடியவன், புலத்தில் புலித் தலைவரானான். 2000 முதல் புலிகள் பல வழிகளில் புலத்தில் சேகரித்த பணத்தை கட்டுப்படுத்தும் அதிகாரத்தை பெற்றுக்கொண்ட நெடியவன், தனது போட்டிக் குழுவான கேபி உட்பட முன்னைய பலரையும் புலிகள் அமைப்பை விட்டு ஒதுக்கினான். இதன் மூலம் தனிப்பெரும் அதிகாரம் கொண்ட தலைவனானான்.

ஏற்கனவே வீங்கி வெம்பிய புலிகள் அமைப்பில் ஒட்டிக்கொண்டு இருந்த பிழைப்புவாதக் கூட்டம், நெடியவனின் அதிகாரத்துடன் முன்னிலைக்கு வந்தனர். அமைதி சமாதானம் பேசிய இந்தக் காலத்தில் தான், புலியை வைத்து பிழைக்கும் புலத்து ஒட்டுண்ணிக் கூட்டம் தலைமையைத் தனதாக்கியது. துதிபாடுவதன் மூலம், புலியை வைத்து பிழைக்கலாம் என்பது பொது அரசியல் நடைமுறையானது. இப்படி புலத்தில் புலியின் சீரழிவு நெடியவனின் வருகையுடன், உயர்ந்த ஒரு அரசியல் மட்டத்தை எட்டியது. அது முற்றாக வியாபாரிகளையும் பிழைப்பு வாதிகளையும் கொண்ட மாபியா அமைப்பாகியது.

பேச்சு வார்த்தையை புலியின் குறுகிய நலனுக்குள் முடக்கியதால் தோல்வி பெற்ற புலிகள், மீண்டும் யுத்தத்தை விரும்பித் தேர்ந்தெடுத்தனர். இது அவர்களின் புதைகுழியானது. அந்த புதை குழியை நோக்கி நெட்டித்தள்ளியது இந்த நெடியவன் தலைமையிலான இந்த புலத்து புலி அணிதான்.

யுத்த முனைக்கு வெளியில், யுத்தத்தின் போக்கை மாற்றியமைக்கும் வலுவை, மேற்கில் நெடியவன் குழுதான் கொண்டு இருந்தது. ஆனால் அதன் கோரிக்கைகள், கோசங்கள், நடைமுறைகள், தீர்வு காணமுனைந்த வழிமுறைகள், சதிகள் என அனைத்தும், வன்னித் தலைமையை புதைகுழிக்கு அழைத்துச்சென்றதுடன், சரணடைய வைத்து இறுதியில் கொன்று குவிக்க உதவியது.

வன்னியில் தவறான மக்கள் விரோத யுத்த தந்திரங்கள் மூலம் யுத்தமுனையில் புலிகள் தமக்கான புதைகுழியை வெட்டியது போல், புலத்தில் வீதிகளில் தவறான கோசங்கள் மூலம் தவறான போராட்டத்தை நடத்தி தங்கள் வன்னித் தலைமையை தம் பங்குக்கு ஒழித்துக்கட்டினர்.

யுத்தத்தின் இறுதிக்காலத்தில் தமது தற்கொலைக்கே நெடியவன் குழு உந்தித்தள்ளுவதையும், தங்கள் வெற்றியாக கருதிய வழிக்கு நெடியவன் தடையாக இருப்பதாக கருதிய வன்னித் தலைமை, தங்கள் கடைசி நாட்களில் மறுபடியும் பழைய தலைமையை முன்னுக்கு கொண்டு வந்தது. இப்படி பழைய தலைமை நெடியவனுக்கு மாற்றாக மீள உயிர்பிக்கப்பட்ட நிலையில், இறுதியில் நெடியவன் குழுவுடனான மோதலுடன் தான் வன்னித்தலைமை சரணடைந்ததன் மூலமும் பலியானது. இப்படி வன்னித்தலைமை தங்கள் அழிவின் ஊடே இரு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

குழுக்களை உருவாக்கியதுடன், தனக்கு பின்னாக தனக்குள் மோதியழியும் அழிவுக்குள் வழிகாட்டியது. புலிகள் தங்கள் அழிவுக்கு முன் பழைய குழுவை உயிர்ப்பித்ததன் மூலம், வன்னித்தலைமை சரணடையும் வரையான அதன் அரசியல் தெரிவுக்கும் சதிகளுக்குள்ளும், இவ் இரு குழுக்களும் தத்தம் பங்குகளுடன் செயலாற்றியது. இவ்விரண்டும் ஏகாதிபத்திய கைக்கூலிகளாக மாறி, அதன் மூலம் புலித்தலைமையைக் காப்பாற்ற முனைவதாக பாசாங்கு செய்துகொண்டு தான், வன்னித் தலைமைக்கு குழிபறித்தனர்.

இப்படி கேபி, நெடியவன் குழு இடையிலான அரசியல் சதிகளும், கவிழ்ப்புகளும் அக்கம் பக்கமாக இணைந்து கொண்டு, வன்னித் தலைமையை ஏமாற்றி சரணடைய வைக்கும் வரை செயல்பட்டது. புலித் தலைமையின் மரணம் உறுதி செய்யப்பட்ட நிலையில் தான், கேபி பிரபாகரன் இறந்துவிட்டதாக அறிவித்தார். இதை மறுத்த நெடியவன் குழு, இந்த அறிவிப்பை கேபியின் துரோகத்தனமாக அறிவித்தபடி, பிரபாகரன் உயிருடன் இருப்பதாக கூறி தனது அதிகாரத்தை தக்கவைக்க முனைந்தார்கள். இப்படி மக்களை முட்டாளாக்கி மேய்க்கும் வியாபாரிகளாக, பிரபாகரனை உயிருடன் இருப்பதாக் கூறினர். வைகோ முதல் நெடுமாறன் வரை இந்த வியாபாரத்தையே செய்கின்றனர். வன்னிப் புலிகள் தங்கள் இறுதிக்காலத்தில் புலத்தின் தலைவராக அறிவித்திருந்த தலைவரை, பிரபாகரன் இறக்கவில்லை என்று கூறி நெடியவன் குழுவால் துரோகியாக்கப்பட்டார்.

கொல்லப்பட்ட பிரபாகரன் இருப்பதாக கூறி, மக்களை முட்டாளாக கருதிய கூட்டம் தான் துரோகி பட்டமும் கொடுத்தது. இப்படி புலத்து புலித் தலைவரை துரோகியாக்கி பிளவை முன்னுக்கு கொண்டு வந்ததன் மூலம், சொத்துகளை பிரித்துக் கொண்டனர். புலியின் அழிவின் ஊடாக புதுப்பிக்கப்பட்ட பழைய தலைமை, உள்ளூர் புலி பினாமி சொத்துரிமையை தமதாக்கி அதிகாரத்துக்கு வர முன்னம் வன்னி தலைமை அழிந்துவிட்டது. இதனால் புலியின் பெரும் சொத்துரிமை நெடியவன் குழுவின் கைகளில் சிக்கியது. இரு குழுக்கள் நீடிப்பதை நியாயப்படுத்த, செத்துப் போன பிரபாகரன் இருப்பதாக கூறிய வேறுபாட்டில் தான் தம்மை தக்கவைத்துக் கொண்டனர்.

இந்த வேறுபாட்டை அடையாளப்படுத்த நாடு கடந்த தமிழீழம், வட்டுக்கோட்டை தீர்மானம் என்று அறிவித்து, வெளிப்படையாக மோதியபடி சதிகளில் இறங்கியது. இந்தப் பின்னணியில் தான் கேபி இலங்கை அரசால் கைது செய்யப்பட்டார். இன்று அவர் அரசின் ஊதுகுழலாக மாற்றப்பட்டுள்ளார். இந்த அணியைச் சேர்ந்த நாடு கடந்த தமிழீழக்காரர்கள் உருத்திரகுமார் தலைமையில், தம்மை சட்டபூர்வமான அமைப்பாக வெளிப்படுத்தி வருகின்றனர். இறுதி 10 ஆண்டுகள் தலைமை தாங்கிய நெடியவன் தலைமையிலான குழுவின் குற்றங்கள், உருத்திரகுமார் குழுவுக்கு பொதுவில் கிடையாது. இதுதான் அவர்களை சட்டபூர்வமாக்கியது. நெடியவன் புலி அமைப்பின் உறுப்பினர் மற்றும் குற்றங்கள் என்ற வகையிலும், இறுதிப் பத்து வருடங்களாக, பல நூறு கோடி பணத்தை சட்டவிரோத பரிவர்த்தனை மற்றும் பினாமி முதலீடுகள் மற்றும் தனிபட்ட திடீர் சொத்துகளாக மாற்றிய குற்றங்கள் முதல் மாபியா செய்யற்பாடுகள் கொண்ட வன்முறை கொண்ட குழுவாக இயங்கி வந்தது. சட்டவிரோத செயல்களை அடிப்படையாக கொண்ட அமைப்பாக நீடித்ததால், கைதுக்கான சூழல் நிலவியது. இதை இரு குழுக்களுக்கும் இடையிலான மோதல் மற்றும் சதி, மிக வேகமாக இதன் அழிவை முன்னுக்கு கொண்டு வந்தது.

நெடியவன் குழு இலங்கையில் குண்டு வெடிப்பை நடத்துவதன் மூலம், புலத்தில் அரசியல் நடத்தவும், தொடர்ந்து பணம் சேகரிக்கவும் முனைந்தது. இரகசியமாக மாபிய சதிக் குழுவாகவும், வன்முறையை அடிப்படையாக கொண்டு தீவிரமாக இயங்கியது.

இந்த நிலையில் நெதர்லாந்து நோர்வே இணைந்து நெடியவனை கைது செய்துள்ளது. இந்தக் கைதுக்கு முன்னும் பின்னும் பலர் தொடர்ந்து ஆங்காங்கே கைது செய்யப்படுவது தொடருகின்றது. பெருமளவிலான சட்டவிரோத புலிச் சொத்துகள், சட்டவிரோத பண பரிமாற்றம் மற்றும் சட்டவிரோத ஆயுத கொள்வனவு சம்பந்தமானதாக இது வெளிப்படுகின்றது. இந்த நிலையில் நெடியவனை இலங்கை அரசு, நாடு கடத்தக் கோருகின்றது.

இப்படி புலிகளின் மற்றொரு மரணம் ஆர்ப்பாட்டமின்றி நிகழ்கின்றது. பிரபாகரன் இருக்கிறார், அவரின் கீழ் இயங்குவதாக கூறிய தலைமையின் கைதும், அதைத் தொடர்ந்து அதன் மரணமும் புலம்பெயர் சமூகத்திடம் எந்த உணர்வையும் ஏற்படுத்திவிடவில்லை. நெடியவன் குழுவின் சொத்துகளை தமதாக கொண்டுள்ள பினாமிகள், இந்தக் கைதை உள்ளார கொண்டாடுவர். மீண்டும் எஞ்சிய சொத்துகள் தனிபட்ட நபர்கள் தமதாக்கும் நாட்களும், மறுபடியும் சொத்துக்கான புதிய மோதல்கள் தவிர்க்க முடியாது.

மறுபக்கத்தில் இந்தக் கைதும், விசாரணையும் ஐரோப்பிய அளவில் விரிவாகும் சாத்தியப்பாடும், பினாமி புலிச்சொத்துகள் ஐரோப்பிய அரசுகளால் பறிமுதல் செய்யும் சாத்தியப்பாடும் இங்கு காணப்படுகின்றது. 2009இல் வன்னி புலித்தலைமை அழிந்தவுடன், புலத்து புலிச் சொத்தை தமிழர் பொது நிதியமாக்க நாம் கோரியதை இங்கு சுட்டிக் காட்டுவது மீள அவசியமானது.

**பி. இரயாகரன்**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

# அவதாரங்கள் இறக்கிறார்கள் கைதாகிறார்கள்...!



- விஜயகுமாரன்.

அய்யாமுத்து பூசையிலே மனமுருகி நின்றான். **"ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி..."** பக்தி என்ற இன்ப வெள்ளத்தில் நீந்திக் கொண்டிருந்த போது அவனிற்கு முன்னாலே நின்றவர்கள் ஏதோ பெரிதாக கதைத்து அவனது சிந்தனையை குழப்பி விட்டார்கள். வகுப்பறையிலே பெடியன்கள் சத்தம் போட்டால் தமிழ் படிப்பிக்கும் நாகலிங்கம் வாத்தியார் சொல்லும் காவோலையிலே நாய் ஒண்ணுக்கு அடிக்கிற மாதிரி சளசளக்காதேயுங்கடா என்பது ஞாபகம் வந்தது. முன்னிற்கு நிக்கிறவர்கள் பூசையையும் கவனிக்காமல் அப்படி என்ன கதைக்கிறான்கள் என்று காதைக் கொடுத்துக் கேட்டான். "இப்ப எவ்வளவு போகுது..!" என்று ஒருத்தன் மற்றவனை கேட்டுக் கொண்டு நின்றான்.

யாழ்ப்பாண முறைப்படி செய்யப்படும் காரம் குணம் மணம் நிறைந்த மிளகாய்த் தூள் போட்ட கறியை ஒவ்வொரு நாளும் போட்டுத் தாக்குவதால் மூலக்கொதி வந்து அல்லல்படும் அய்யாமுத்துவிற்கு இதைக் கேட்டதும் கொதி உச்சந்தலை வரைக்கும் ஏறியது. ஏண்டா இதையெல்லாமாடா அளக்கிறது. அதையும் கதைக்க இடமில்லாமல் கோயிலிலை வைச்சா கதைக்கிறது எண்டு அவங்களைப் பார்த்து கத்தினான். வங்கியிலே வட்டிவீதம் எவ்வளவு போகுது என்டதை கோயிலிலே வைச்சு கேக்கக் கூடாதோ என்று அவங்கள் அய்யாமுத்துவை பார்த்துக் கேட்டார்கள்.

அசடு வழிந்த படி வெளியே வந்த அய்யாமுத்துவை தெருவிலே அறுவைதாசன் வழிமறிச்சான். எலி ஏன் எட்டுமுழ வேட்டி கட்டிக் கொண்டு வருகுது தெரியவில்லையே எண்டு அய்யாமுத்து யோசிச்சுக் கொண்டிருக்க அறுவைதாசன் சிரிச்சுக் கொண்டு "கல்லிலே செய்த கடவுளை கும்பிட்டு விட்டு வாறாய், ஆனா இங்கை ஒரு கண்கண்ட தெய்வம் மண்டையை போட்டு விட்டது..." என்றான்.

இதென்ன சின்னப் பிள்ளைத்தனமா இருக்கு. கடவுள் எப்பிடியடா சாக முடியும் என்று அய்யாமுத்து கோபப்பட்டான்.

அதைத் தான் நானும் கேக்கிறேன். அவதாரம் என்றும் கடவுள் என்றும் தன்னைத் தானே சொல்லி மற்றவர்களையும் சொல்ல வைச்சவர் தீராத நோய் வந்த பக்தர்களின் நோய்களை எல்லாம் தீர்த்து வைத்தவர் என்று விளம்பரப்படுத்தப்பட்டவர் தன்னுடைய வியாதிகளை குணப்படுத்த முடியாமல் செத்துப் போனார்.

அய்யாமுத்து, "புற்றுநோய் வந்த பக்தகோடிகள் எல்லாம் அவதாரத்திட்டை ஆறுதல் தேடி போவான்கள்... அந்த அவதாரத்திற்கே புற்றுநோய் வந்தால் யாரால் ஆறுதல் சொல்ல முடியும்...? மண்டையிலே மயிர் காய்ஞ்சு போன மொட்டையன்கள் எல்லாம் பகவானின் குரோட்டன் தலையைப் பார்த்து சந்தோசப்படுவான்கள். அந்த தலையே மொட்டையாகிப் போனால் யாரால் ஆறுதல் சொல்ல முடியும் என்றான் அறுவைதாசன்." வசனமாடா கதைக்கிறாய், நீ சொல்லுறதை உன்ரை மனிசி கூடக் கேட்காது. அவர் சொல்லுறதை கேக்கிறதிற்கு எத்தனை லட்சம் பக்தர்கள் இருக்கிறார்கள். அவர் எத்தனை ஆயிரம் பேருக்கு சேவை செய்தவர். தனக்கு வந்த காணிக்கைகளை எல்லாம் சனங்களிற்கு உதவி செய்யிறதிற்கு தான் செலவு செய்தார் என்றான் அய்யாமுத்து. தொடங்கிட்டாண்டா தொடங்கிட்டான்... வந்த காசை எல்லாம் செலவழிச்சிருந்தால் எப்பிடி கோடிக்கணக்கான சொத்துகளிற்காக ஆச்சிரமத்திலே சண்டை நடக்குது. கொஞ்ச காலத்திற்கு முதலிலே இருந்த இன்னொரு அவதாரமான ரமணர் வாழுற காலத்திலேயே ஆச்சிரம சொத்துகளிற்காக அவரது சகோதரரின் மகனிற்கும் பக்தர்களிற்கும் சண்டை வந்து வழக்கு வரை போனது. ஆச்சிரமம் பக்தர்களிற்கே சொந்தமானது தனிப்பட்டவர்கள் சொந்தமாக்க முடியாது.

துறவிக்கு உறவு கிடையாது என்று பக்தர்கள் வாதிட்ட போது, ரமணர் நீதிமன்றத்திற்கு வந்து நான் எப்படா துறவி என்று சொன்னேன்..? லூசுப்பயலுகளா என்று சகோதரர் மகன் சார்பாக சாட்சி சொன்னார்.

மக்களின் பணத்தை கொள்ளையடிக்கும் அரசியல்வாதிகள் ஒரு சிறுபங்கை இலவசம் சேவை என்று செய்வது போல பாமரர்கள் படம் பார்ப்பதனால் கோடிக்கணக்கில் சம்பளம் வாங்கும் நடிகர்கள் சில லட்சங்களை மக்களிற்கு தொண்டு செய்கிறோம் என்று படம் காட்டுவது போல தான் இந்த சாமியார்களும் இறால் போட்டு சுறா பிடிக்கிறார்கள். இவர்களின் பக்தர்கள் இரண்டு வகையானவர்கள். ஏழை நடுத்தர மக்கள் ஒரு பிரிவு, அரசியல் அதிகார பண முதலைகள்

www.tamilarangam.net

மறுபிரிவு. ஏழை மக்கள் தமது துன்பங்களிற்கு விடை காண இந்த சாமியார்களை நம்பி ஏமாறுகிறார்கள். அதிகார பணக்கார வர்க்கம் இந்த சாமியார்களின் ஏமாற்றுக்களை தெரிந்து வைத்திருப்பதால் பக்தர்கள் ஆகிறார்கள். ஏனென்றால் மக்களின் பிரச்சனைகளிற்கு உண்மையான தீர்வு இந்த மக்கள் விரோத அரசுகளையும் முதலாளிகளையும் உடைத்தெறிந்து ஓட ஓட விரட்டி அடிப்பது தான். ஆனால் அப்படி ஒரு போராட்டம் வராமல் தடுப்பதற்கு மதங்களும் சாமியார்களும் இந்த மக்கள் விரோதிகளிற்கு துணையாக இருக்கிறார்கள்.

மக்களின் பிரச்சினையை தீர்ப்பதற்கு பதிலாக அதனை சகித்து சமாளித்துக் கொண்டு வாழுங்கள் என்று இவர்கள் போதிக்கிறார்கள். பகவத்கீதையிலே **கள்ளபிரான்** கடமையை மட்டும் செய், பலனை எதிர்பாராதே என்று சொன்னதும் எல்லா சமயங்களும் இந்த உலகத்தில் துன்பங்களை அனுபவிக்கிறவர்கள் மறு உலகான சொர்க்கத்தில் எல்லாம் இன்பமயம் என்று கைகாட்டி விடுவதும் இதற்காகத்தான். சைவசமயத்திலே சாகிறவர்கள் ஒன்று வாங்கினால் ஒன்று இலவசம் என்பது போல சொர்க்கத்திற்கு போகும் அதே நேரம் ரம்பா ஊர்வசியின் நடனத்தையும் போனஸாக கண்டு களிக்கலாம்.

வாழும் கலை என்று வகுப்பு நடத்தும் ரவிசங்கர் என்ற ஆசாமி இலங்கைக்கு போய் கொல்லும் கலையை கொள்கையாக வைத்திருக்கும் அரசுத் தலைவர்களை சந்திக்கிறார். கதவைத் திற காற்று வரட்டும் என்ற நித்தியானந்தா கட்டிலைப் போடு நடிகை வரட்டும் என்று லிங்க வழிபாடு பற்றி வயது வந்தோருக்கான படத்தில் நடிக்கிறார். இலங்கைத் தமிழ் மக்கள் மண்ணோடு மண்ணாக மடிந்த போது கூட நின்று கொன்று விட்டு எதுவும் நடவாதது போல தலையை சொறிந்து கொண்டு இருந்த தாடிவாலா சிங்கு சாயிபாபா செத்ததும் பதறியடித்துக் கொண்டு ஓடுகிறார். தமிழ் நாட்டு ஏழைக் கடல் தொழிலாளர்கள் இலங்கை கடற்படையினரால் கொல்லப்பட்ட போது மத்திய அரசிற்கு கடிதம் அனுப்பி விட்டு கடமையை செய்து விட்டேன் என்று இருந்த கருணாநிதி பாபாவிற்கு பாடைகட்ட மகனை தனி விமானத்தில் அனுப்புகிறார். இப்படி இவர்களின் புனிதக் கூட்டு எப்பொழுதும் மக்களிற்கு எதிராகவே இருக்கும் என்றான் அறுவைதாசன்.

அப்ப ஒரு பலனுமே இல்லாமல் இந்த சாமியார்களை மக்கள் ஏன் நம்புகின்றார்கள் என்று அய்யாமுத்து கேட்டான். மனம் பலவீனமடையும் நேரங்களில் மன ஆறுதல் தேடி இவர்களிடம் போகிறார்கள். இதைத் தான் ஆசான்கள் மார்க்சும் ஏங்கெல்சும் மிகத் தெளிவாக ஒரு கவிதை போல சொல்கிறார்கள். மதம் என்பது அடக்கப்பட்ட மக்களின் ஏக்க பெருமூச்சு.., இதயமற்ற உலகின் இதயம்.., உணர்ச்சியற்ற சூழலின் உணர்ச்சி.., ஆன்மா அற்ற உலகின் ஆன்மா. மதம் மக்களின் அபின்.



ஆம் மதம் மக்களை போதையில் வைத்திருக்கிறது. உண்மையான உலகை அதன் பிரச்சினைகளை மனதில் இருந்து மறைக்கிறது. அந்த பிரச்சினைகளிற்கு எதிராக போராட விடாமல் மயக்கத்தில் வைத்திருக்கிறது. உனக்கு நல்லதொரு உதாரணம் சொல்லுறன். இலங்கையிலே ஆசிரியராக இருந்த ஒருவரோடை கதைச்சு கொண்டிருந்தேன். அப்ப அவர் சொன்னார் தான் சின்ன வயதிலே படிக்க மாட்டாராம், வகுப்பிலே கடைசியாக தான் வருவாராம். தாய் தகப்பனோடை ஒரு முறை பாபாவை பார்க்க புட்டபர்த்திக்கு போயிருந்தாராம்.

பாபா இவரை கண்டதும் இவரின்ரை தலையை தடவி விட்டாராம். அதிலிருந்து இவரிற்கு ஞானம் பிறந்து ஒவ்வொரு பரீட்சையிலும் முதலாவதாக வந்தாராம். நான் சொன்னேன். சாயிபாபா வழக்கமாக பெடியன்களிற்கு வேறே எங்கையோ தான்...?

அது இருக்கட்டும், சாயிபாபா உமக்கு தடவியது போல் எல்லோருக்கும் தடவினால் எல்லோரும் கெட்டிக்காரர் ஆகிவிடலாமே. ஏன் அதனைச் செய்ய வில்லை. வாயினால் லிங்கம் எடுக்கிற விளையாட்டை விட்டுவிட்டு, எல்லோருக்கும் தடவினால் இலங்கை, இந்தியா எல்லாம் கல்வியிலே எங்கேயோ போயிருக்குமே என்றேன்.

என்னை எரிப்பது போலே பார்த்தார். ஆசிரியரான இவரிற்கே பகுத்தறிவு இவ்வளவு தான் இருக்குது எண்டால் மற்றவர்களை யோசிச்சு பார் என்றான் அறுவைதாசன். எனக்கு ஒரு சந்தேகம் என்றான் அய்யாமுத்து.

ஆகா நான் கொடுத்த விளக்கங்களாலே இவன் திருந்தி விட்டான் போலே. எல்லாவற்றையும் கேள்விகேள் என்பதை இவன் விளங்கி விட்டான் என்று சந்தோசப்பட்ட அறுவைதாசன் கேளு கேளு கேட்டுக் கொண்டே இரு என்றான்.

சீரடி பாபாவின் வாரிசு இந்த சாயி பாபா. அப்ப இவரின்ரை வாரிசு யார் என்று அய்யாமுத்து கேட்டான். கிழிஞ்சுது போ. சரி சொல்லுறேன் சாயிபாபா வின் வாரிசு நித்தியானந்தா தான். இரண்டு பேருமே லிங்கத்திலே விருப்பமானவர்கள். ஒரே ஒரு வித்தியாசம் அவர் வாயினால் எடுப்பார். இவர் வாயினால்...!



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# நடையண்ணை மறைஞ்சா...!

சிறி.

அண்ணை கேக்கிறன் எண்டு குறை நினையாதையுங்கோ.
ஏனண்ணை கொஞ்சம் முகம் வாட்டமாய் சோந்துபோய் வாறியள்.

எனக்கு வாற விசருக்கு நீயும் பத்தாக்குறைக்கு என்னிட்டை வாங்கிக் கட்டப்போறாய்.

அப்ப நான் கேட்டது சரியாப் போச்சு ஏதோ கொதிப்பில தான் வீட்டிலயிருந்து நடையண்ணை நடையைக் கட்டியிருக்கிறியள். என்ன ஏதும் விசயம் பாரதூரமே.

சோத்துக்கு வழியில்லாமப் பண்ணியிட்டாங்களடா என்னை, என்ரை மனிசியும் பிள்ளையளும்.அவங்கள் இண்டைக்கு சமைக்கேல்ல.

ஏன் என்ன? வீட்டில நீங்கள் ஏதாவது நெருப்பெடுத்திருப்பியள் மனுசி சமையல்ல ஸ்ரைக் அடிச்சிருப்பா. உங்களுக்கு இப்ப வயிறு பசியில காந்துது அதுதானே விசயம்.

நிப்பாட்டு. நீ அதுக்குள்ள உன்ர கற்பனையை கன்னா பின்னா எண்டு ஓடவிடாதை. அவங்கள் இண்டைக்கு வீட்டில ஏதோ பாபகியூ எண்ட கண்டறியாத ஒண்டை செய்து போட்டு வெந்ததும் வேகாததுமா இறைச்சியை வாட்டி எடுத்து திண்டாங்கள். நாசமாப் போக. எனக்கு ஒரு பருக்கை சோறில்லாமல் தலை சுத்துதடா தம்பி.

அட அதுவே விசயம். இதுக்களுக்கெல்லாம் போய் கோபப்பட்டா எப்பிடியண்ணை. அங்க போய் குந்துங்கோ அந்த மேசையில. டேய் தம்பி பரமசிவம் நடையண்ணைக்கு மேசையைத் துடைச்சுப் போட்டு இலையைப் போடு. கொஞ்சம் றேடியோவில சவுண்டைக் கூட்டி வை. நல்ல பாட்டுகள் போகுது.

“வரலாறுகள் மாறுதடா.. பசியால் பல ஏழைகள் சாவது தேசியமாதனடா.. இனித் தேன்வருமென்பதும் பால் வருமென்பதும் யோசியமானதடா.. சாட்டைகளே இனித் தீர்வுகளென்பது சூசகமானதடா மனிதா மனிதா இனியுன் விழிகள் சிவந்தால் உலகம் விடியும் ...” இண்டைக்கு றேடியோவும் புரட்சி செய்யுது. ஆனா நடையண்ணை தான் குழம்பிப் போய் வந்திருக்கு. காகம் இருக்க பனம்பழம் விழுந்த கதையா நடையண்ணை சொன்ன வீட்டுக்கதையோட, வழமையா அவரைக் கிண்டிக் கிளறுகிற நான் தெளிவடைஞ்சு போனன். அந்தாள் வீட்டில இறைச்சி சுட்ட கதையோட கொதிச்சுப் போய் வந்து சொல்லேக்குள்ளயே எனக்கு போனமுறை சொன்ன சட்டி வந்த கதையின்ர சங்கதி வெளிச்சுப் போச்சு.

தம்பி பரமசிவம் நடையண்ணையைக் கவனி. அப்பளம் மிளகாய் பொரியல் ஊறுகாய் தயிர் மேசையில வை. சாப்பிட்டு முடிச்ச பிறகு நடையண்ணைக்கு நான் தான் கதை சொல்லப் போறன்.. ஆனால் இந்த மனிசன் இதில உள்ள ஒரு நல்ல விசயத்தைப் பாக்காம ஒரு சோத்துப்பருக்கை இல்லையெண்டதுக்காக வீட்டில கோவிச்சுக் கொண்டு வந்திருக்கு. வயசும் போகுது தானே. அட இந்த கண்டறியாத அவசரமான உலகத்தில ஆத்தையோட பிள்ளை பேசுறத்துக்கே நேரம் இல்லையெண்டு சொல்லுதுகள். இதில இருக்கிற ஒரு நல்ல விசயத்தை இவருக்கு நான் ஒருக்கா சொல்லத்தான் வேணும்..

இந்த பாபகியூ எண்டது அந்தப் புராதன காலத்தில மனுசர்கள் வேட்டையாடிய மிருகங்களை நெருப்பில வாட்டி கூட்டமா குழுமியிருந்து பகிர்ந்துண்டு மகிழ்ந்த கூட்டுவாழ்க்கைப் போக்கின் சிறு அடையாளம். இண்டைக்கிருக்கிற அவசர காலத்தில மனுசருக்கு இதுக்காவது நேரம் கிடைச்சா கூழானாலும் கூடிக்குடி எண்டது போல அக்கம் பக்கத்தார் அறிஞ்சவர் தெரிஞ்சவர் கூட்டாளியள் சிநேகிதம் ஒண்டாய்ச் சேர்ந்து வெட்டவெளியில நெருப்புத்தணலச் சுத்திக் கூடியிருந்து குதூகலமாக வாட்டிவதக்கிய இறைச்சியை சுவைத்தபடி பலதையும் பத்தையும் பேசி குழுமமாயிருக்கிறதெண்டது. வருசத்தில ஒருநாளைக்கோ ரெண்டுநாளைக்கோ நடக்கிற விசயம். விவசாய நிலங்கள்ல வேலைசெய்யிற ஒரு கூட்டுழைப்பில் சாப்பாட்டு முறை இண்டைக்கும் இப்படித்தான் இருக்குது. தனிமனிசனாக உடைச்சுப் போட்டு உழைப்பை உறிஞ்சிகிற இந்தக்காலத்தில இந்த மாதிரியெல்லாம் மனிச உறவை வளர்க்கேலாது. ஆடிப்பாட ஏலாது. இப்படிப்பட்ட நிலையில இந்தாள் போய் பாபகியூவைச் சொல்லி மனுசி பிள்ளையோட கோவிச்சுக்கொண்டு இஞ்சை வந்திருக்கு. இறைச்சிய நெருப்பில வாட்டி எடுத்துச் சாப்பிட எப்படி மனிசன் பழகிக் கொண்டான் எண்டதுக்கு அத்தாட்சியாய் இருக்கிறதும் அந்தக்காலத்திய மனிசர் சகமனிசரோடே கலந்து பகிர்ந்து உறவாடி வாழ்ந்ததுக்கும் இந்தக் காலத்துப் பிள்ளையளுக்கு உதாரணமாக சொல்லக்கூடியது பாபகியூக்குள்ள கொஞ்சமாவது ஒளிஞ்சிருக்கிறத நடையண்ணை கண்டு கொள்ளயில்லைப் போல.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

என்னடா தம்பி நான் சாப்பிட்டு முடிச்சிட்டு பார்த்துக்கொண்டேயிருக்கிறன். நீ என்னடா எண்டால் கல்லாப் பெட்டியில இருந்து கொண்டு கப்பல் கவிண்ட மாதிரி யோசிச்சுக் கொண்டிருக்கிறாய்

அண்ணை நீங்கள் தான் என்னை திடுக்கிடப் பண்ணிப் போட்டியள் நீங்கள் தான் காரணம் என்ர யோசினைக்கு.

ஏன்டா அப்பனே சட்டி வந்த கதைக்கோடா இப்பிடி மண்டையை உடைக்கிறாய்.

நீங்கள் அந்த முடிச்சை எப்பவோ அவிட்டுப் போட்டியள். எப்பிடியெண்டு சொல்றுறன் கேளுங்கோ. நீங்கள் வந்தவுடன் பாபகியூ கதை சொன்னனியளெல்லோ. அந்த பாபகியூ எண்டது தகிக்கிற நெருப்புத்தணலுக்கு மேலே ஒரு வட்ட வடிவில இரும்பு கம்பிவலையை போட்டு அதுக்கு மேல இறைச்சியை அடுக்கி வாட்டி வேகப்பண்ணுகிறது தானே. சும்மா தலையை மட்டும் ஆட்டிக்கொண்டிருங்கோ நான் சொல்லிக்கொண்டிருக்கிறன். நெருப்புத் தணலுக்கு மேல ஒன்றோட ஒண்டு படுமாப் போல நேரடியா இறைச்சித் துண்டுகளைப் போட்டு வேகவைச்சா இறைச்சித் துண்டு பொசுங்கி தணல் படுகிற இடமெல்லாம் அது கருகி கரியாப் போயிடும் வேகிறதுக்கிடையில இறைச்சித் துண்டில நெருப்பும் பிடிச்சு விடும். இறைச்சி கருகிச் சாம்பலாகி விடும். தடுக்கிறதுக்கு என்ன வழி? இப்ப இந்த இரும்புக்கம்பி வலை இருக்குது. இரும்போவேற எந்த உலோகங்களோ மனிச வரலாற்றில கண்டுபிடிக்கப்படாத பண்டைய காலத்தில இந்த இடையில இருந்த பொருள் என்ன எண்டது எனக்கு விளங்கிப் போச்சு.

என்னப் பெத்த அப்பனடா எனக்கு போட்ட வெறியும் முறிஞ்சு போச்சு. நீ சொல்லு சொல்லு.

அண்டைக்கு நீங்கள் சொன்ன நெருப்புக் கதையில காடு, மழை, மண் எண்டும் சிலதுகளை நீங்கள் சொன்னனியள் தானே. அந்தக் கதையில மண் நெருப்பில கருகாம அழியாம இருந்ததெண்டு மனிசன் கற்றுக் கொண்டான் எண்டும் சொன்னனியள் தானே. நூலின்ர ஒரு தலைப்பைப் பிடிச்சா மற்றத் தலைப்பைப் பிடிக்க என்னண்ண கஷ்டம். மனிச இன வரலாற்றில இந்த நிமிசம் வரைக்கும் மனிசன் தச்சனாக இருந்திருக்கிறான். அம்பு வில்லு எண்டு கூரிய வேட்டைக்கருவியள எல்லாம் அவன் தன்னுடைய தேவைக்கு தானே தயாரிச்சான். இப்ப தான் அவன் முதன்முதலா குயவனாக சமையற்காரனாக தன் வரலாற்றில கால் பதிக்கிறான். இதுக்கு எவ்வளவோ காலம் போன பிறகாலதான் அவன் கொல்லனாக மாறி இருக்க வேணும். நெருப்புக்கும் இறைச்சிக்கும் இடையில ஏதோ வந்தாகவேணும். இயற்கையிட்டயே மீண்டும் இதுக்கு அவன் விடை தேடினான். மழை பெய்தது. காடுகள் நனைஞ்சது மட்டுமல்ல மண்ணும் நனைஞ்சது. கழிமண் கிடைத்தது. விடையும் கிடைச்சது. கழிமண் நெருப்புக் கொண்டு சுடப்பட்டது. சட்டி சுட்டாகிவிட்டது. தம்பி இப்ப நான் பறையிறன் நீ கேளு. உலோகப்பாத்திரங்களுக்கு முன்தோன்றி மூத்ததான மட்பாண்டங்கள் மனிசன்ர வரலாற்றை மாத்தி வைக்க ஆரம்பிச்சதடா தம்பி. நெருப்பு தான் தீண்டும் பொருட்களை எரிய வைக்கும் இல்லாட்டா இளகப்பண்ணி உருமாற வைக்கும். குளிர வைக்கும் போது அவை நெருங்கி இறுகி வரும் எண்ட இந்த அநுபவ அறிவு கன காலத்துக்குப் பிறகு உலோகங்கள மனிசன் கண்டுபிடிச்ச கையோட அவனுக்கு ஒரு அறிவுப் பொக்கிசமாப் போச்சு. அதோட சமுதாயமும் வேறா மாறிப் போச்சுதடா தம்பி. சமுதாயம் இப்படித்தாண்டா தம்பி மாற்றங்களோட இயங்கிக் கொண்டிருக்கு. இதுக்குள்ள இந்தப் பணம் முளைச்ச பின்னால தான்ரா மனித உறவுகளுக்கும் உழைப்புக்கும் இடையில விரிசல் விழுந்ததடா தம்பி. அண்ணை அதை விடுங்கோ இப்ப நீங்கள் ஏன் கோவிச்சுக் கொண்டு வந்தனியள்.

தம்பி உவன் எங்கட பரமசிவம் ஏன் ஒரு மாதிரி முழிக்கிறான் எண்டத அறிஞ்சு வை அதுக்குப்பிறகு நான் மிச்சத்த பிறகு சொல்லிறன். நடையண்ணை விறுவிறென்று நடையைக் கட்டினார்.

நீ வருவாய் என நான் இருந்தேன் ஏன் மறந்தாய் என நான் அறியேன் - ரேடியோ கண்ணீர் விட்டுக் கொண்டிருந்தது.

## அரபு மக்கள் எப்படிக் கிளர்ந்தனர்...! -கங்கா.

கண்டம்விட்டுக் கண்டம்பாயும் ஏவுகணை
விண்ணிருந்து வேவுபார்க்கும் தொழில்நுட்பம்
பொறிபறக்கும் புலனாய்வு நிறுவனங்கள்
மூச்சடைத்து சொக்கிப்போய் ஏகாதிபத்தியங்கள்

அடக்குமுறைக்குள்ளாகும் மக்களே..!

எழுந்து வாருங்கள் எனச்சொல்கிறார்கள் அரபுமக்கள்
எம் பலத்தின்முன்னே எதிரி ஓட்டம் பிடிக்கிறான்
மக்கள் சக்தியை எள்ளி நகையாடியோர்
தலையை கிள்ளியெறிவோம் எனக்
கிளர்ந்தெழுந்திருக்கிறது
மக்கள்திரளென துனிசியமக்கள்
வெல்லும்பலம்
வீரம்செறிந்த எழுச்சி
பற்றிப்படர்கிறது எகிப்தியதேசத்தில்.

ஆம் இது எங்கள் நேரமல்லவா
அதிகார திமிர் பிடித்தோர்
அமைதி வேடமிடுவர் ஆதரவுக் குரல்கொடுப்பர்
ஐயகோ..!
மக்கள் நலன் பொங்கி நேசக்கரமாய் நீள்கிறது
மதவெறிக்குள் குறுக்கிய அரபுமக்கள்
எப்படிக் கிளர்ந்தனர் என்று அஞ்சி நடுங்கியபடியே
மக்கள் எழுச்சிக்கு மண்டியிடுகிறதாம் அமெரிக்கா..!

ஆம் இது மக்கள் எழுச்சி..!
ஆம் இது மக்கள் யுத்தம்..!
ஆம் இதுதான் புரட்சியின் படை அணி..!
எதிரியின் கோட்டையை சூழும்மக்கள் படை
பீரங்கிகளின் முன்னால் நிமிர்ந்து நிற்கிறார்கள்
ஒடுக்குமுறையாளர்கள் நொருங்கும் காலம்
வெல்க மக்கள் போர்க்குரல்
செல்லும் புதிய ஜனநாயகப்புரட்சியை நோக்கி..!

www.tamilarangam.net

# போர்க்குற்றம் மீது சுதந்திரமான - சுயாதீனமான விசாரணையைக் கோருவோம்

ஏகாதிபத்திய நலனை முன்னிறுத்தியோ, ஏகாதிபத்திய எதிர் முகாமில் நின்றோ, போர்க் குற்றத்தை அரசியலாக்குதல் என்பது மன்னிக்க முடியாத துரோகம். மக்களுக்கு எதிரான பாரிய போர்க் குற்றத்தை குற்றமற்றதாக்க, அதை அரசியல் நீக்கம் செய்வதும் மன்னிக்க முடியாத குற்றமாகும்.

இலங்கை அரசின் இன அழிப்பு யுத்தத்தின் இறுதிக் கட்டத்தில், மனித குலத்திற்கு எதிரான பாதகச் செயல்களில் சிலவற்றை மட்டும் உள்ளடக்கிய அறிக்கை ஒன்றினை, ஐக்கிய நாடுகள் சபை காலம் கடந்து வெளியிட்டுள்ளது.

இவ்வறிக்கை எந்த விதத்திலும் முற்று முழுதானதல்ல. இதன் அடிப்படையில் இலங்கை இனவாத அரசால் நடாத்தப்பட்ட பாலியல் பலாத்காரங்களிலிருந்து கொலைகளென.., சிறுவர் - வயோதிபர் - பெண்கள் - நோயாளிகள் முதலான அனைத்து மனித ஜீவன்கள் மீதும், அரச பயங்கரவாதம் நடாத்திய மனித உரிமை மீறல்களாகும். இவைபற்றி ஒரு சதவீதத்தைக் கூட இவ்வறிக்கை தன்னகத்தே உள்ளடக்கவில்லை.

இறுதி யுத்தத்தின் போது, மனித குலத்திற்கு எதிரான பலவாறான செயல்கள் இலங்கை அரசால் திட்டமிட்டு நிகழ்த்தப்பட்டன என்பதை இந்த அறிக்கை உறுதிப்படுத்துகின்றது. இவ்வறிக்கைசய மூலமாகக் கொண்டு மேலதிக தகவல்களைத் திரட்டவும், சர்வதேச சட்டங்களின் அடிப்படையில் மனித குலத்திற்கு எதிரான பாதகச் செயல்களில் ஈடுபட்டவர்களை இனம் காணவும் இது உதவுகின்றது. இதன் பின்தளத்தில் இயங்கியோருக்கு தண்டனை பெற்றுக் கொடுக்கவும், இது தொடர்பில் சுயாதீனமான சுதந்திரமான விசாரணைகளை கோருவது அவசியமானது. இருந்தபோதும் ஐ.நா.குழுவின் இந்த அறிக்கையின் பிரகாரம், இலங்கை அரசாங்கம் இதற்கான நடவடிக்கையினை எடுக்க வேண்டும் எனவும், அத்துடன் ஐக்கிய நாடுகளின் செயலாளர் நாயகமும் இதற்கான நடவடிக்கையினை முன்னெடுக்க வேண்டும் எனவும் முன்மொழிகின்றது.

மேற்படி அறிக்கையின் முன்மொழிவை நடைமுறைப்படுத்துவது, மேற்கத்திய மற்றும் ஆசிய வல்லாதிக்க நாடுகளின் கையிலேயே தங்கியுள்ளது. இதன் மூலம் இந்த வல்லாதிக்கர்கள் தமது சொந்த நலனின் அடிப்படையில் நின்று, தமது நலன்களுக்கு ஏற்ப இலங்கை அரசை பாவிப்பதற்கான நகலாகவும் இவ்வறிக்கை பார்க்கப்படுகின்றது.

மே 18இன் பின்பு சிங்கள மக்கள் மத்தியில் சற்றுத் தணிந்திருந்த இனவாத உணர்வை, இந்த அறிக்கை மீண்டும் அதிகரிக்க வைத்துள்ளது. கூர்மையடைந்த சமூகச் சீரழிவுகள் மீதான எதிர்ப்புகளையும் - பாசிச அரசுக்கு எதிரான மனோநிலையையும் - வர்க்க ரீதியான விழிப்புணர்வையும் மழுங்கடையச் செய்யும் வண்ணம், இந்தப் பாசிச அரசாலும், இனவாதக் கட்சிகளாலும் இவ்வறிக்கை எதிர்நிலையில் முன்னிறுத்தப்பட்டு அவர்களின் தொடரான பாசிசப் பாவனைக்கு பலமாகின்றது.

இந்நிலையில் தமிழினம் சரியான - மக்கள் நலம் சார்ந்த எந்தவோர் அரசியல் தலைமையையும் கொண்டிராத - அநாதரவான சூழலுக்குள் தள்ளப்பட்டுள்ளது. தமிழ் மக்களை பிரதிநிதித்துவம் கொண்டோரெனச் சொல்பவர்களும், மக்கள் அழிவுக்கு வழிவகுத்த புலிகளின் ஏகாதிபத்திய சார்புக் குறுந்தேசிய அரசியலையே தொடர்கின்றனர். இவர்களைப் போன்ற பலரும் மேற்கத்தைய மற்றும் இந்திய நலன்களுக்காகவும், இலங்கைப் பாசிச அரசின் நலன்கள் சார்ந்துந்தான் தமது அரசியலைத் தொடர்கின்றனர்.

இந்நிலையில் அனைத்து மக்களையும் மக்கள் நலன் சார்ந்த உண்மைச் சக்திகளையும் இணைந்து போராட அழைக்கின்றோம்..!

## சர்வதேச சமூகமே..!

தமிழ் மக்கள் மீது நடாத்தப்பட்ட அனைத்து யுத்த மீறல்களையும் விசாரிக்க சுதந்திரமான சுயாதீனமான சர்வதேச விசாரணையை நடாத்த வழிசெய்யுங்கள்..!

## சிங்கள மக்களே..!!

பேரினவாத சக்திகளின் சதியில் வீழாது, தமிழ்மக்கள் மீது நிகழ்த்தப்பட்ட கொடுமைகளுக்கு எதிராகவும், அவர்களுக்கு நியாயம் கிடைக்கும் வண்ணமும் போராட முன்வாருங்கள்..!

## தமிழ் மக்களே..!!!

தமிழ்க் குறுந்தேசியத்தை நிராகரித்து, சர்வதேச மற்றும் உள்நாட்டு மக்கள் நலன் சார்ந்த சக்திகளுடன் இணைந்து போராட முன்வாருங்கள்..!

புதிய ஜனநாயக மக்கள் முன்னணி
(பிரசுரம் 26.04.2011)

www.ndpfront.com - www.tamilarangam.net- www.ndpfront.net - www.tamilcircle.net - http:kalaiy.blogspot.com

www.tamilarangam.net




## ஈழம் கேட்பது யாருக்காய் சொல்லுங்கள்?

விழித்துப்பார் புலத்தெம் சனமே
கண் முன்னே ஊரைச் சுருட்டிய கும்பல்
ஈழவிடுதலை பேசிய படியே மீள வருகிறது
இந்திய அரசை கெஞ்சிப் பார்ப்போமென
புலி எதிர்ப்பு புத்திமான்களும் புலிப்பினாமிகளும்
டெல்லி நோக்கிய நடையும் பறப்புமாய்
அடுத்த சதிக்கும் கூட்டு அமைக்கப்படுகிறது
வாண வேடிக்கைக்கு திரிமூட்டிய செம்மல்களிடம்
நாடு கடந்து ஈழம் மீளச் சாகடிக்கப்படுகிறது
ஊர்விட்டோடித் தசாப்தங்கள் கடந்தும்
ஆண்ட பரம்பரைக் கதைகளோடு தான்
புலுடாப் பாராளுமன்றம் உடைபாடுகளுடன் கடிபடுகிறது
முப்படையும் கட்டியும்
முள்ளி வாய்க்கால் வரையும் துடித்து மடியென
கப்பலுக்காய் காக்க வைத்தவர்கள் யார்
உடலில் கட்டிய குண்டோடு கரும்புலிகளாய்
வெடித்துச் சிதறிய போராளிகள்
தியாகத்தை தின்று கொழுப்போர் யார்
எங்களிடமும்
உழைப்பைத் தின்னும் அட்டைகள் கிடக்கிறதென்பதை
புலத்துத் தமிழன் உணருதல் நிகழுமோ
எல்லாத் தேசத்திலும் ஏழையிருக்கிறான்
எம் விடுதலைக்கு உதவ தோழமை கொள்வோம்
நந்திக் கடலில் நாம் கற்றுக் கொள்ள வேண்டியது
இந்தியாவை மீறி எதுவும் நடக்காதென்பதல்ல
சொந்த மக்கள் பலத்தோடு
சிங்கள முஸ்லீம் மலையக மக்களையும்
சேர்த்திணைத்தே வெல்லலாம் என்பதே
வாழ்ந்த கூடுகள் குஞ்சுகள் குதறப்பட்டடும்
ஈனத் தமிழனாய் புலத்திலிருந்து
ஈழம் கேட்பது யாருக்காய் சொல்லுங்கள்
வாழும் மக்கள் தீர்மானிக்கட்டும்
கூடி வாழ்தலும் பிரிந்து போதலும் அவர்கள் உரிமை!.

-கங்கா

Munnani is published by NDPF (Org. Number: 996 514 749) and Printed at Set Line Data Ltd, London for NDPF

தமிழ்த் தேசிய ஆவண சுவடிகள்